விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 மாசி 25 திங்கட்கிழமை (09.03.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 080

ராம்கோ
THE RAMCO CEMENTS LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்,உலகதர 14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ

# நாடாளுமன்றைக் கலைக்க கவனம் செலுத்தும் ஜனாதிபதி

## மக்கள் ஆணை பெறத் திட்டமாம்

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழித்து, அரசியலமைப்பில் திருத்தங்களை செய்வதற்காக மக்களின் ஆணையை பெற்றுக் கொள்வதற்காக நாடாளுமன்றத்தை உடனடியாக கலைத்து விட்டு தேர்தலை நடத்துவது குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கவனம் செலுத்தியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

23ஆம் பக்கம் பார்க்க....

## இலங்கை விஜயத்தை உறுதிப்படுத்திய மோடி



(புதுடில்லி)

இலங்கைக்கான தமது விஜயம் குறித்து இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தமது டு விட்டரில் தகவல் வெளியிட்டுள்ளார்.

மொரீசியஸ், சீசெல்ஸ் மற்றும் இலங்கை போன்ற நட்பு நாடுகளுடன் சிறந்த உறவை காணவிரும்புவதாக மோடி குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில் இலங்கையின் விஜயம் குறித்து மோடி சிறப்பாக குறிப்பிட்டுள்ளார். இலங்கைக்கான தமது விஜயம், சந்தோசமானதாகவும் நம்பிக்கையானதாகவும் இருக்கும் என்று அவர் கூறியுள்ளார்.

தாம் இலங்கையின் நாடாளுமன்றத்தில் உரையாற்ற விருப்பதுடன், மகாபோதிக்கும் யாழ்ப்பாண

23ஆம் பக்கம் பார்க்க....



காணாமல் போனவர்கள் தொடர்பிலான உண்மை நிலையினை வெளிப்படுத்தக்கோரி கடந்த மூன்று தினங்களாக யாழ்.நல்லூர் ஆலயச் சுற்றாடலில் நடைபெற்று வந்த கவனயீர்ப்பு உண்ணாவிரதப் போராட்டம் நேற்றையதினம் நிறைவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது இப்போராட்டத்தில் கலந்து கொண்டோரை படத்தில் காணலாம்.

## சீனத் தூதுவர் பிரதமருடன் பேச்சு

(கொழும்பு)

கொழும்புத் துறைமுக நகரத் திட்டத்தை அரசாங்கம் இடைநிறுத்தயுள்ளதையடுத்து சீனத் தூதுவர் யி ஜியான்லியாங் அமைச்சரைச் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.

இதன்போது சீனாவுடன் செய்து கொள்ளப்பட்ட இருதரப்பு உடன்பாடுகள் வர்த்தக உடன்பாடுகளை மதித்து நடக்குமாறும் சீன முதலீட்டாளர்களின் நலன்களைப் பாதுகாக்கு

23ஆம் பக்கம் பார்க்க....

## லண்டன் சென்றடைந்தார் ஜனாதிபதி மைத்திரிபால



(லண்டன்)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தியோக பூர்வ பயணம் மேற்கொண்டு பிரிட்டன் சென்றடைந்தார்.

எலிசபெத் மகாராணியின் தலைமையின் கீழ் இருக்கின்ற பொது

24ஆம் பக்கம் பார்க்க....

## தீ விபத்தில் கடை எரிந்தது

(யாழ்ப்பாணம்)

பலாலி வீதி, உரும்பிராய் பகுதியில் வாகனம் திருத்தும் நிலையம் ஒன்றில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. கடை தீப்பற்றி எரிவதை அவதானித்தவர்கள் உடனடியாக தகவல் தெரிவித்ததையடுத்து அப்பகுதிக்கு விரைந்த தீயணைப்புப் படையினர தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். இந்த விபத்து நேற்று

23ஆம் பக்கம் பார்க்க....

## விமான நிலையத்தின் முன் எதிர்ப்பு பின் கதவால் சென்ற ஜனாதிபதி

(லண்டன்)

ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன நேற்று முன்தினம் பிரித்தானியா ஹீத்ரோ விமான நிலையத்தை சென்றடைந்த போது, அவருக்கு எதிராக சிறியளவிலான எதிர்ப்பு வெளியிடப்பட்டது.

இறுதிப்போரின்போது இடம்பெற்ற போர்க்குற்றங்களுக்கு மைத்திரி பாலவும் பொறுப்புக்கூற வேண்டும் என்ற அடிப்படையிலேயே இந்த ஆர்ப்பாட்டம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

எனினும் இலங்கையின் புதிய அரசாங்கம் தமிழர் விடயத்தில் காத்திரமான பங்காற்றலை மேற்கொண்டு வருகிறது என்ற அடிப்படையில் முன்னரைப் போன்ற புலம்பெயர் தமிழர்கள் இந்தப் போராட்டத்தில்

23ஆம் பக்கம் பார்க்க....

## அரசியல் சட்ட திருத்தத்துக்கு ஆலோசனை கோரும் பிரதமர்

(கொழும்பு)


நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பது சம்பந்தமான சட்டமூலத்திற்கு தேவையான திருத்த யோசனைகளை துரிதமாக வழங்குமாறு பிரதமர் ரணில் விக்ரமசிங்க, அரசியல்கட்சிகளின் தலைவர்களுக்கு அறிவித்துள்ளதாக தெரியவருகிறது.

இந்த திருத்தச் சட்ட மூலம் இம்மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ளதுடன் 68 பக்கங்களை கொண்ட சட்டமூலத்தின் பிரதிகள்

23ஆம் பக்கம் பார்க்க....

## மகிந்த அரசைப் பின்பற்றினால் புதிய அரசும் எமக்குத் தேவையில்லை

### கூட்டமைப்பு தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

காணாமற் போனோர் விடயத்தில் மகிந்த அரசு கூறியதனை போன்று தற்போதைய அரசும் கூறினால் அவ்வாறான அரசு எமக்கு தேவையில்லை என்றும் இவ்வாறு செயற்படுபவர்கள் தமிழர்களின் ஆதரவினை எதிர்பார்க்க முடியாது எனவும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் ஊடகப்பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

ஈழத்தமிழ் இனத்திற்கு நீதி கோரி முள்ளிவாய்க்காலில் இருந்து யாழ் நோக்கிய நடை பவனியும் தொடர் உண்ணாவிரத போராட்டமும் நேற்று நல்லூரில் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. இதில் கலந்து

23ஆம் பக்கம் பார்க்க....

## மைத்திரி இல்லாவிட்டால் மகிந்தவே பிரதமர்?

(கொழும்பு)

பொது தேர்தலில் சுதந்திர கட்சியின் வெற்றிக்காக ஜனாதிபதி பிரசாரம் செய்வது தொடர்பில் அறிவிக்கப்படாவிட்டால் மகிந்த தேர்தலில் வெற்றி பெறுவார் என தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஐக்கிய தேசிய கட்சியின் ஆதரவுடன் தேர்தலில் வெற்றி பெற்ற மைத்திரிபால சிறிசேன பொது தேர்தலில் நடுநிலை வகிப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எனினும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சுதந்திர கட்சியின் பிரதமர் வேட்பாளராக அறிவிக்க வேண்டும் எனும் எண்ணப்பாடும் வளர்ந்து வருகின்றது.

23ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதியின் செயற்பாடுகளுக்கு நீதிமன்றினூடாக கேள்வியெழுப்பலாம்

### புதிய அரசியல் சீர்திருத்தத்தின்படி

(கொழும்பு)

புதிய அரசியல் சீர்த்திருத்தத்தின்படி ஜனாதிபதியின் செயற்பாடுகள் குறித்து நீதிமன்றத்தின் அடிப்படை உரிமை மனுவின் ஊடாக கேள்வி எழுப்ப முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதிக்கான அரசியலமைப்பு தொடர்பான ஆலோசகர்ஜெயம்பதி விக்ரமரத்ன இதனைத் தெரிவித்துள்ளார்.

புதிய அரசியலமைப்பு சீர்திருத்தத்தை நாடாளுமன்றத்தில் முன்னிலை வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஜனாதிபதியின் 100 நாட்கள் வேலைத்திட்டத்தின் கீழ், இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

தற்போதுள்ள அரசியல் அமைப்பின்படி, ஜனாதிபதி ஒருவரின் செயற்பாடுகள் குறித்து கேள்வி எழுபப முடியாது.

ஆனால் 19-ம் திருத்தச் சட்டத்தின் கீழ் இது குறித்து கேள்வி எழுப்ப வழி செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார். (எ-1)

## மீனவர் படகுகளை ஒப்படைத்தது தமிழகம்

(கொழும்பு)

எல்லை தாண்டி வந்து மீன் பிடித்தமை தொடர்பில் இந்தியாவால் பறிமுதல் செய்யப்பட்ட, ஐந்து இலங்கைப் படகுகள், இலங்கை கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இந்திய எல்லைக்குள் மீன்பிடித் ததாக கடந்த வருடம் 5 ஆம் மாதம் 3 படகுகளையும், 9 ஆம் மாதம் இரு படகுகளையும் இந்திய கடலோர காவல் துறையினர் பறிமுதல் செய்து இலங்கை மீனவர்களையும் கைது செய்தது.

மீனவர்கள் சில மாதங்களுக்கு முன்பு தமிழக அரசால் விடுவிக்கப்பட்டனர். ஐந்து படகுகளும் தூத்துக்குடி பழைய துறைமுகம் பகுதியில் நிறுத்தப்பட்டிருந்தன.

கடந்த மாதம் இந்த ஐந்து படகுகளையும் தமிழக அரசு விடுவித்து உத்தரவிட்டது. இதனடிப்படையில் இராமநாதபுரம் சிறப்பு நீதிமன்றம் படகுகளை விடுவிக்க உத்தரவு பிறப்பித்தது.

இதன்படி இலங்கையில் இருந்து 14 மீனவர்கள் படகுகளை கொண்டு செல்ல சென்றனர். இவர்கள் படகுகளை பழுதுபார்த்ததும் 11 மீனவரகள் படகுகளுடன் இந்திய கடலோர காவல்துறையினர் கப்பலில் அழைத்து செல லப்பட்டு, இந்திய கடல் எல்லையில் இலங்கை கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டனர். மூன்று மீனவர்கள் விமானம் மூலம் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (எ-1)

## தொழில் நுட்பபாட மாதிரி வினாத்தாள்

(கொழும்பு)

உயர்தரப் பரீட்சையின் தொழிலநுட்ப பாடத்தின் முன்னோடி வினாத்தாள்கள் மற்றும் மாதிரி வினாக்கள் அடங்கிய நூல் பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோக பூர்வ இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

தொழில் நுட்ப பாடத்திட்டத்திற்கான நூல்களை **www.doenets.lk** என்ற இணையத்தளத்திற்குள் பிரவேசிப்பதன் ஊடாக மாணவர்கள் பார்வையிட முடியுமென பிரதிப் பரீட்சைகள் ஆணையாளர் எஸ்பிரணவதாசன் தெரிவித்தார். (எ-1)

## மகிந்தோதய ஆய்வுகூட திறப்பு பற்றி விசாரணை

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் சமயத்தில் ஒரு வேட்பாளருக்காக பிரசாரம் செய்யும் வகையில் மகிந்தோதய விஞ்ஞான ஆய்வு கூடங்கள் திறக்கப்பட்டமை சம்பந்தமாக விசாரணை நடத்துமாறு தேர்தல் திணைக்களம், இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

விசாரணை நடத்தி தேர்தல் சமயங்களில் ஒரு வேட்பாளருக்கு ஆதரவு வழங்கும் வகையிலான அரச கூட்டங்களில் அதிகாரிகள் கலந்து கொள்ளக் கூடாது என உத்தரவை வழங்குமாறு திணைக்களம், மனித உரிமை ஆணைக் குழுவிடம் கேட்டுள்ளதாக திணைக்களத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தேர்தல் நேரத்தில் அரசியல் வாதிகள் கலந்து கொண்டு மகிந்தோதய விஞ்ஞான ஆய்வுக் கூடங்களை திறந்து வைத்தமை தொடர்பாக இலங்கை ஆசிரியர் சங்கம், தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரியவிடம் முறைப்பாடு செய்திருந்தது.

இதனடிப்படையில், ஆய்வு கூடங்கள் திறக்கப்படுவதை நிறுத்துமாறு தேர்தல் ஆணையாளர் உத்தரவிட்டிருந்தார்.

எதிர்காலத்தில் இப்படியான நிலைமைகள் ஏற்படாதிருக்கும் வழிவகைகள் குறித்து ஆராய்ந்து பார்க்குமாறும் தேர்தல் திணைக்களம், மனித உரிமை ஆணைக் குழுவிடம் கேட்டுள்ளது. (எ-1)

## 23 பொலிஸாருக்கு திடீர் இடமாற்றம்

(கொழும்பு)

பிரதி பொலிஸ்மா அதிபர் நால்வர் உட்பட 23 உயர்மட்ட பொலிஸ உத்தியோகத்தர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் உடன் அமுலுக்கு வரும் வகையில் இடமாற்றம் செயயப்பட்டுள்ளனர் என பதில்பொலிஸ ஊடக பேச்சாளர் ருவன்குணசேகர தெரிவித் துள்ளார்.

தேவையின் காரணமாகவே இந்த இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதேவேளை, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் 18 பேருக்கும், பொலிஸ் அத்தியட்சகர் ஒருவருக்கும் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-1)

## பெற்றோர் பலி பிள்ளைகள் படுகாயம்

(கண்டி)

இரத்தினபுரி, பெல்மதுளை பிரதேசத்தில் இரு முச்சக்கர வண்டிகள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் கணவனும் மனைவி யும் பலியாகியுள்ளனர். இச்சம்பவம் நேற்றுக்காலை இடம பெற்றுள்ளது.

இவர்களது இரு பிள்ளைகள் உட்பட ஏழுபேர் படுகாயமடைந்துள்ள அதேவேளை பிரதேச ஊடகவியலாளர் ஒருவரின் கால் முறிந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.. ...

மோதிக்கொண்ட முச்சக்கர வண்டிகளுடன் மேலும் இரண்டு மோட்டார் சைக்கிள்களும் மோதி விபத்துக்குள்ளானதாக காவத்தைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முச்சக்கரவண்டிகள் மோதிக் கொண்டதில் அவற்றில் ஒன்றில் பயணித்த இரத்தினபுரி மல்வத்த பிரதேசத்தைச் சேர்ந்த கணவனும மனைவியும் பலியாகியுள்ளனர்.

இவர்கள் இருவருக்கும் 30 வயதுகள் என அறியப்பட்டுள்ளது. இரு பிள்ளைகளும் படுகாயமடைந்துள்ளனர். (எ-1)


## பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. உதவி ஆசிரியர்கள் (இருபாலாரும்)
2. அலுவலகச் செய்தியாளர்கள் (இருபாலாரும்) (வெளிக்களம் / உட்களம்)
3. முகாமைத்துவ உதவியாளர்கள் (இருபாலாரும்)
4. கணனி இயக்குநர்கள்

- தமிழ் ரைப்பிங்
- பக்க வடிவமைப்பு
- விளம்பர வடிவமைப்பு

**தகைமை**

க.பொ.த உயர்தரத்தில் மூன்று பாடங்களில் சித்தி துறைசார் பயிற்சியும் உள்ளவர்கள் தமது தொலைபேசி இலக்கம், முகவரி உள்ளிட்ட தான சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பப்படிவங்களை எதிர் வரும் 16.03.2015ஆம் திகதிக்கு முன்னதாக

வலம்புரி இல. 3, 2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்

யாழ் நகரைஅணமித்தவர்கள் விரும்பத்தக்கது.


## மரண அறிவித்தல்

### மயில்வாகனம் மனோராஜ்



யாழ்.கைதடி நுணாவிலைப் பிறப்பிடமாகவும் 190-ம் கட்டை நுணாவில் மேற்கை வசிப்பிடமாகவும் தற்போது பிரான்சில் வசித்து வந்தவருமாகிய மயில்வாகனம் மனோராஜ் (முன்னாள் ஆசிரியர்) 01.03.2015 அன்று பிரான்சில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களாகிய சக்கடத்தார் சதாசிவத்தின் அன்புப் பேரனும், ஓய்வு பெற்ற பொறியியலாளர், ஓய்வு பெற்ற ஆசிரியர், தையல் நாயகி தம்பதிகளின் பாசமிகு புத்திரனும், காலஞ்சென்றவர்களான பாலசிங்கம் (முன்னாள் உப தலைவர் நகர சபை சாவகச்சேரி), அன்னபூரணம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்), ஆகியோரின் அன்புமிகு மூத்த மருமகனும், மற்றும் பாலசரோஜினி (பிரான்ஸ்) அவர்களின் பாசமிகு கணவரும்.

மனோகரிதேவி, மனோராணி (பிரான்ஸ்), மனோரஞ்சனா (பிரான்ஸ்), மனோரஞ்சினி, மனோரதி (ஓய்வு பெற்ற ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் (சட்டத்தரணி சாவகச்சேரி), பாலகாந்தன் (ஓய்வு பெற்ற களஞ்சியப் பொறுப்பாளர் திருகோணமலை) பாலகுமரன் (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் நகரசபை சாவகச்சேரி) பாலச்சந்திரன் (டாக்டர் வாழைச்சேனை), பாலஜெயந்தி (பிரதி உதவி அதிபர் யாழ். ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம்), பாலஜீவினி (பிரதி அதிபர் மகளிர் கல்லூரி சாவகச்சேரி), பாலசுலோஜினி (டாக்டர் அமெரிக்கா), இராமலிங்கம் (இலங்கை) குமரநாதன் (பிரான்ஸ்), நிக்கிலஸ் (பிரான்ஸ்), தனபாலன் (இலங்கை) காலஞ்சென்ற மனோகரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 09.03.2015 திங்கட்கிழமை பிரான்ஸ் நகரில் நடைபெறவுள்ளது. இத் தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

| சகோதரி: | தகவல் | சகோதரி: |
|---|---|---|
| இராமலிங்கம் மனோகரிதேவி | | மனோகரன் மனோகரி |
| 0773158597 | (9719) | 0771817834 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் பிரதமர் 15 வாகனங்களை இன்னமும் ஒப்படைக்கவில்லை-ஜயசூரிய

(கொழும்பு)

முன்னாள் பிரதமர் டி.எம். ஜயரட்ன 15 வாகனங்களை இன்னமும் ஒப்படைக்கவில்லை என அமைச்சர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்:

பிரதமர் பயன்படுத்திய 15 வாகனங்கள் மீள ஒப்படைக்கப்படவில்லை என்ற விடயத்தை பொது நிர்வாக அமைச்சர் கரு ஜயசூரிய, அமைச்சரவைக்கு உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளார்.



ஜனாதிபதி செயலகத்தினால் பயன்படுத்தப்பட்ட பெரும் எண்ணிக்கையிலான வாகனங்கள் மாயமாகியுள்ள நிலையில் முன்னாள் பிரதமரும் வாகனங்களை ஒப்படைக்கவில்லை என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கடந்த அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகளை வகித்த அனைவருக்கும் இரண்டு வாகனங்களையும் சாரதிகளையும் வழங்க தற்போதைய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

எனினும் பெரும் எண்ணிக்கையிலான வாகனங்களை முன்னாள் ஜனாதிபதி செயலகம், பிரதமர் அலுவலகம் முன்னாள் அமைச்சர்கள் இன்னமும் ஒப்படைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் ஜனாதிபதி ஆட்சியிலிருந்த காலத்தில் ஜனாதிபதி செயலகத்தின் போக்குவரத்துப் பிரிவின் பணிப்பாளராக கடமையாற்றியவரை வாகனங்களைக் காணவில்லை என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் கைது செய்து பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (3-5)


**தேவை**

துறைமுகத்தில்20-40அடிகொள்கலன்களுக்கு சாரதிகள்/ உதவியாட்கள் தேவை. உதவியாட்களுக்கு பாரமான வேலை இல்லை. 6 மாதங்களின் பின்னர் சாரதியாகக் கூடிய இயலுமையுடன் 42000/- சம்பளம். கனரக/ மென்ரக சாரதிகளும் தேவை தொடர்புகளுக்கு 0772926538 (சி-9634)


# 973 வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

அரசாங்கம் இடைக்கால வரவு செலவு திட்டத்தில் பொதுமக்களுக்கு வழங்கிய நிவாரணங்களை வழங்காத 973 வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க பாவனையாளர் பாதுகாப்பு அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது. நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளில் இந்த வர்த்தகர்கள் கைது செய்யப்பட்டனர்.

வரவு செலவுத்திட்டத்திற்கேற்றபடி பொருட்களை விற்பனை செய்ய மறுக்கும் வர்த்தகர்கள் தொடர்பாக 011 7755481 என்ற இலக்கத்துக்கு தொடர்பு கொண்டு முறைப்பாடு செய்யப்படும் என பாவனையாளர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (3-5)


## அபிவிருத்தி லொத்தர் சபை விநியோகஸ்தர்களை நியமித்தல்

சந்தையில் முதலிடம் வகிக்கும் லொத்தர்களாகிய "சனிக்கிழமை அதிர்ஷ்டம்", "அபிவிருத்தி அதிர்ஷ்டம்", "ஜயோதா", "ஜனஜய", "நியத்தஜய", "சுப்பர்போல்" மற்றும் "உடனடி லொத்தர்" டிக்கட்டுக்களை விநியோகிக்கும் வகையில் பின்வரும் மாவட்டங்களிலிருந்து விநியோகஸ்தர்களாக செயற்பட விரும்பும் நிறுவனங்கள் மற்றும் நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. யாழ்ப்பாணம்
2. கிளிநொச்சி/ முல்லைத்தீவு
3. மன்னார்
4. வவுனியா
5. திருகோணமலை

விநியோகஸ்தர்களுக்கு 1.25% கொடுப்பனவு வழங்கப்படும்.

**தகைமைகள்**

1. அபிவிருத்தி லொத்தர் சபை மூலம் கோரப்படும் பெறுமதிக்கு வங்கி பிணையினை முன்வைக்கும் தகுதி அவசியம்.
2. தொலைபேசி/ தொலைநகல்/ கணனி/ இணைய வசதிகள் இருத்தல் அவசியம்.
3. பிரதான வீதியில் அலுவலக வசதிகள் இருத்தல் வேண்டும்.

மேலும் மேற்கூறப்பட்ட மாவட்டங்களில் லொத்தர் விற்பனை செய்வதற்கு விருப்பமுடைய நபர்கள்/ நிறுவனங்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விற்பனை முகவருக்கு 17.5% கமிஷன் தொகை வழங்கப்படும்.

மேற்கூறப்பட்ட தேவைகளை பூர்த்தி செய்யக் கூடிய நபர்கள் அல்லது நிறுவனங்கள் 2015.04.01 ஆம் திகதிக்கு முன்னதாக சுயமாக தயாரித்த விண்ணப்பப்படிவம் மூலம் விண்ணப்பிக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு தொலைபேசி இலக்கம் 011- 239 0928 அல்லது 011- 482 4854 ஊடாக சந்தைப்படுத்தல் பிரிவினை தொடர்பு கொள்ளவும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

(9715)

தலைவர்
அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 356, கலாநிதி கொல்வின் ஆர்.டி.சில்வா மாவத்தை,
யூனியன் பிலேஸ், கொழும்பு-02



## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 08 11 1947

மறைவு 12 03 2012

**தம்பிப்பிள்ளை ஆனந்தமயில்**
(எழுத்தாளர், ஓய்வு பெற்ற எழுது வினைஞர், பரீட்சைத் திணைக்களம்)

அன்பின் இருப்பிடமாய்
இலக்கியத்தை போதித்த ஆசானாய்
பாசத்தின் உறைவிடமாய்
இருந்து எமை வளர்த்த அப்பாவே
நீங்கள் மறைந்து மூன்றாண்டு
ஆகிவிட்டபோதும் உங்கள் அறிவுரைகள்
காதினிலே கேட்கிறது...

கொற்றன்தறை,
பொலிகண்டி கிழக்கு,
வல்வெட்டித்துறை.

(9717)

குடும்பத்தினர்



## கண்ணீர் அஞ்சலி

அமரர் திருமதி செல்லையா இரத்தினம்மா



எமது பாடசாலையின் பகுதித் தலைவர் செ.பாலச்சந்திரன் அவர்களின் தாயார் திருமதி. செல்லையா இரத்தினம்மாவின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம், யா/ வைத்தீஸ்வராக் கல்லூரி.


## இராசி பலன்

09.03.2015
மாசி 25, திங்கட்கிழமை
சூரிய உதயம் காலை 6.22 மணிக்கு
சதுர்த்தி முழுவதும்
சித்திரை மாலை 6.28 மணிவரை
இராகுகாலம் 7.54-9.24 மணிவரை
சுபநேரம் 12.24-1.54 மணிவரை
சங்கடஹர சதுர்த்தி விரதம், சித்தாமிர்தம்

கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், விட்டுக் கொடுத்து செல்வதன் மூலம் அமைதி காண வேண்டிய நாள், பிராயண பயமுண்டு.

அதிஷ்டவாய்ப்புக்களைப் பெருக்கி கொள்ள வேண்டிய நாள்,.தொலைபேசி மூலம் சுப தகவல்கள் வந்து சேரலாம், கூட்டாளிகளின் ஒத்துழைப்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

உடல் நலம் சீராகும், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், செய் தொழில் மேன்மையுண்டு, எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும்,போசன சுகமுண்டு.

வாகன சுகமுண்டு, தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கப் பெறுவீர்கள், பிள்ளைகளின் வருங்கால நலன் கருதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், சொத்துக்களால் ஆதாயமுண்டு.

தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், தொழிலில் அதிகாரிகளின் பாராட்டுகளைப் பெறுவீர்கள், தந்தை வழி உறவில் தன வரவுகள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு.

தொலை தூரத்திலிருந்து சுப தகவல்கள் வந்து சேரலாம், விரதம், வழிபாடுகளை கடைப்பிடிக்க வேண்டிய நாள், பெற்றோர் மீது பிரியம் கூடும், சுப செலவுகள் அதிகரிக்கும் நாள்.

கனவுகள் நனவாக கற்பக மூர்த்தியை வழிபட வேண்டிய நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம்.

உடன் பிறப்புக்கள் வழியில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், பணத் தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், உறவினர்களின் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், காரிய அனுகூலமுண்டு.

காரியங்கள் வெற்றி பெற கணபதியை வழிபட வேண்டிய நாள், பயணங்களால் பலனுண்டு, தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும், சந்தலங்கள் கூடும்.

தொழில் ரீதியான பயணங்கள் இடம் பெறலாம், குடும்பத்தில் பெரியவர்களின் சொற்களைக் கேட்டு நடப்பீர்கள், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.

வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், திடீர் பணவரவு மனதிற்கு மகிழ்ச்சி தரும், வாக்கு மேன்மையுண்டு, உடல் நலம் சீராகி உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதற்கு விளம்பரம் தேவையில்லை



பணத்தைக் கொட்டி விளம்பரங்கள் செய்கின்றன நிறுவனங்கள். சந்தையில் தங்களது பொருட்கள் அல்லது பிராண்டுகள் அதைவிடவும் மேலதிகமாகச் சம்பாதிக்க வேண்டும் என்பதற்காக.

அப்படி செலவு செய்த பணம் திரும்ப சம்பாதிக்கலாம் அல்லது சம்பாதிக்காமலும் போகலாம். ஆனால் விளம்பரங்களில் புரளும் பணம் ஆண்டுக்காண்டு அதிகரித்துக் கொண்டேதான் இருக்கிறது.

இது விளம்பர யுகம், எல்லாவற்றுக்கும் விளம்பரம், எதற்கும் விளம்பரம். விளம்பரம் செய்தால்தான் சந்தையில் நிலைத்து நிற்க முடியும் என்பதுதான் நிலைமை.

விளம்பரமே வேண்டாம் என்று ஒதுங்கி நிற்கும் நிறுவனங்கள் மக்கள் மனங்களில் இடம்பிடிப்பதில்லை.

இப்படி மக்கள் மனங்களில் இடம் பிடிப்பதற்காக ஒவ்வொரு நிறுவனங்களும் பல கோடிகளை விளம்பரங்களுக்கு ஒதுக்குகின்றன. விளம்பரத்துறை பொருளாதார வளர்ச்சியிலும் முக்கிய பங்காற்றுகிறது. வானொலி, தொலைக்காட்சி, அச்சு ஊடகங்கள் வழியாகவும் வெளிப்புற விளம்பரங்கள் வழியாகவும் விளம்பரத்துறைக்கு வருமானம் கொட்டுகிறது.

ஒரு நிறுவனம் தொழிலை புதிய சந்தைக்கு விரிவாக்கம் செய்ய வேண்டும் என்றால் தங்களது ஆராய்ச்சி, தயாரிப்பு எல்லாவற்றையும் தாண்டி அணுகுவது விளம்பர நிறுவனங்களைத்தான் என்கிறது ஆய்வுகள்.

**கோடிகளில் ஒப்பந்தங்கள**

சின்ன தயாரிப்போ, பெரிய தயாரிப்போ தங்களது சந்தைக்கு ஏற்ப விளம்பரத்துக்கு ஒதுக்கித்தான் ஆக வேண்டும். பன்னாட்டு நிறுவனங்கள் கோடிகளை கொட்டுகிறது என்றால் சிறு நிறுவனங்கள் இலட்சங்களாவது ஒதுக்க வேண்டும்.

**எவ்வளவு ஒதுக்கீடு**

ஆரம்ப நிலையில் இருக்கும் ஒரு நிறுவனம் முதற் கட்டமாக தனது விளம்பரங்களுக்கு மொத்த வருமானத்தில் 2 முதல் 3 சதவீத தொகையை ஒதுக்குகின்றன. நடுத்தர நிறுவனங்கள் 7 முதல் 8 சதவீத தொகையையும் வளர்ந்த நிறுவனங்கள் 10 முதல் 12 சதவீத தொகையையும் ஒதுக்குகின்றன. சில நிறுவனங்கள் தங்களது மொத்த வருமானத்தில் 16 முதல 23 சதவீதம் வரை விளம்பர செலவுகளை செய்கின்றன.

**விளம்பர சந்தை வளர்ச்சி**

இந்தியாவில் மட்டும் கடந்த இரண்டு வருடங்களில் விளம்பர சந்தையின் வளர்ச்சி 27.5 சதவீதம் உயர்ந்துள்ளது. 2014 ம் ஆண்டில் மட்டும் இந்த துறையில் புழங்கிய தொகை ரூ.37,100 கோடி என்கிறது புள்ளிவிவரங்கள்.

இது 2015-ல் 9.6 சதவீதம் வளர்ந்து ரூ.40,658 கோடியாக இருக்கும் என்கிறது. 2014 தேர்தல் காலத்தில் 3 பங்கு வளர்ச்சியில் 2 பங்கு தேர்தல் விளம்பர வருவாயாகும்.

2014ம் ஆண்டில் 16.4 சதவீத வளர்ச்சி கண்டுள்ளது இந்திய விளம்பரத்துறை. அதில் 7.2 சதவீதம் தேர்தல் விளம்பரங்கள் வழியாகவும், 3.6 சதவீதம் இ-கொமர்ஸ் மூலமாகவும், இதர வகைகளிலான விளம்பரங்களின் மூலம் 5.6 சதவீத வளர்ச்சியும் கண்டுள்ளது.

2014-ல் தேர்தல் விளம்பரங்களின் மூலம் கிடைத்த வருவாய் மட்டும் ரூ.2,300 கோடியாகும்.

**வேலைவாய்ப்பு**

விளம்பரத்துறையின் வேலைவாய்ப்பு உருவாக்கமும் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றுகிறது. புதுமையான முயற்சிகளோடும், சிந்தனைகளோடும் வருபவர்களுக்கு விளம்பரத் துறையில் வேலை வாய்ப்புகள் இருக்கின்றன.

விளம்பர நிறுவனம் நிலைத்து நிற்க வேண்டும் என்றாலும், அது புதுமைகளை முயற்சித்து பார்க்கும் நிறுவனமாக இருக்க வேண்டும். பல துறைகளைச் குறித்த அறிவும், திறமையும் வேண்டும். அப்படிப்பட்ட நிறுவனங்கள்தான் வெற்றி பெற முடியும்.

நுகர்வோர் துறையின் வளர்ச்சிக்கு ஏற்ப விளம்பர துறையின் வளர்ச்சி இருக்கும் என்றும், விளம்பரத்துக்கு ஆகும் செலவு இயல்பாகவே பொருளாதார வளர்ச்சிக்கும், பொருளாதார சூழலை சீராக வைத்துக் கொள்வதற்கும் காரணியாக இருக்கிறது என்றும் சொல்கிறது.

மேலும் நுகர்வோர் சந்தையின் முக்கிய காலகட்டம் 2005 - 2025 என்று அந்த ஆய்வு குறிப்பிட்டுள்ளது. ஒரு பொருளை தேடி மக்கள் வாங்கத் தொடங்கும்போதே விளம்பரத்தின் வெற்றி உருவாகிறது. மக்களின் நுகர்வு வீதம் அதிகரிக்க அதிகரிக்க விளம்பர சந்தையின் வளர்ச்சியும் அதிகரிக்கும் என்பதுதான் உண்மை.

# டிமோவுடன் கைகோர்க்கிறது எச்.என்.பி




தனியார்துறை முன்னணி வங்கியான ஹட்டன் நஷனல் வங்கியானது, டீசல் அன்ட் மோட்டார் என்ஜினியரிங் பீஎல்சீ யுடன் (DIMO), டாடா (TATA) வணிக மற்றும் பயணிகள் வாகனங்களை மேம்படுத்துவதற்காகத் தொடர்ந்தும் பத்தாவது வருடமாகக் கைகோர்க்கின்றது.

இந்த இணைப்பினூடாக, டாடா வணிக மற்றும் பயணிகள் வாகனங்களைக் கொள்வனவு செய்வோர், எச்எண்பீ குத்தகை (HNB Leasing) மூலமாக, ஒரு கவர்ச்சிகரமான நவீன குத்தகைப் பொதியொன்றினை சந்தையில் குறைந்த வட்டி வீதத்தில் பெற்றுக் கொள்ளலாம். எச்எண்பீ குத்தகையானது நாடுபூராகவுமுள்ள 251 வாடிக்கையாளர் நிலையங்கள் மூலமாக ஒப்பற்ற குத்தகைப் பொதிகளை டாடா வாடிக்கையாளர்களுக்கு வழங்கும். இதற்கு மேலதிகமாக, வாடிக்கையாளர்கள் எச்எண்பீ அசூரன்ஸ் மூலமாக 2 மில்லியன் பெறுமதியான இலவச ஆயுள் காப்புறுதியையும் இலவச எச்எண்பீ கடனட்டையையும் பெற்றுக் கொள்வர்.


கார்கள், சிறிய வணிக வாகனங்கள், கப்கள், கடின வணிக ட்ரக்குகள் மற்றும் பஸ்கள் முதலான பாரிய வரிசையுடன்கூடிய இலங்கையில் அதிக விற்பனையாகும் வாகன வியாபாரக் குறியான டாடா வாகனங்களை டிமோவானது (DIMO) மேம்படுத்தும்.

இந்தியாவின் டாடா மோட்டர்ஸ் உடன் டிமோவானது 54 வருடகால உறுதியான நட்புறவினைக் கொண்டுள்ளது. டிமோவானது தற்போது நாடுபூராகவும் 40 கிளைகளைக் கொண்டு காணப்படுவதுடன் பணியாற்றுவதற்கு மிக உயர்வான இடம் எனும் நிறுவகத்தினால் "பணியாற்றுவதற்கு மிக உயர்வான இடமாக" (Great Place to Work) அங்கீகரிக்கப்பட்டுள்ள 15 இலங்கைக் கம்பனிகளில் ஒன்றாகும்.

# எல்லாம் வல்ல வாடிக்கையாளர்

நிறுவனத்தின் உச்ச கட்டத் தலைவர் வாடிக்கையாளரே! அவரால்தான் யாரை வேண்டுமானாலும் அந்த நிறுவனத்தின் முதன்மை அதிகாரியைக்கூட வீட்டிற்கு அனுப்ப முடியும்- என்பார் வால்மார்ட் நிறுவனர் சாம்வால்டன்.

எனவே வாடிக்கையாளர்களின் தேவைகள் குறித்த விழிப்புணர்வு இல்லாவிட்டால் யாராக இருந்தாலும் ஒரு நாள் வீட்டிற்கு மூட்டைகட்ட வேண்டியது தான்!




வள்ளுவர் அரசருக்கு தூங்காமை, கல்வி, துணிவுடைமை ஆகியவை நீங்காது இருக்க வேண்டுமென்கின்றார். இக்கால அரசர்களான நிறுவனத் தலைவர்களுக்கும் இது பொருந்தும்!

நிறுவனத்தில் முதலிடத்தில் இருப்பவர்கள் கொஞ்சமும் அசர முடியாதே. தலைவராக ஆவது கடினம் என்றால் அதைத் தக்க வைத்துக் கொள்வது அதனினும் கடினமாயிற்றே. அசந்தால் போச்சு! விழிப்புணர்வையும் அறிவையும், துணிவையும் நிறுவனத்தினுள்ளும், அதைச்சுற்றி நடப்பவை என்று வகைப்படுத்தலாம்.

மேலதிகாரிக்கு நிறுவனத்துக்குள் என்ன நடக்கிறது என்பது தெரிவதற்கு முறைப்படி தகவல்களாக (MIS) வர ஏற்பாடு இருக்கும். ஆனால் வெறும் எண்களால் சொல்ல முடியாதவையும் பல உண்டு. அவை மறைமுகமாகவே வெளிப்படும்.

பணியாளர்களின் மனநிலை எப்படி? மகிழ்ச்சியா இல்லையென்றால் ஒத்துழையாமையா, வேலைநிறுத்தம் வரப் போகின்றதா என்பது குறித்த விழிப்புணர்வு வேண்டுமே!

**வாடிக்கையாளர்கள் பொருட்களையோ, சேவைகளையோ வாங்குவதில்லை. அவர்கள் அவை கொடுக்கும் திருப்தியைத்தான் வாங்குகின்றார்கள்** என்பார் நிர்வாகவியல் குரு பிலிப் கோட்லர்.

இப்பொழுது நுகர்வோரின் தேவைகளும், ரசனைகளும் மாறும்பொழுது வாடிக்கையாளரைத் தக்கவைத்துக் கொள்ள அவர்களது தேவை அறிந்து புதுப்புதுப் பொருட்களை, சேவைகளை உருவாக்கினால்தான் உண்டு!

இதற்கு அவசியமானது வாடிக்கையார் தேவை குறித்த அறிவு -அதாவது தனது நிறுவனத்தின், பொருளின், சேவையின், பணியாளர்களின், தொழில்நுட்பத்தின், போட்டியாளர்களின் மற்றும்சந்தைப்படுத்தலின் ஞானம் குறித்தது. உங்களுக்கு என்ன நடக்கிறது ஏன் நடக்கிறது என்று தெரியாவிட்டால் எது நடக்கப் போகிறது எப்படி நடக்கப் போகிறது என்பது புரியுமா என்ன?

பாதுகாப்புத் துறை அதிகாரிக்கு போர் விமானம் ஓட்டத் தெரிய வேண்டாம். ஆனால் அதன் உத்தேச விலை என்ன, எங்கே தரம் உயர்வு, விலை குறைவு, எந்தெந்த நாட்டில் விற்கின்றார்கள் என்கின்ற பொது அறிவு வேண்டாமா?

அடுத்த முக்கியத் தேவை துணிவு. இது தெரிந்த எதிரியுடன் சண்டை போடும் அஞ்சாமை அல்ல! ஆழம் தெரியாத தண்ணீரில் குதிப்பது, வழிதெரியாத காட்டில், இருட்டில் நடப்பது போன்றது! புதிய இடத்தில் கிளை திறக்கவும், புதிய அதிகாரியிடம் பொறுப்பை ஒப்படைக்கவும், புதிய பொருட்களை உற்பத்தி செய்யவும் துணிவு வேண்டுமே!

பழகியவற்றையே பின்பற்றுவது ஒருவித சௌகரியத்தைக் கொடுக்கலாம். ஆனால் அதை மீறி வருபவர்களே தொடர்ந்து கோலோச்சுவர்!




# தொழிலுறவு சட்டத்தில் திருத்தம்

150 வருடங்கள் பழைமையான தொழிலுறவு சட்டம், தற்போதைய காலத்துக்கு ஏற்ப மாற்றி அமைக்கப்படவுள்ளது.

நீதி மற்றும் தொழிலுறவு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ இதனைத் தெரிவித்துள்ளார்.

பழைமையான இந்த சட்டத்தினால் தொழிலாளர்களின் வேதனம், பிரச்சினைகள் மற்றும் நலன்கள் குறித்த சிக்கல்கள் எழுகின்றன.

இந்த நிலையில் தொழிலாளர்களுக்கு நன்மையை ஏற்படுத்தும் வகையில் இந்த சட்டத்தில் மாற்றங்களை ஏற்படுத்த விருப்பதாகவும், இதன்படி தற்போதுள்ள தொழிலாளர் சட்டக் கோவை, பிரதான ஆறு கட்டங்களுக்குள் கொண்டுவரப் படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# மகளிர் மட்டும் ஹோட்டல்

சர்வதேச பெண்கள் தினமான நேற்று 8-ம் திகதி இந்தியாவில் ரெஸ்ரோரண்ட் பிரிவில் முன்னணியில் உள்ள நிறுவனமான சப்வே, மும்பையில் பெண்கள் மட்டுமே பணிபுரியும் புதிய கிளையை தொடங்கி உள்ளது.

இந்த புதிய கிளையின் மூலம், இந்தியாவில், சப்வே ஹோட்டல்களின் எண்ணிக்கை, 500 ஆக அதிகரித்துள்ளதாக, சப்வே நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளது.

2001-ம் ஆண்டில், இந்திய சந்தையில் காலடி எடுத்துவைத்த சப்வே நிறுவனம், தற்போதைய அளவில் 70 நகரங்களில் 450க்கும் மேற்பட்ட கிளைகளை நிர்வகித்து வருகிறது. 2018ம் ஆண்டில், இந்தியாவில் தனது கிளைகளின் எண்ணிக்கையை, 1000 ஆக உயர்த்த திட்டமிட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.



## பங்குச் சந்தை விபரம்

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 7,301.29 | 7,183.50 ⇩ |
| எஸ் & பி 20 சுட்டி | 4,115.88 | 4,097.05 ⇩ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) | 4,444.932 |

***உயர்வடைந்த பங்குகள்(ரூ.):*** ரெஜின்ஸ்(94.20), சிஜரி(142.00), முல்லர்ஸ்(1.50), ஏஐஏ இன்சுரன்ஸ்(310.00), ஏசியா அசெட்(1.80).

***சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):*** கூஜே(52.20), செலின்சிங்(1551.20), பரஹன்(612.20), ஈபி கிரேஸி(1002.00), சிரஸ் லிசர்(W)(0.50).

**மேலதிக தகவல்கள்: www.cse.lk**

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 131.85 | 134.63 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 200.24 | 205.92 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 144.46 | 149.25 |
| சுவிஸ் பிராங் | 134.69 | 139.42 |
| கனேடிய டொலர் | 105.06 | 108.53 |
| அவுஸ்திரேலிய டொலர் | 101.81 | 105.85 |
| சிங்கப்பூர் டொலர் | 95.81 | 98.91 |
| ஜப்பான் யென் | 1.09 | 1.12 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.13 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 36.18 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி மைத்திரியின் மக்கள் வாக்கை கொள்ளையடித்தே பிரதமரானார் ரணில்

## ஜாதிக ஹெல உறுமய தெரிவிப்பு

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு கிடைத்த மக்கள் வாக்கைக் கொள்ளையடித்தே ரணில் பிரதமராகியுள்ளதாக ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.


மேலும் ரணில் 100 நாள் வாக்குறுதிகளை மறந்துவிட்டு மீண்டும் ஒரு தேர்தலில் போட்டியிட முயற்சிக்க வேண்டாம் என ஜாதிக ஹெல உறுமயவின் மேல் மாகாண சபை உறுப்பினர் நிஷாந்த வர்ணசிங்க தெரிவித்துள்ளார். நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தில் பிரதமர் பதவியையும் அமைச்சர் பதவிகளையும் ஐக்கிய தேசிய கட்சியினர் பெற்றுக்கொள்ள தடுமாறிக் கொண்டிருக்கிறார்கள்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்காகவும் நல்லாட்சியை எதிர்பார்த்தே மக்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு வாக்களித்தார்கள். நாடு கேட்கின்ற அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தாமல் ஏப்ரல் 23 ஆம் திகதி தேர்தல் இடம் பெற வேண்டும் என கூறும் அதிகாரம் யாருக்கும் இல்லை என நிஷாந்த வர்ணசிங்க குறிப்பிட்டுள்ளார். (3-5)

# இந்திய பிரதமரின் இலங்கை விஜயம் முன்கூட்டியே இடம்பெற்றிருக்க வேண்டும்

## சரத்பொன்சேகா தெரிவிப்பு



இந்திய பிரதமர் ஒருவரின் இலங்கை விஜயம் முன்கூட்டியே இடம்பெற்றிருக்க வேண்டும் என்று முன்னாள் இரா்ணுவ தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். இந்தியா, இலங்கைக்கு தொடர்ந்தும் உதவியளித்து வந்துள்ளது.

இந்தநிலையில மோடியின் விஜயம் வரவேற்கத்தக்கது. 28 வருடங்களாக இந்திய பிரதமர் ஒருவர் இலங்கைக்கு விஜயம் செய்யாமையா னது தவிர்க்கப்பட்டிருக்க வேண்டும். எனினும் தற்போது அது நிகழ்வது நிறைவை அளிக்கிறது என்றும் சரத் பொன்சேகா குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரின் போது இந்திய இராணுவ உதவிகளை வழங்காமை குறித்து சரத் பொன்சேகாவிடம் கேட்டபோது, தமிழகத்தின் எதிர்ப்பு இதற்கு காரணமாக இருந்திருக்கலாம் என்பதை இலங்கை புரிந்துகொண்டது. எனினும் இலங்கைக்கு இந்தியா தார்மீக ஆத ரவை வழங்கியது என்று சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். (3-5)

# கடவை பாதுகாவலர் ஒன்று கூடல் இன்று

1987 ஆம் ஆண்டு தொடக்கம் 1990 ஆம் ஆண்டு வரை வட பகுதி புகையிரத நிலையங்களில் கடவை பாதுகாவலர்களாக கடமையாற்றியவர்களுக்கான ஒன்று கூடல் இன்று 9 ஆம் திகதி திங்கட்கிழமை புங்கன்குளம் புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் இடம்பெறவுள்ளது.

இவ் ஒன்று கூடலுக்கு வருகை தரும் போது கடமையாற்றிதற்கான உரிய ஆவணங்கள் அனைத்தையும் கொண்டு வருமாறு சங்கத்தின் செயலாளர் மு.ரவிச்சந்திரன் தெரிவித்துள்ளார். (எ-1)


LED

Reduced energy consumption and cooler lights mean lower electricity bills. Saving money

6 Months Warranty

PLASTIC LED BULB

2W Rs.80/= | 3W Rs.120/=
5W Rs.180/= | 7W Rs.260/=
9W Rs.360/= | 12W Rs.420/=
15W Rs.550/= | 18W Rs.750/=

Buy same item 10pcs Get 10% Discount

SPECIAL PRICE FOR WHOLESALE
MINIMUM ORDER 50PCS

2W Rs.64/= | 3W Rs.96/=
5W Rs.144/= | 7W Rs.208/=
9W Rs.288/= | 12W Rs.336/=
15W Rs.440/= | 18W Rs.600/=



No 11A, Stanley Road,
Jaffna. Tel : 0212223857
Hotline : 0727949242

KINGS ELECTRONICS

www.kingselectronics.lk



## Hotel Lux Etoilesஇன் நற்செய்தி

உலகக் கோப்பை 2015 கிரிக்கெட்டை முன்னிட்டு Hotel Lux Etoiles தனது Hot and Cool Bar இல் 10 அடி X 8 அடி நீள் சதுர அளவைக் கொண்ட வெண்திரையை அமைத்து தனது வாடிக்கையாளர்களை மகிழ்ச்சி அடைய வைப்பதை இட்டு பெருமைப்படுவதுடன் அவ்விடத்தில் பிரத்தியேக மண்டபம், விசேட பிரத்தியேக சிறு மண்டபங்கள் அமைத்துக் கொண்டதுடன் திறந்த மொட்டை மாடியையும் விரிவாக்கம் செய்ததையும் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறது.

இவ் Hot and Cool Bar இல் உள்ள விலைப்பட்டியலில் எந்தவொரு சிற்றுண்டியோ, உணவு வகைகளோ 320/-இற்கு மேற்படவில்லை என்பதையும் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கின்றது.

## விலைக்கழிவு

இவ்விடுதி தனது கிளையில் ஒன்றான Gargills Food City Jaffna வில் அமைந்துள்ள Pizza Fransisco Varano வில் இன்று திங்கட்கிழமையில் இருந்து மாத இறுதிவரை விற்கப்படும் சகல Pizza க்களுக்கும் 15% விலைக்கழிவு என்பதையும் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## வரவேற்பாளர்-RECEPTIONIST

தமிழ், சிங்களம், ஆங்கிலம் பேச, எழுதத் தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். இல்லை எனில் தமிழ், ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க பரிபூரணமாக தெரிந்தவர்கள் மட்டும் நேர்முகப் பரீட்சைக்கு சமுகம் அளிக்கவும்.

## தொழில்நுட்பவியலாளர்-TECHNICIAN

குழாய் பொருத்துதல், திருத்தல், மின்சார அமைப்பு வேலைகள், குளிரூட்டல் பிரிவு மூன்றும் தெரிந்தவர்களுக்கு முதலிடம். இல்லையெனில் குழாய் பொருத்தல், மின்சாரப்பகுதி பரிபூரணமாகத் தெரிந்தவர்கள் மட்டும் நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்கவும். ELECTRICITY/ PLUMBING/ A/C REPAIRING.

## காசாளர்-CASHIER

பெண்கள் மட்டும்

நேர்முகப் பரீட்சை திங்கள் காலை 10 மணி முதல் நேரடியாகவே சமுகம் அளிக்கலாம்.

*** LUX Etoiles
No.34, Chetty Street Lane, Nallur, Jaffna.
Tel:- 072 222 3966 (சி-312)



## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 73 சூரிசெவ் 8 இல்<br>தகைமை/தொழில்: லண்டன் PR<br>தொ.இ: B/4261 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம் மூலம்<br>கி.பா: 10 1/2<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: MBBS/ வைத்தியர்<br>தொ.இ: G/4249 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 15<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: HNDE/ உதவி பொறியியலாளர்<br>தொ.இ: B/4263 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 13 1/2<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: B.COM<br>தொ.இ: G/4252 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 2<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்: MBBS/ வைத்தியர் லண்டன்<br>தொ.இ: B/4265 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 72 1/4<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L/ ஆசிரியர்<br>தொ.இ: G/4254 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 8 சூரிசெவ் 6 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: ஆசிரியர்<br>தொ.இ: B/4266 | பிறப்பு: 1980 RC<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/4258 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
(ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வார இறுதி நாட்களில் வீடுசெல்ல அனுமதிக்குக

## பெற்றோர் கோரிக்கை


யாழ். தேசியக் கல்வியியற் கல்லூரியில் கல்வி பயிலும் மாணவர்கள் வார இறுதி நாட்களில் வீடுகளுக்குச் செல்ல அனுமதி வழங்கப்பட வேண்டும் என பெற்றோர் கோரிக்கை விடுக்கின்றனர்.

குறிப்பாக வார இறுதி நாட்களான சனி, ஞாயிறு தினங்களில் மாணவர்கள் வீடுகளுக்குச் செல்ல அனுமதிக்கப்பட வேண்டுமென பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

இவர்களில் பெண் பிள்ளைகள் மிகவும் கஷ்டங்களை அனுபவிப்பதாகவும் அதே வேளை கல்லூரி நிர்வாகத்திடம் தமது கஷ்டங்களைத் தெரிவித்து வார இறுதியில் வீடுகளுக்குச் செல்ல அனுமதி கோரிய போதிலும் சாதகமான, பதில் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் இக்கல்லூரிக்கு கல்வி அமைச்சர் ராதாகிருஷ்ணன் மற்றும் மகளிர் விவகாரப் பிரதி அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் ஆகியோர் விஜயம் செய்த வேளை தமது கஷ்ட நிலைகளை தெரிவிக்க முற்பட்ட போதிலும் அதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை எனவும் கூறப்படுகின்றது.

எனவே இவ் விடயத்தில் கவனம் எடுத்து ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென பெற்றோர் வேண்டுகோள் விடுக்கின்றனர். (3-10)



# இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் வருகையால் தமிழ் மக்களுக்கு விமோசனம் கிடைக்க வேண்டும்

## சிரேஷ்ட பேராசிரியர் சிற்றம்பலம் கருத்து



(யாழ்ப்பாணம்)

**இந்தியப் பிரதமர் நரேந்திரமோடியின் யாழ்ப்பாண விஜயம் தமிழ் மக்களுக்கு விமோசனத்தைத் தர வேண்டும். இதற்கேற்றாற்போல் எமது அபிலாசைகளை பிரதமர் மோடியிடம் உறுதிபடத் தெரியப்படுத்துவது எங்களின் தலையாய கடமை. இவ்வாறு தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட துணைத் தலைவரும் பேராசிரியருமான சி.க.சிற்றம்பலம் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழர் தரப்பின் இழப்புகளும் நீண்ட நாள் போராட்டத்தின் விளைவாகச் சர்வதேச மட்டத்தில் இது ஏற்படுத்திய தாக்கமுமே சர்வதேச விசாரணையாகும்.

வெறும் குற்றவாளிகளை மட்டும் தண்டிக்கவே இவ் விசாரணை நடைபெற முடியாது. தமிழ் மக்கள் சுமந்து நிற்கும் வடுக்களுக்கு ஒரு குறிப்பிட்ட கால வரம்புக்குள் தமிழரின் தேசிய இன அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஓர் தீர்வுக்கு நம்மை இட்டுச் செல்லும் தார்மீகப்பொறுப்பு சர்வதேசத்திற்கு உண்டு.

நாம் கோருவது ஒரு நாட்டில் உச்சக் கட்ட அதிகாரப் பகிர்வு என்று கூறுவதில் மட்டும் திருப்தி கொள்ள முடியாது. இத்தகைய தீர்வு எத்தகையது என்று கூறுவது காலத்தின் கட்டாயமாகும்.

மாநிலத்தில் பூரண சுயாட்சியும் மத்தியில் கூட்டாட்சித் தத்துவ அடிப்படையிலான சமமான முறையிலான அதிகாரப் பகிர்வுமே என்று இந்தியாவுக்கும் சர்வதேசத்திற்கும் வெளிப்படையாகவும் உறுதியாகவும் உரத்த குரலில் கூறுவதுதான் எமது நீண்ட நாள் போராட்டத்தின் போது நம்மவர் அனுபவித்த தியாகங்களுக்குக் கிடைக்கும் அங்கீகாரமாகும்.

இதனைப் பூரண சமஷ்டி அமைப்பில் மட்டும்தான் அடையமுடியும்.

யானை வரும் பின்னே மணியோசை கேட்கும் முன்னே என்ற பழமொழிக்கிணங்க இந்தியத் தரப்பில் பொறுப்பு வாய்ந்த அமைச்சர்கள் பதின்மூன்றாவது அரசியல் திட்டம் பற்றிச் சரியான விளக்கமின்மையால் அதனைத் திருத்துவதன் மூலம்தான் தமிழருக்குச் சம உரிமை கிடைக்கும் என அறிக்கை விடத் தொடங்கி விட்டார்கள். நமது பிரதமரும் பதின்மூன்றுக்கு மேல் செல்லக் கூடாது என்று இந்தியா தங்களுக்குக் கூறியதாகத் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலுள்ள சிலரும் இத்தகைய திருத்தம் மூலம் தமிழரின் இனப் பிரச்சினைக்குரிய தீர்வு கிடைக்கும் எனப் பொருள்படக் கூறி வருகிறார்கள்.

ஆதலால் இன்றைய கால கட்டத்தில் பதின்மூன்றாவது அரசியல் சீர்திருத்தம் பற்றி உச்சரிப்பு நமது போராட்டத்தைக் கொச்சைப்படுத்துவது மட்டுமன்றி எமது மக்களின் தியாகத்தையும் அவமதிப்பதாகும்.

பதின்மூன்றாவது சீர்திருத்தம் அர்த்தபுஷ்டி உள்ள அதிகாரப் பகிர்வை அங்கீகரிக்கவில்லை. இது ஒற்றை ஆட்சியில் உள்ள மத்திய அரசின் நிர்வாகப் பரம்பலையே உறுதிப்படுத்துகிறது. இதுபற்றி அமிர்தலிங்கம்போன்றதலைவர்கள்மட்டுமன்றி முதலமைச்சர்களாக விளங்கிய வரதராஜப்பெருமாள, பிள்ளையான் போன்றோரும் அண்மையில் நமது முதலமைச்சரும் தமது இந்திய விஜயத்தின் போது தெட்டத் தெளிவாக வெறும் ஏட்டுச் சுரக்காயான இது கறிக்கு உதவாது என்று பகிரங்கப்படுத்தி விட்டார்.

ஆதலால் மாநிலத்தில் பூரண சுயாட்சியும் மத்தியில் சமமான அதிகாரப்பகிர்வுடனான கூட்டாட்சி அடிப்படையிலான ஒரு பூரண சமஷ்டி அமைப்பே இன்றைய காலத்தின் தேவையாகும்.

இதனை வலியுறுத்தும் தார்மீகப் பொறுப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு உண்டு. (ந)

## 3 பேர் கைது

சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற 3 பேர் பருத்தித்துறைப் பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அல்வாய்ப் பகுதியில் 2 பேரும் குடத்தனைப் பகுதியில் ஒருவருமாக மூன்றுபேர் பருத்தித்துறைப் பொலிஸாரால் கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் பருத்தித்துறைப் பொலிஸாரால் விசாரணைக்கென தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (3)




## அனுமதிப்பத்திரம் இருந்தும் மணல் ஏற்றியவர் கைதானார்

(கரணவாய்)

மணல் ஏற்றிச்செல்ல அனுமதிப்பத்திரம் வைத்திருந்தும் அனுமதிப்பத்திரத்தின் நிபந்தனைகளை மீறி வேறுபாதையூடாக மணல் ஏற்றிச் சென்ற இளைஞர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை வடமராட்சி மண்டான் பகுதியில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் கரவெட்டி துன்னாலையைச் சேர்ந்த இளைஞரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் 13 ஆம் திகதி வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது. (3-60)

## மயங்கி விழுந்த குடும்பஸ்தர் மரணம்

(யாழ்ப்பாணம்)

கனடாவில் இருந்து சொந்த ஊர் திரும்பிய குடும்பஸ்தர் ஒருவர் மயங்கி விழுந்து மரணமடைந்துள்ளார். இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை மாலை 6.45 மணியளவில் ஏழாலை தெற்கில் இடம்பெற்றுள்ளது.


இச்சம்பவத்தில் ஏழாலை கிழக்கைச் சேர்ந்த சண்முகநாதன் கந்தகுமார் (வயது 48) என்பவரே உயிரிழந்துள்ளார்.

கனடாவில் இருந்து சொந்த ஊரான ஏழாலை கிழக்குப் பகுதிக்கு வந்திருந்த குறித்த நபர் ஏழாலை தெற்கில் உள்ள தனது காணியை பார்க்கச் சென்ற போது காணிக்குள் மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார்.

அயலவரின் உதவியுடன் பிரஸ்தாப நபர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதும் அவரை காப்பாற்ற முடியவில்லை எனக் கூறப்பட்டது.

சம்பவம் தொடர்பாக விசாரணைகளை யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிரேம்குமார் மேற்கொண்டார். (எ-11)

## முன்னாள் பேராயர் ஜெபநேசனின் மணிவிழா நிகழ்வும் நூல் வெளியீடும்



(யாழ்ப்பாணம்)

தென்னிந்தியத் திருச்சபையின் முன்னாள் பேராயரும் யாழ். பல்கலைக்கழகதமிழ்முதுமாணிக்கற்கை நெறி வருகை விரிவுரையாளருமாகிய கலாநிதி எஸ். ஜெபநேசனின் மணிவிழா நாளை மறுதினம் புதன் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். சென்.ஜோன்ஸ்கல்லூரி பீற்றோ ஞாபகார்த்த மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த அருட்தந்தையும் விழாநாயகரின் சகோதரருமாகிய எஸ். மனோபவன் தலைமையில் நடைபெறும். வழிபாட்டு நிகழ்வுகளில் மன்னார் மறை மாவட்ட ஆயர் அதிவண. இராயப்பு யோசப் ஆண்டகை அருளுரை வழங்குவார். உடுவில் மகளிர் கல்லூரியினரின் வழிபாட்டுப் பாடல்கள் இடம் பெறும்.

தொடர்ந்து கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் துணை அதிபர் ச.லலீசனின் முன்னிலைப்படுத்தலில் பகிரங்கக் கூட்டம் இடம் பெறும். இந்நிகழ்வில் ஆசியுரைகளை நல்லை ஆதீனக் குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோம சுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளும் இலங்கைத் திருச்சபையின் நுவரெலியா மறை மாவட்டக் குருமுதல்வர் எஸ்.பி. நேச குமாரும் வழங்குவர்.

பவளவிழாவையொட்டி பேராயரால் எழுதப்பட்ட கண்டதும் கேட்டதும் என்ற நூலை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த்துறையின் முன்னாள் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா வெளியிட்டு வைப்பார். பேராயரின் அபிமானிகளையும் மாணவர்களையும் இவ் விழாவில் கலந்து கொள்ளுமாறு விழா ஏற்பாட்டுக் குழுவினர் கோரியுள்ளனர். (3-5)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# உரிய ஆசனம் வழங்கப்படும் வரை நாடாளுமன்றம் செல்லப்போவதில்லை

## ரஜீவ விஜேசிங்க தெரிவிப்பு

உரிய வரிசையில் ஆசனம் வழங்கப்படும் வரையில் நாடாளுமன்ற அமர்வுகளில் பங்கேற்கப் போவதில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவ விஜேசிங்க தெரிவித்துள்ளார். அமைச்சர்களுக்கு மத்தியில் எனக்கு ஆசனம் ஒதுக்கப்பட்டுள்ளது.

நான் அமைச்சர் அல்ல. எனவே அந்த வரிசையில் அமர்வது பொருத்தமாக அமையாது. இந்த விடயம் குறித்து அவைத் தலைவருக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளேன்.

மக்களுக்கு சேவையாற்றுவதே தவிர, நாடாளுமன்றில் சென்று அமர்ந்து கொள்வது எனது நோக்கமன்று என அவர் தெரிவித்துள்ளார்.

உயர்கல்வி இராஜாங்க அமைச்சராக கடமையாற்றி வந்த ரஜீவ விஜேசிங்க, உயர்கல்வி அமைச்சர் கபீர் ஹாசீமுடன் ஏற்பட்ட முரண்பாட்டைத் தொடர்ந்து பதவியை இராஜினாமா செய்திருந்திருந்தார்.

இதேவேளை, அண்மையில் நடைபெற்ற நாடாளுமன்ற அமர்வுகளின் போது பிரதமர் ரணில் விக்ரமசிங்க. ரஜீவ இன்னமும் அமைச்சரே என குறிப்பிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (3-5)

# பேசும் படம்-47

இடம்:- A9 வீதி புளியங்குளம்.



யாருடா இந்த வேலையைப் பண்ணினது?

**குறிப்பு :** அன்பு வாசகர்களே! நீங்களும் பேசும் படங்களை உங்கள் பெயர், முகவரி, சம்பவம் நிகழ்ந்த இடம் என்பவற்றுடன் அனுப்பி வைக்க முடியும்.

மின்னஞ்சல் : valampesumpadam@gmail.com
facebook: www.facebook.com/valam.puri.16
தபால் முகவரி :ஆசிரியர், பேசும் படம்,வலம்புரி,
இல.03, 2-ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
அல்லது நேரில்.

அனுப்பியவர்:
இ.அருமைநாதன்
வட்டக்கச்சி

உங்கள் புகைப்படங்களை பிரசுரிக்க விரும்பினால் பேசும் படத்துடன் அனுப்பி வைக்கவும்.

# சுஷ்மாவை முஸ்லிம் காங்கிரஸ் சந்தித்துப் பேச்சுவார்த்தை

(கொழும்பு)

இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் குழுவினர் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

கொழும்பு தாஜ் சமுத்ரா கோட்டலில் நேற்று முன்தினம் மாலை 3.40 இற்கு இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

மேற்படி சந்திப்பில் ஸ்ரீல.மு.கா. தலைவரும் நகர அபிவிருத்தி, நீர்வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சருமான ரவூப் ஹக்கீம், கட்சியின் செயலாளரும் சுகாதார இராஜாங்க அமைச்சருமான எம்.ரி.ஹஸன் அலி, கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹபீஸ் நசீர் அஹமட் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இச்சந்திப்பின்போது வட மாகாணம் இந்திய அரசால் எவ்வாறு கவனிக்கப்படுகிறதோ, அதுபோன்றே கிழக்கு மாகாணத்திலும் தமிழ், முஸ்லிம் மக்களை இந்தியா கவனிக்கும் என்று சுஷ்மா சுவராஜ் கூறியதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் கிழக்கில் அமைந்துள்ள ஆட்சி சம்பந்தமாகவும் விரிவாகப் பேசப்பட்டதுடன் இலங்கைக்கு எதிர்வரும் 13ஆம் திகதி வருகை தரவிருக்கும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் வருகையின் விபரம் பற்றியும் ஆராய்ந்தனர். (3-5)

# நீலப்படையணியினருக்கு மட்டும் தொழில் வாய்ப்பு விசாரணை நடத்தப்படும் என்கிறார் நிதியமைச்சர்

(கொழும்பு)

நீலப் படையணியின் உறுப்பினராக இருந்தால் மட்டுமே கடந்த ஆட்சியில் இளைஞர், யுவதிகள் தொழில்வாய்ப்பைப் பெற்றுக்கொள்ள முடியுமாக இருந்தது எனக் கூறப்படும் விடயம் தொடர்பில் விசாரணை நடத்தி, உரியவர்களுக்குத் தண்டனை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க நாடாளுமன்றில் தெரிவித்தார்.


நாடாளுமன்றில் கடந்த வெள்ளிக் கிழமை இடம்பெற்ற வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் ஜனநாயக தேசியக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முன்னதாக அநுரகுமார திஸாநாயக்க தனது கேள்வியில், "கடந்த அரசின் ஆட்சியில் அரச துறையில் சரியான முறையில் ஆட்சேர்ப்பு இடம்பெறவில்லை. குறிப்பாக, இளைஞர், யுவதிகள் பரீட்சையில் சித்தி பெற்று, நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றி, தொழில் தகைமை உடையவர்களாக இருந்தாலும், தாம் விரும்பியோ, விரும்பாமலோ நீலப் படையணியின் உறுப்பினராக இருக்க வேண்டிய நிலை இருந்தது.


அதுதான் இளைஞர், யுவதிகளுக்கு இருந்த பிரச்சினை. இதில் அவர்களது தவறு இல்லை. அவர்களைத் தவறான முறையில் சேவையில் இணைத்த அதிகாரிகள் மீது தான் தவறு உள்ளது. எனவே, இது தொடர்பில் விசாரிக்க வேண்டும்" என்று கோரிக்கை விடுத்தார். இதற்குப் பதிலளித்த நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க, இதுபோல வழங்கப்பட்ட நியமனங்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதுடன், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எதிராக தண்டனை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார். (3-5)



இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மாவுடன் தமிழ்க்கூட்டமைப்பு...



சுஷ்மா சுவராஜுடன் மனோகணேசன் மற்றும் கட்சி உறுப்பினர்கள் சந்தித்தபோது...



சுஷ்மா சுவராஜ் முஸ்லிம் காங்கிரசை சந்தித்தபோது...



பிரதமர் ரணிலுடன் தீவிர ஆலோசனையில் சுஷ்மா...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





யாழ்.இராமநாதன் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் இடம்பெற்றது. இதில் விருந்தினர்கள் மாணவர்களின் பாண்ட் வாத்திய இசையுடன் அழைத்து வரப்படுவதையும் மங்கல விளக்கேற்றலையும் அனைவரின் கவனத்தையும் ஈர்த்த மாற்று ஆற்றலுடைய மாணவர்களின் அணி வகுப்பையும் படங்களில் காணலாம்.





யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் இடம்பெற்றது. இதில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் மாணவர்களின் இடைவேளை நிகழ்ச்சியையும் வெற்றி பெற்ற இல்லத்திற்கு வெற்றிக்கேடயம் வழங்குவதையும் படங்களில் காணலாம்.







யாழ்.வேலணை கிழக்கு மகாவித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டியின் போது...





தென்மராட்சி இலக்கிய அணியின் வள்ளுவர் விழா அண்மையில் சாவகச்சேரி ஐங்கரன் மணி மண்டபத்தில் ஓய்வு நிலை அதிபர் அ.கைலாயப்பிள்ளை தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் அதிபர் ஆ.தங்கவேலு தம்பதியினர் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும் சிலேடை கவிரத்தினம் க.கணபதிப்பிள்ளையின் ***மணிவாசகர் வரலாறு*** எனும் நூலை ஓய்வுநிலை பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் வெளியிட்டு வைக்க முதற்பிரதியை தென்மராட்சி பலநோக்கு கூட்டுறவுச் சங்க தலைவர் செ.மகேஸ்வரன் பெற்றுக்கொள்வதையும் இலக்கிய ஆணைக்குழு கலாநிதி ஸ்ரீ பிரசாந்தன் நடுவராக கலந்து கொண்ட விவாத அரங்கையும் படங்களில் காணலாம்.


யாழ்.வேலணை மத்திய கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டியின் போது...


நிகழ்வின் நிழல்கள்




இலங்கை வங்கியின் ஓய்வூதியர் சங்கத்தின் 7 ஆவது பொதுக் கூட்டத்தில் மானிப்பாய் இலங்கை வங்கியின் ஓய்வுபெற்ற முகாமையாளர் எம்.நாகேந்திரம் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டதைப் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்வினையின் பலனை அனுபவிக்கிறார் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ



(கொழும்பு)

**தனது ஆட்சியில் கட்சிகளை பிளவுபடுத்திய முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தற்போது அதன் பலனை அனுபவிக்கின்றார் என ஐக்கிய தேசிய கட்சியின் முக்கிய பிரமுகர் மஞ்சு ஸ்ரீ அரங்கல தெரிவித்துள்ளார்.**

மகிந்த அதிகாரத்தில் இருந்த போது ஏனைய அரசியல் கட்சிகளை வளரவிடாமல் அவற்றை பிளவுபடுத்தி வந்தார்.

அவரது இச்செய்வினையின் பலனினா லேயே அவரோடு அருகில் இருந்தவர்களே இன்று அவரை ஒதுக்கி வைத்து விட்டார்கள்.

ஏனைய கட்சிகளை பிளவுபடுத்தி அதன் மூலம் நிலைப்படுத்தி கொள்ள வேண்டும் என நினைத்த சுயநலத்தின் பலனே இது என மஞ்சு ஸ்ரீ அரங்கல குறிப்பிட்டுள் ளார்.

இதேவேளை மகிந்த ஆட்சியின் போது யாராவது இருவர் சேர்ந்து பேசினால் கூட அவர்களை பிரிக்காமல் இவருக்கு நித்திரை வராது என மத்திய மாகாண சபை அசாத் சாலி தேர்தல் பிரசாரங்களின் போது தெரிவித்தி ருந் தமை குறிப்பிடத்தக்கது. (3-5)

# கயிறு கொடுக்கிறார் விமல் வீரவன்ச தூக்கில் தொங்க மறுக்கிறார் ரஞ்சன்

சமூக சேவைகள், நலன்புரி மற்றும் கால்நடை வளர்ப்பு அபிவிருத்தி பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க சொன்னது போல தூக்கிட்டு தற்கொலை செய்து கொள்வதற்கு கயிறு தருகிறேன். தற்கொலை செய்து கொள்ள அவர் ஆயத்தமா என் முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச கேள்வியெழுப்பியுள்ளார்.

மகிந்தவுக்கு ஆதரவு தெரிவித்து கடந்த வெள்ளியன்று கண்டியில் பேரணியொன்று இடம்பெற்றது. இப்பேரணிக்கு 10 ஆயிரத்திற்கும் அதிகமானோர் கலந்துகொண்டால் தான் தூக்கிட்டு தற்கொலை செய்து கொள்வதாக பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்திருந்தார்.

குறித்த பேரணிக்கு 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். இந்நிலையிலேயே கயிறு தயாராகவுள்ளது தாங்கள் தூக்கிட்டு தற்கொலை செய்து கொள்ள தயாரா என விமல், ரஞ்சனிடம் கேள்வியெழுப்பியுள்ளார். (3-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 100 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 80 | 90 |
| பச்சைமிளகாய் | 60 | 120 | 100 | 80 |
| தக்காளி | 40 | 60 | 100 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 50 | 50 |
| கோவா | 40 | 60 | 70 | 60 |
| கரட் | 200 | 120 | 130 | 120 |
| பூசணி | 60 | 80 | 60 | 100 |
| புடோல் | 40 | 60 | 70 | 80 |
| வாழைக்காய் | 100 | 80 | 90 | 80 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 80 | 80-100 |
| பெரிய வெங்காயம் | 90 | 100 | 60 | 80 |
| பாகற்காய் | 100 | 60 | 70 | 120 |
| வெண்டிக்காய் | 60 | 80 | 60 | 100 |
| கருணைக் கிழங்கு | — | 50 | 60 | 70 |
| பயற்றங்காய் | 100 | 70 | 70 | 100 |
| லீக்ஸ் | 200 | 120 | 120 | 240 |
| பீற்றூட் | 60 | 50 | — | 80 |
| கறிமிளகாய் | 200 | 140 | 130 | 160 |
| முருங்கைக்காய் | 250 | 450 | — | 400 |
| போஞ்சி | 200 | 150 | 70 | 160 |
| கத்தரிதம்புள்ள | — | 80 | 80 | 80 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 20 | 100 | 50 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 50 | 50 | 40-50 |
| இராசவள்ளி | 140 | 150 | 100 | 100 |
| வெங்காயப்பூ | 80 | 160 | — | 160 |

# ஆபிரிக்க பிராந்திய வலய நாடுகளுடன் தொடர்புகளைப் பேண விசேட தூதரகம்

ஆபிரிக்கபிராந்தியவலயநாடுகளுடன் தொடர்புகளைப் பேண விசேட தூதரகமொன்று அமைக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆபிரிக்க கண்டனத்தின் அனைத்து நாடுகளுடனும் உறவுகளைப் பேணிக் கொள்ளும் நோக்கில் இந்த தூதரகம் அமைக்கப்பட உள்ளதாக வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

தூதரகத்தை அமைப்பதன் மூலம 57 ஆபிரிக்க நாடுகளுடன் தொடர்புகளைப் பேண முடியும் என தெரிவிக்கப்படுகிறது.

எதியோப்பியாவின் தலைநகர் அடிஸ் அபாபாவில் இந்த தூதரக காரியாலயம் அமைக்கப்படவுள்ளது.

இந்த தூதுரகத்தின் ஊடாக ஆபிரிக்க நாடுகளுடன் நேரடித் தொடர்புகளைப் பேண முடியும் என பிரதி வெளிவிவகார அமைச்சர் அஜித் பி பெரேரா சிங்களப் பத்திரிகையொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு நாட்டுக்காகவும் தனித்தனியாக தூதரகங்களை அமைப்பதனை விடவும் ஒரே தூதரகத்தை அமைத்து உறவுகளைப் பேண முடியும் என குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு செய்வதனால் பொருளாதார ரீதியிலும் நன்மை ஏற்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (3)

## (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 305




இலக்கியா நகுலன்

பணம் நிம்மதி தராது என்று எந்த ஏழையும் சொன்னதில்லை... நிம்மதி தராத அந்த பணத்தை இழக்க எந்த பணக்காரனும் தயாராகவும் இல்லை...!

ருக்சி சிவகுமார்



லீவு போட்டு தூங்கிறவன் மனுசன். ஆனா எவ்ளோ ரயட் இருந்தாலும் ஆபீசுக்கு போய் தூங்கிறவன் பெரிய மனுசன்...

தனு தனுசியா



மனைவி : என்னங்க பின்னாடி இருந்து ஒருத்தன் என் கால சுரண்டுறான்க....!
கணவன் : அப்பிடியா...! திரும்பி உன் முகத்தைக் காட்டு ,நாதாரி செத்து தொலையட்டும்...

பிரவின் தாஸ்




ராஜா தனு




தர்சன் கவிதா




**நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிறந்த ஆயுதம்!

சக்கரவர்த்தி அக்பர் சில பிரமுகர்களுடன் நந்தவனத்தைச் சுற்றி வலம் வந்துகொண்டிருந்தார்.

அவருடன் பீர்பாலும் இருந்தார். நந்தவனத்தில் மலர்ந்திருந்த ரோஜாப்பூக்களைப் பார்த்துப் பரவசமான அக்பர், "ஆகா! பூமியில் ஒரு சொர்க்கம் உண்டு எனில் அது இந்த நந்தவனம் தான்!" என்றார்.

"ஆம், பிரபு! நீங்கள் கூறுவது சரி!" என்று அனைவரும் ஆமோதிக்க, பீர்பால் மட்டும் மௌனமாக இருந்தார்.

அதைக் கவனித்த அக்பர், "பீர்பால்! சற்றுமுன் நான் கூறியதில் உனக்கு உடன்பாடு இல்லையா?" என்று கேட்டார்.


"பிரபு! இந்த நந்தவனத்திற்கு அழகைத் தருவது இந்த ரோஜா மலர்கள்தான். ஆனால் அழகு எங்கே உள்ளதோ, அங்கே அபாயமும் உண்டு!" என்றார் பீர்பால்.

"ஓகோ! ரோஜாப்பூக்களில் உள்ள முட்களைக் குறிப்பிடுகிறாயா?" என்று அக்பர் கேட்டார்.

"இல்லை, பிரபு! நான் அவற்றைச் சொல்லவில்லை!" என்று பீர்பால் சொல்ல, "அப்படியானால், ரோஜாச் செடிகளின் உள்ளே மறைந்திருக்கும் பாம்புகளைக் குறிப்பிடுகிறாயா?" என்று அக்பர் கேட்டார்.

"மனிதனால்தான் பாம்புகளுக்கு அபாயம்! நம் காலடியோசையைக் கேட்டவுடனேயே அவை பயந்து ஓடி விடுகின்றன!" என்றார் பீர்பால்.







"பின் நீ எதைத்தான் அபாயம் என்று குறிப்பிடுகிறாய்?" என்று சலிப்புடன் அக்பர் கேட்க, "பிரபு! அபாயம் என்பது அழகை மட்டுமல்ல வலிமை, செல்வம், புகழ் ஆகிய அனைத்தையும் அபாயம் சூழ்ந்து உள்ளது.

தாங்கள் பாரதத்தின் மிக வலிமை பொருந்திய, மிகப் புகழ் பெற்ற, சகல செல்வங்களையும் ஒருங்கே பெற்ற சக்கரவர்த்தி!

ஆனால், மேற்கூறிய விடயங்களினால், அண்டை ராஜ்யத்து மன்னர்கள் தங்கள் மீது பொறாமை கொண்டுள்ளனர். தங்களை வீழ்த்தி வெற்றிவாகை சூட சதித்திட்டம் இட்டவாறு உள்ளனர்.

அதனால்தான், பூலோக சொர்க்கம் என்று ஒன்று இருப்பதாக நான் எண்ணவில்லை" என்றார்.

பீர்பாலின் சொற்கள் அக்பரை சிந்திக்கத் தூண்டின. மறுநாள் சபையில் அக்பர், "திடீரென்று ஒருவனை அபாயம் சூழ்ந்தால், அவனுடைய தற்காப்புக்காகப் பயன்படும் சிறந்த ஆயுதம் எது?" என்று சபையோர்களை நோக்கி ஒரு கேள்வி கேட்டார்.

"வாள்!" என்றார் ஒருவர். "இல்லை!" என்று மறுத்த பீர்பால், சில சமயங்களில் வாள் பிடித்த கரம் செயலற்றுப் போவதுண்டு!" என்றார்.

"எதிரி மீது தொலைவிலிருந்தே குறி பார்த்து ஈட்டியை வீசுவதன் மூலம் அபாயத்திலிருந்து தப்பலாம்!" என்றார் மற்றொருவர்.

"பதற்றத்தில் ஈட்டியின் குறி தவறினால், அது பயன்படாது!" என்றார் பீர்பால். "சரிதான்! வாள், ஈட்டி என்று எந்த ஆயுதமுமே சரியில்லை என்றால், எதுதான் ஆபத்தில் பயன்படும்?" என்று அக்பர் கேட்க,

"சூழ்நிலைக்கு ஏற்றவாறு சிந்தித்து செயற்படும் நமது அறிவே சிறந்த ஆயுதம் ஆகும்!" என்றார் பீர்பால்............ (தொடரும்)

## யூரி ககாரின்



யூரி அலெக்சியேவிச் ககாரின், மாஸ்கோ மாநகருக்கு மேற்கே க்ஸாட்ஸ்க் பகுதியில் உள்ள குளுஷினோ எனனும் இடத்தில் 1934 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 9 ஆம் திகதி பிறந்தார்.

இவர் விண்வெளிக்கு வெற்றிகரமாகப் பயணித்த முதல் விண்வெளி வீரராவார். அத்துடன் பூமியை விண்ணில் வலம்வந்த முதல் மனிதரும் இவரே. ககாரின் ஏப்ரல் 12, 1961 அன்று சோவியத் ஒன்றியத்தின் வஸ்டொக் - 1 விண்கலத்தில் பயணித்து சுமார் 108 நிமிடங்கள் விண்ணில் சஞ்சரித்தார்.

இவரது பெற்றோர் கூட்டு விவசாயப் பண்ணை ஒன்றில் கடமையாற்றியவர்கள். சரடோவ் உயர் தொழில்நுட்பக் கல்லூரியில் தொழிற் பயிற்சி பெற்று அங்கு மென் விமான ஓட்டுநராக பகுதிநேரங்களில் பயிற்சி பெற்றார். 1955 இல் ஒரென்பூர்க் விமான ஓட்டுநர் பாடசாலையில் (Orenburg Pilot's School) இணைந்து மிக்-15 போர் விமான ஓட்டுநராக பயிற்சி பெற்று வெளியேறினார். அங்கு வலென்டினா கொர்யசோவா என்பவரை சந்தித்து 1957 இல் திருமணம் புரிந்தார். அவரது முதல் பணி நோர்வே எல்லையிலுள்ள மூர்மன்ஸ்க் பகுதியில் உள்ள இராணுவ விமானத்தளத்தில் ஆரம்பமானது.

1960 இல் மனிதனை விண்ணுக்கு அனுப்பும் சோவியத் விண்வெளித் திட்டத்தில் இணைந்துகொண்ட 20 விண்வெளி வீரர்களில் ஒருவரானார் யூரி.

இவர்களுக்கு அங்கு உடலியல் ரீதியிலும் உளவியல் ரீதியிலும் மிகவும் கடுமையான பயிற்சி கொடுக்கப்பட்டது. கடும் பயிற்சிக்குப் பின்னர் ககாரின், கெர்மன் டீட்டோவ் ஆகிய இருவரும் விண்வெளிப் பயணத்திற்குத் தெரிவானார்கள். இவர்களில் ககாரின் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் உயர்பீடத்தால் விண்வெளியில் பயணிக்கும் முதல் மனிதராக அனுப்புவதற்காகத் தெரிவு செய்யப்பட்டார்.

ககாரின் ஏப்ரல் 12, 1961 இல் வஸ்தோக் 3KA-2 (வஸ்தோக் 1) விண்கலத்தில் பயணித்து விண்வெளிக்கு சென்ற முதல் மனிதன் என்ற பெயரைப் பெற்றுக்கொண்டார். விண்கலத்தில் முதன்முதல் பூமியை ஒரு முறை வலம் வந்தார்.




- 1847 - ஐக்கிய அமெரிக்காவின் படைகள் ஜெனரல் வின்ஃபீல்ட் ஸ்கொட் தலைமையில் மெக்சிக்கோவைத் தாக்கின.
- 1919- எகிப்தில் 1919 புரட்சி வெடித்தது.
- 1923 - விளாடிமிர் லெனினுக்கு மூன்றாம் தடவையாக மாரடைப்பு ஏற்பட்டது.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: அமெரிக்க பி-29 போர் விமானங்கள் டோக்கியோவில் குண்டுகளை வீசியதில் ஏற்பட்ட தீச்சூறாவளியினால் 100,000 பேர் கொல்லப்பட்டனர்.
- 1956 - ஜோர்ஜியாவில் இடம்பெற்ற மாபெரும் மக்கள் எதிர்ப்புப் போராட்டம் சோவியத் இராணுவத்தினரால் நசுக்கப்பட்டது.
- 1957 - அலாஸ்காவில் அண்ட்றியானொவ் தீவுகளில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் பலத்த சேதமும் ஆழிப பேரலையும் ஏற்பட்டது.
- 1959 - பார்பி பொம்மை முதன் முதலாக விற்பனைக்கு வந்தது.
- 1967 - ஜோசப் ஸ்டாலினின் மகள் சிவெட்லானா அலிலுயேவா ஐக்கிய அமெரிக்காவுக்குத் தப்பிச் சென்றார்.
- 1986 - சலேஞ்சர் விண்ணோடத்தின் அழிந்த சிதைவுகளை ஐக்கிய அமெரிக்காவின் ஆழ்கடலோடிகள் கண்டுபிடித்தனர். இறந்த ஏழு விண்வெளி வீரர்களினதும் உடல்கள் உள்ளே இருந்தன.
- 2006 - சனியின் துணைக்கோளான என்செலாடசில் திரவ நிலையில் நீர் கண்டுபிடிக்கப்பட்டது.

### பிறப்புக்கள்

- 1923 - வால்ட்டர் கோன், நோபல் பரிசு பெற்றவர்.
- **1934 - யூரி ககாரின், விண்வெளி சென்ற முதலாவது மனிதர் (இ. 1968)**
- 1943 - பாபி ஃபிஷர், அமெரிக்க சதுரங்க மேதை (இ. 2008)
- 1954 - பொபி சாண்ட்ஸ், ஐரிஷ் குடியரசு இராணுவத்தைச் சேர்ந்த தன்னார்வலர் (இ. 1981)

### இறப்புக்கள்

- 1974 - ஏர்ல் சதர்லாண்ட், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1915)
- 1983 - ஊல்ஃப்வொன் இயூலர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1905)
- 1992 - மெனாச்சிம் பெகின், இசுரேலியப் பிரதமர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1913)
- 1997 - நொடோரியஸ் பி.ஐ.ஜி., ராப் இசைக் கலைஞர் (பி. 1972)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் வாழ்க்கை வரலாறு



முயல்களுடன் ரஜினி- அருகே கௌதமி மற்றும் குழந்தைகள்

ஊரில் இருக்கும் ராஜாவின் அப்பா விஜயகுமார். மகனுக்குத் தெரியாமல் சின்ன வீடு ஒன்றை செட்டப் செய்து கொள்கிறார். சின்ன வீடு ஒய்.விஜயாவும் அவளது தம்பி ராதா ரவியும் பணக்காரரின் சொத்துக்கு குறி வைத்துக் காத்திருக்கிறார்கள்.

சின்னவீட்டின் போலி அன்பை தெரிந்துகொண்ட பணக்காரர், அவளையும், அவளது தம்பியையும் வீட்டை விட்டுத் துரத்தியடிக்கிறார், ஆனால் அவர்களோ இரவில் பணக்காரர் போதையில் இருக்கிற சமயம், அவரை மாடியில் இருந்து கீழே தள்ளி கொலை செய்துவிடுகிறார்கள்.

அப்பாவை பார்க்க அமெரிக்காவிலிருந்து ராஜா வருகிறான். சென்னை விமான நிலையத்தில் இறங்கியதுமே தன் நண்பர்கள் மூலம் அப்பாவின் மரணம் பற்றி அறிந்துகொள்கிறான். அப்பாவின் சின்னவீட்டை அவன் பார்த்ததில்லை. சின்னவீட்டுக்கும் அவனைத் தெரியாது. இதனால் உண்மையை அறிய, சைக்கிள் ரிக்ஷா ஓட்டும் தனது நண்பன் ஜனகராஜை தனது பெயரில் தங்கள் பங்களாவுக்கு அனுப்பி வைக்கிறான். ஜனகராஜின் கார் டிரைவராக ராஜாவும் அந்த பங்களாவுக்குள் அடியெடுத்து வைக்கிறான்.

சில நாட்களிலேயே சொத்துக்காக தனது அப்பா கொல்லப்பட்ட உண்மையை கண்டுபிடிக்கிறான். சின்னவீடு ஒய்.விஜயாவையும், அவள் தம்பி ராதாரவியையும் பொலிஸ் வளையத்துக்குள் சிக்க வைக்க திட்டம் தீட்டுகிறான்.

இந்த நேரத்தில் பணக்காரர் வாரிசு ஜனகராஜ் இல்லை. டிரைவர்தான் வாரிசு என்பதை ராதா ரவி கண்டுபிடித்து, ஜனகராஜை கொலை செய்கிறார். அந்தப் பழியை ராஜா மீது போட்டு விடுகிறார்.

ராஜாவுக்கு கோர்ட்டு தூக்குத் தண்டனை விதிக்கிறது. ஜெயிலில் அடைக்கப்பட்ட ராஜா, உண்மைக் குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்தும் எண்ணத்தில் ஜெயிலில் இருந்து தப்புகிறான்.

மற்றொரு ரஜினி அப்போதுதான், தன்னை அப்படியே அச்சில் வார்த்து போலிருக்கும் சின்னராசுவை காண்கிறான். ராஜாவைப் பார்த்து சின்னராசுவும் அதிர்ந்து போகிறான். ராஜா தனது இக்கட்டான சூழலை சின்னராசு விடம் விவரித்து, "என்னைப் போல உள்ள நீ, எனக்காக 15 நாள் ஜெயிலில் இருந்தால் அதற்குள் நான் உண்மைக் குற்றவாளிகளை தகுந்த ஆதாரத்துடன் பொலிசில் ஒப்படைத்து விடுவேன். இந்த முயற்சி 15 நாட்களில் முடியாவிட்டால் கூட, ஜெயிலுக்கு வந்து எனக்கான தண்டனையை ஏற்றுக கொள்வேன் என்கிறான்.

சின்னராசுவுக்கும் ஒரு நெருக்கடி இருந்தது. கிராமத்து மாமா பெண் மீது உயிரையே வைத்திருந்தான். மாமா மகளுக்கும் அவன் மீது காதல். மாமா பணம் படைத்தவர். சின்னராசுவிடமோ அவர் அளவுக்கு அந்தஸ்து இல்லை. என்றாலும் மாமா மகள் தந்த தைரியத்தில் மாமாவிடம் பெண் கேட்கச் செல்கிறான். அவரோ தனக்கு சரிநிகர் அந்தஸ்து இல்லாதவன் என்று கூறி அவமானப்படுத்தி விடுகிறார். முடிவாக, ஒரு மாதத்திற்குள் 50 ஆயிரம் பணத்தைக் கொண்டு வந்தால் பெண் தருகிறேன் என்று கெடு வைக்கிறார்.

இந்த மாதிரியான சூழ்நிலையில் ராஜாவை சந்தித்த சின்னராசு, தனது நெருக்கடியை ராஜாவிடம் சொல்கிறான். தனக்கு மட்டும் உதவினால் பணமும் தந்து, திருமணமும் செய்து வைக்கிறேன் என்று ராஜா வாக்குறுதி கொடுக்கிறான். அதை நம்பி சின்னராசு ஜெயிலுக்கு போகிறான். ராஜா துப்பறிந்து எதிரிகளை கண்டு பிடிக்க தாமதமாகிறது. சின்னராசுவுக்கோ ஜெயிலில் ஒவ்வொரு நாளும் பயம். ராஜாவை தூக்கில் போடப்போகும் நாளும் வருகிறது. தான் ராஜா இல்லை என்று சொல்ல முடியாத நிலையில், சின்னராசு தூக்கு மேடையை சந்திக்கிறான். ஆனால், கடைசி நிமிடத்தில் ராஜா கோர்ட்டில் குற்றவாளிகளை ஒப்படைத்து, தனக்காக தூக்கில் தொங்கவிருந்த சின்னராசுவை காப்பாற்றுகிறான்.

(தொடரும்)

# கருவாச்சி காவியம்

## வைரமுத்து- 96



அப்பன் அவன்கிட்ட ஒப்படைச்சிட்டுச் செத்தது அவன் ஆத்தாளையும் ஒரு பெட்டிக் கடையையும்.

ஆத்தாள செலவு கணக்குல சேத்துட்டான். பொட்டிக்கடையை வரவு வைச்சுக்கிட்டான்.

**அவன் அப்பன் ஒரு சத்தியவந்தன். பொருளு வித்துப் பொழைக்கலாம் புத்திய வித்துப் பொழைக்கலாம். நேர்மையை வித்துப் பொழைக்கக் கூடாதுடா மகனேன்னு சொல்லிட்டுச் செத்தாரு.**

அவரு பொணத்தோட சேத்து அவர் புத்திமதியையும் புதைச்சுட்டான் முத்துக்காமு.

போதுமடா அப்பன் பொழைச்ச பொழப்புன்னு பொட்டிக் கடையில களவாணிப் பொருள் வாங்கி விக்க ஆரம்பிச்சான்.

கெழங்கு, வாழத்தாரு, முட்டை, நெலக்கடலையெல்லாம் களவாண்டு வர்ற ஆளுகளுக்குப் பத்துக்கு ஒரு வெல குடுத்தாப் போதும். குடுத்தத வாங்கிட்டுக்கும்பிட்டுப் போயிருவாக.

அதுல அடிப்பானய்யா முத்துக்காமு லாபம்.

ஒண்ணுக்கு அஞ்சா வெலாச் சொல்லி ஒண்ணுக்கு மூணா வித்துருவான்.


அப்படிச் சம்பாதிச்சுக் கல்லாவும் ஆளும் கனத்துப் போனான்.

அதுலதான் வந்து சேந்துச்சு ஒரு ஆபத்து.

அவுக ஆத்தா செத்து ஆறுமாசமிருக்கும்.

**விடிய்ய கடை தெறக்க ஒரு அம்பது திருட்டுத் தேங்காயத் தலைச் சொமையாச் சொமந்து கடையில கொண்டு வந்து எறக்கிட்டான் பொத்தக்காதன் திருட்டு ஆளாயிருந்தாலும் மொரட்டு ஆளு.**

ஒரு தேங்காய்க்கு ஒரணா மேனிக்கு வாங்கிட்டு போயிட்டு வாரனப்பான்னு போயிட்டான்.



போனவன் மறுநாள் திரும்பி வந்து காளியம்பன் கோயிலுக்குச் செதறு தேங்கா போடனுமப்பா ரெண்டு தேங்கா குடுன்னு. கேட்டிருக்கான்.

ஆறணா எடுத்து வைவி. ஒரு தேங்கா மூணு அணான்னான் முத்துக்காமு.

இதென்னப்பா கூத்தாயிருக்கு ஒனக்கு ஒரணவுக்கு நான் வித்த கதயை எனக்கே மூணு அணாவுக்கு விக்கிறியே இது நியாயமா?ன்னு பொத்தக்காதன் கேக்க ஊரரான் பொருளுக்கு நான் ஒரணாக் குடுத்தனே என் பொருளுக்கு நீ மூணு அணாக் குடுத்தா என்ன?ன்னு முத்துக்காமு கேக்க காசக் குடுத்துட்டுப் பேசாம வாங்கிட்டுப் போயிட்டான் பொத்தக்காதன்.

**கோயில்ல போயி ஒடைச்சுப் பாத்தா ரெண்டும் அழுகுன தேங்கா. கெட்ட கோவத்தோட புத்திமாறி வாரான் பொத்தக்காதன். ஏண்டா ஆறணா வாங்குனதுமில்லாம அழுகுன தேங்காயா குடுத்துவிட்ட? மாத்துத் தேங்கா குடுக்கல மரியாதை கெட்டுப்போகும்.**

**அதெல்லாம் குடுக்க முடியாது. ஒன் நேரம் நல்லாயில்லைன்னா நான் என்னா பண்ணுவேன். என் நேரமா நல்லால்ல, ஒன் நேரந்தான் நல்லா இல்லடீ.**

சும்மா தேங்காய் கடையில யான புகுந்த மாதிரி அடிச்சு ஒடச்சு மிதிச்சு அப்பளம் பண்ணிப் பொருள்கள எடுத்து வீதியில எறிஞ்சு பொட்டிக் கடையை இழுத்துத் தரையில போட்டு சாச்சுத் தேச்சு வீட்டுக்குள்ள புகுந்து அதுவரைக்கும் அவன் சன்னஞ் சன்னமாக சேத்து வைச்சிருந்த சம்பாத்தியத்தையும் எடுத்துக்கிட்டு போடி மெட்டு மேல ஏறி மூணாறுல ஓடி ஒளிஞ்சு போனான் பொத்தக்காதன்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள் ஆளுமையை வளர்ப்பதன் ஊடாக தடைகளை தகர்க்க முடியும்

## மகளிர் தின நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக ஓய்வுபெற்ற முதுநிலை விரிவுரையாளர்





(கிளிநொச்சி)

**பெண்கள் தங்களின் ஆளுமையை வளர்ப்பதன் ஊடாகவே தம்மீதான கட்டுப்பாடுகள், தடைகள் என்பவற்றை தகர்த்து எறியமுடியும் என யாழ்ப்பாண பல்கலைக்கழக ஓய்வு பெற்ற முதுநிலை விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் தெரிவித்துள்ளார்.**

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்ட மாதர் அணியின் ஏற்பாட்டில் சர்வதேச மகளிர் தினம் நேற்று காலை 9 மணியளவில் பச்சிலைப்பள்ளி ப.நோ.கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு சர்வதேச பெண்கள் எழுச்சி நாள் எனும் தலைப்பில் கருத்துரை வழங்குகையிலேயே மேற்கண்டவாறு அவர் கூறியுள்ளார்.

அவர் தனதுரையில்,

பெண்கள் தமது ஆளுமையை உடல் ரீதியாகவும் ஆன்மீக ரீதியாகவும் தனிப்பட்ட திறமை ரீதியாகவும் வளப்படுத்த வேண்டும்.

இதன் ஊடாகவே பெண்கள் எழுச்சி பெற முடியும். இதற்கு சிறந்த உதாரணம் விடுதலைப் புலிகளின் மகளிர் படையணியாகும்.

அவர்கள் பிறருக்காக தமது உடலினைத் தியாகம் செய்தும் தொண்டு செய்தும் வாழ்ந்தனர். அக்காலம் பெண்கள் எழுச்சிபெற்ற காலப்பகுதியாக காணப்பட்டது.

பெண்கள் விடுதலை அடையும் போது தான் சமூகத்தின் விடுதலை உதயமாகின்றது. எனினும் கணவனை இழந்த பெண்கள் தலைமறைவாக வாழ்வதற்கும் பெண்கள் உரிமை, சுதந்திரம் மறுக்கப்பட்டவர்களாக வாழ்வதற்கும் காரணம் அவர்கள் தமக்கான ஆளுமையை வளப்படுத்தாமையாகும்.

உலக படைப்பில் ஆண், பெண் இருவருமே சமத்துவம் உடையவர்கள் என்பதை பெண்கள் உணர வேண்டும். உனக்கு நீயே நீதியாக செயற்பட வேண்டும். பெண்கள் அரசியலில் பங்கேற்கும் நிலை அதிகரிக்கப்பட வேண்டும்.

பொருளாதார வளர்ச்சியில் பெண்களின் பங்களிப்பு உயர்வாகக் காணப்பட்டாலும் சமூகத்தில் பெண்களுக்கான அந்தஸ்து சமமாகக் காணப்படவில்லை.

பெண்கள் குடும்பத்தை சிறந்த முறையில் பேணி சமூகத்தையும் சிறந்த முறையில் பேணுவதன் ஊடாக நாட்டினையும் சிறந்த முறையில் பேணமுடியும்.

எனவே பெண்கள் தமக்கான சிறந்த ஆளுமையினை வளர்ப்பதன் ஊடாக சமூக அடக்குமுறைக்கு எதிராக கிளர்ந்தெழுந்து ஆண், பெண் சமத்துவமான சூழ்நிலையினை உருவாக்க முடியும். (2-277)

# நிதி மோசடிகளில் ஈடுபட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

## அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவிப்

கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் சங்கங்கள் நிதி மோசடியில் ஈடுபட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என வடமாகாண போக்குவரத்து மீன்பிடி கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார்.

ஒரு மில்லியன் பெறுமதியில் 25 தையல் இயந்திரங்கள், 6 மாதர் சங்கங்களுக்கான சமையல் உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் ஆகியவற்றை முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் வைத்து அண்மையில் வழங்கிய பின்னர், உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து கூறுகையில்.

கிராமங்களின் அபிவிருத்தியில் கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் சங்கங்கள் முதன்மையானவை. மக்களுக்காக இயங்க வேண்டும்.

நிதி மோசடிகளில் ஈடுபடக்கூடாது. அவ்வாறு ஈடுபட்டால் சட்ட நடவடிக்கையெடுக்கப்படும். எனது அமைச்சுக்கு கிடைத்த 80 மில்லியன் ரூபாய் நிதியை ஐந்து மாவட்டங்களுக்கும் பிரித்து மேற்படி உபகரணங்களை வழங்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் நாகையா பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மாவட்டச் செயலாளர் நாகலிங்கம் வேதநாயகன், நாடாளுமன்ற உறுப்பினர் விநோநோதராதலிங்கம், மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் ஆகியோரும் கலந்துகொண்டனர். (2)




# அதிபர்கள், ஆசிரியர்களுக்கு விடுதி, போக்குவரத்து வசதிகள்

## துணுக்காய் வலயக்கல்வி பணிப்பாளர் தெரிவிப்பு

துணுக்காய் கல்வி வலயத்தின் கீழுள்ள 60 பாடசாலைகளில் கடமையாற்றி வருகின்ற அதிபர்கள், ஆசிரியர்களின் நலன் கருதி விடுதி வசதிகள் மற்றும் இலவச போக்குவரத்து வசதிகள் உட்பட அதிகஷ்ட மற்றும் கஷ்ட பிரதேச படிகளும் ஐந்து பாடசாலை தவிர்ந்த ஏனைய அனைத்து பாடசாலைகளுக்கும் வழங்கப்படுகின்றது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து இடமாற்றமாகி வரும் ஆசிரியர்களின் குடும்ப சூழ்நிலை கருதி, அவர்கள் விரும்பும் பாடசாலைக்கே இணைப்பு வழங்கப்படுவதாக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

துணுக்காய் கல்வி வலயத்தின் கீழுள்ள 60 பாடசாலைகளில் மு/மாங்குளம் மகா வித்தியாலயத்தில் ஆண் ஆசிரியர்களுக்கான விடுதியும் மு/கூழாமுறிப்பு அ.த.க.பாடசாலையில் ஆண், பெண் இருபாலாருக்குமான ஆசிரியர் விடுதியும் மட்டுமே அமைக்கப்பட வேண்டியுள்ளது.

ஏனைய அனைத்து பாடசாலைகளுக்கும் தூர இடங்களில் இருந்து கடமைக்கு வருகை தரும் ஆசிரியர்களுக்கு விடுதி வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அத்தோடு திங்கட்கிழமை அதிகாலை பருத்தித்துறையில் இருந்து கோப்பாய், கைதடி ஊடாக மாந்தை கிழக்கு கல்விக் கோட்டம், துணுக்காய் கல்விக் கோட்டம் ஆகியவற்றில் உள்ள பாடசாலைகளில் கடமை புரிந்து வருகின்ற யாழ்.மாவட்ட ஆசிரியர்களுக்கும் ஒட்டுசுட்டான் கல்வி கோட்டத்தில் கடமையாற்றி வருகின்ற ஆசிரியர்களுக்கு மாங்குளம் வரையிலுமான இலவச பேருந்து சேவை திங்கட்கிழமையும் மற்றும் வெள்ளிக்கிழமையும் நடைபெற்று வருகின்றது.

இதேவேளை 60 பாடசாலைகளில் 55 பாடசாலைகளில் கடமை புரிந்து வருகின்ற அதிபர்கள், ஆசிரியர்களுக்கு அதிகஷ்ட பிரதேச கொடுப்பனவு 2 ஆயிரத்து 500 ரூபாவும் மற்றும் கஷ்டபிரதேச கொடுப்பனவு ஆயிரத்து 500 ரூபாவும் வழங்கப்படுவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

# முள்ளிவாய்க்காலில் ஆரம்பமான நடைபயணத்திற்கு த.தே.ம.முன்னணி ஆதரவு

(முள்ளியவளை)

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் அறிக்கை பிற்போடப்பட்டமையை கண்டித்தும் உள்ளக விசாரணைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் அரசியல் கைதிகள் உடன் விடுதலை செய்யப்பட வலியுறுத்தியும் காணாமல் போனவர்களுக்கு என்ன நடந்தது என்பதனை கண்டறியவும் அவர்களுக்கு நீதி கிடைக்கவும் இன அழிப்புக்கு நீதி கிடைக்கவும் சர்வதேச பக்கச் சார்பற்ற விசாரணையை வலியுறுத்தியும் ஈழத் தமிழ் இளைஞர் பேரவை முள்ளிவாய்க்காலில் ஆரம்பித்துள்ள நடைபயணத்திற்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தனது முழுமையான ஆதரவை தெரிவித்து நடைபயணத்தில் இணைந்து கொண்டுள்ளது.

மேற்படி நடைபயணத்தில் ஈடுபடும் இளைஞர்களுடன் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் இளைஞர் அணித் தலைவர் இன்னாசிமுத்து சத்தியசீலன் தலைமையிலான அணி கடந்த 6 ஆம் திகதி விசுவமடுவில் இணைந்து கொண்டது.

அன்றையதினம் மாலை மேற்படி நடைபயணம் செய்த அணியினர் பரந்தனை அடைந்த போது பொலிஸார் பாதுகாப்பு காரணங்களை காட்டி இரவு வேளையில் நடக்க முடியாது என்று கூறி தடுத்துள்ளனர். அதனால் இரவு நடைபயணத்தை நிறுத்தி மீண்டும் மறுநாள் அதிகாலை 5 மணிக்கு பரந்தனில் இருந்து நடைபயணத்தை ஆரம்பித்துள்ளனர். (2)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதமராக இருக்க தகுதியில்லாதவர் ரணில் காங்கிரஸ் செய்தி தொடர்பாளர் கண்டனம்

(புதுடில்லி)

**வழிதவறி செல்லும் மீனவர்களையும், ஊடுருவல்காரர்களையும் வேறுபடுத்தி பாரக்க தெரியாத ரணில் விக்ரமசிங்க, பிரதமராக இருக்க தகுதி இல்லாதவர் என்று காங்கிரஸ் கட்சி கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.**

இலங்கை பிரதமர் ரணில் விக்ரமசிங்க தமிழக தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டி பெரும் சர்ச்சையை தோற்றுவித்துள்ளது. எல்லை தாண்டி வரும் தமிழக மீனவர்களை சுடுவோம் என்று மறைமுகமாக அவர் கூறினார். 'என் வீட்டுக்குள் ஒருவர் அத்துமீறி நுழைய முயன்றால், அவரை நான் சுடலாம். அதில் அவர் கொல்லப்படலாம்.

ஆனாலும், அப்படி செய்ய சட்டம் எனக்கு அனுமதி அளிக்கிறது' என்று அவர் கூறினார்.

இந்நிலையில், ரணில் விக்ரமசிங்கவுக்கு காங்கிரஸ் கட்சி கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இதுபற்றி அக்கட்சியின் செய்தித் தொடர்பாளர் அபிஷேக் சிங்வி சமூக வலைத்தளத்தில் எழுதி இருப்பதாவது,

ஆமாம், மிஸ்டர் ரணில், உங்கள் வீட்டில் ஊடுருபவர்களை நீங்கள் சுடலாம். ஆனால், பக்கத்தில் நின்று கொண்டிருக்கும் அப்பாவிகளை நீங்கள் சுட்டால், நீங்களும் சுடப்பட வேண்டியவர். கொலைக் குற்றத்துக்காக நீங்கள் விசாரிக்கப்படுவீர்கள். ஊடுருபவர்களையும், வழிதவறி செல்லும் மீனவர்களையும் வேறுபடுத்திப் பார்க்கத் தெரியாமல், சுடுவது ஒன்றே தீர்வு என்று கருதினால், ரணில் விக்ரமசிங்க, பிரதமராக இருக்க தகுதி இல்லாதவர்.

தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சியில், அண்டை நாடுகள் இந்தியாவை மிரட்டுகின்றன. அதற்கு அந்நாடுகளுக்கு மன உறுத்தல் இல்லாவிட்டால், இந்தியாவுக்கு மோசமான நாட்கள் நடப்பதாக அர்த்தம். 56 அங்குல மார்பு வேண்டும் எனக் கூறிய பிரதமர் மோடி, அதை வெளிநாட்டு அச்சுறுத்தல்களுக்கு பயன்படுத்த மாட்டார் என்று தோன்றுகிறது.

இவ்வாறு அபிஷேக் சிங்வி எழுதி உள்ளார். (3)

## பாரதச் செய்தி




இந்தியாவின் ஒடிசா கடற்கரையில் மணலில் உருவாக்கப்பட்டுள்ள காணாமற் போன மலேசிய விமானத்தின் சிற்பத்தை படத்தில் காணலாம்.

# அமைச்சர் கிருஷ்ணமூர்த்தியின் அமைச்சுப் பதவி பறிக்கப்பட்டது



தமிழக வேளாண்மைத் துறை அமைச்சராக இருந்த அக்ரி கிருஷ்ணமூர்த்தி அமைச்சரவையில் இருந்து நீக்கப்பட்டுள்ளார். அவர் கவனித்து வந்த வேளாண் துறை, அமைச்சர் வைத்திலிங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஆளுநர் மாளிகை நேற்று முன்தினம் மாலை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியுள்ளதாவது,

தமிழக அமைச்சரவையில் இருந்து வேளாண்மைத்துறை அமைச்சர் அக்ரி எஸ்.எஸ்.கிருஷ்ணமூர்த்தியை விடுவிக்க வேண்டும் என்று முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் பரிந்துரை செய்தார். இந்தப் பரிந்துரையை ஆளுநர் ஏற்றுக் கொண்டார்.

இதையடுத்து அக்ரி எஸ்.எஸ்.கிருஷ்ணமூர்த்தி, அமைச்சரவையில் இருந்து உடனடியாக விடுவிக்கப்படுகிறார்.

அவர் கவனித்து வந்த வேளாண்மை மற்றும் வேளாண்மை பொறியியல் உள்ளிட்ட துறைகளை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் ஆர்.வைத்திலிங்கம் கூடுதலாக கவனிப்பார். ஆர்.வைத்திலிங்கம் இனி வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் என அழைக்கப்படுவார்.

திருவண்ணாமலை தெற்கு மாவட்ட அ.தி.மு.க. செயலாளர் பொறுப்பில இருந்தும், கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் கர்நாடக மாநில தேர்தல் பொறுப்பாளர் பொறுப்புக்களில் இருந்தும் அக்ரி கிருஷ்ணமூர்த்தியை நீக்குவதாக அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா 2 நாட்களுக்கு முன்பு அறிவித்தார்

வேளாண்மைத் துறையில் உதவி செயற்பொறியாளராக பணியாற்றி வந்த முத்துக்குமாரசாமி என்பவர் கடந்த 20ஆம் திகதி திருநெல்வேலியில் புகையிரதம் முன் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டார். வேளாண்மைத் துறையில் ஓட்டுநர் பணியிடங்களை நிரப்புவது தொடர்பான விவகாரத்தில் மேலிடம் கொடுத்த நெருக்கடிகளால் பாதிக்கப்பட்டு முத்துக்குமாரசாமி தற்கொலை செய்து கொண்டதாக குற்றச்சாட்டு எழுந்தது.

இந்தச் சூழலில் அக்ரி கிருஷ்ணமூர்த்தி கட்சிப் பொறுப்பிலிருந்து நீக்கப்பட்டார். 'கட்சிப் பொறுப்பிலிருந்து மட்டுமல்லாமல் அமைச்சரவையில் இருந்தும் அவரை நீக்க வேண்டும் அவரை கைது செய்ய வேண்டும்' என்று தி.மு.க, காங்கிரஸ், பா.ம.க. உள்ளிட்ட கட்சிகள் வலியுறுத்தி வந்தன.

இந்நிலையில் அமைச்சர் பதவியில் இருந்தும் அக்ரி கிருஷ்ணமூர்த்தி நீக்கப்பட்டுள்ளார். (3)

# ரணிலின் கருத்துக்கு திருமாவளவன் கண்டனம்

(சென்னை)

பிரதமர் ரணில் விக்ரமசிங்க இந்தியாவுக்கும், தமிழக மீனவர்களுக்கும் எதிராகப் பேசியிருப்பதற்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் கண்டனம் தெரிவித்தார்.

இதுதொடர்பாக சனிக்கிழமை அவர் வெளியிடுள்ள அறிக்கையில்,

தமிழக தொலைக்காட்சி ஒன்றுக்குப் பேட்டியளித்த இலங்கை பிரதமர் ரணில் விக்ரமசிங்க, இந்தியாவுக்கும், தமிழக மீனவர்களுக்கும் எதிரான கருத்துகளை வெளிப்படுத்தியிருக்கிறார்.

இந்தியப் பிரதமர் மோடி இலங்கை செல்லவிருக்கும் நிலையில், இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் இலங்கையில் இருக்கும் நிலையில், அவர் இப்படிப் பேசியிருப்பது ஆத்திரமூட்டும் செயலாகும்.

பிரதமர் மோடி இலங்கை செல்லும் முன் அந்நாட்டின் சிறைகளில் உள்ள தமிழக மீனவர்கள் அனைவரையும் விடுதலை செய்ய வேண்டும்.

ரணில் விக்ரமசிங்கவின் பேச்சுக்கு இந்திய அரசு தனது கண்டனத்தைத் தெரிவிக்க வேண்டும் என திருமாவளவன் வலியுறுத்தியுள்ளார். (3)

## வினோத்மேத்தா காலமானார்

பழம்பெரும் பத்திரிகையாளரும் எழுத்தாளருமான வினோத் மேத்தா காலமானார். அவருக்கு வயது 72.

நீண்ட காலமாக உடல்நிலை பாதிக்கப்பட்டு டில்லியில் உள்ள வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அவரது உயிர் பிரிந்தது.

அவுட்லுக்இதழை நிறுவிய வினோத மேத்தா, அதன் ஆசிரியராகவும் இருந்தவர். அரசியல் விமர்சகர்களில் குறிப்பிடத்தக்கவரான இவர், தி பயனீர், தி சண்டே ஒப்சேவர், தி இன்டி பென்டென்ட் மற்றும் தி இந்தியன் போஸ்ட உள்ளிட்டவற்றிலும் ஆசிரியராக செயலாற்றியவர்.


பத்திரிகையாளர் வினோத் மேத்தாவின் மறைவுக்கு பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்ட தலைவர் இரங்கல் தெரிவித்துள்ளனர். சிறந்த இதழியல் மற்றும் எழுத்துப் பணி யால் நினைவுகூரப்படும் வினோத மேத்தா தனது வெளிப்படையானதும நேரடியானதுமான கருத்துகளால் கவர்ந்தவர் என்று [illegible] (3)

# சாதனை செய்த பெண்களை தலைவணங்குகின்றேன்

## மகளிர்தின வாழ்த்துச் செய்தியில் மோடி

(புதுடில்லி)

சர்வதேச மகளிர் தினம் நேற்று உலகம் முழுவதும் கொண்டாப்பட்டது. அதனையொட்டி பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்திருந்த வாழ்த்து செய்தியில்,




சர்வதேச மகளிர் தினத்தில் வெல்ல முடியாத தைரியமும், அளப்பரிய சாதனைகளையும் செய்த பெண்களை நான் தலை வணங்கிறேன்.


பெண்களுக்கு எதிரான குற்றங்கள் நடக்கும் போது எங்கள் தலைகள் அவமானத்தால் தலைகுனிகிறது. பெண்களுக்கு எதிரான வன்முறைகள் நடக்கும் போது கண்டிக்கப்பட வேண்டும்.

பெண்களுக்கான உதவி மையங்கள் ,அவசர உதவி எண்கள் அமைக்க ப்பட வேண்டும். பெண்களுக்கு எதிரான அநீதிகளை எதிர்த்து அவர்களோடு தோளாடு தோள் கொடுத்து உதவ வேண்டும். மத்திய அரசு பல்வேறு நலத்திட்டங்களை பெண்கள் முன்னேற்றத்திற்காக அறிமுகம் செய்துள்ளது. மேலும் பெண்களின் வாழ்வில் நல்லதொரு மாற்றத்தை கொண்டு வருவதற்கான திட்டங்களை அரசு வகுத்து வருகிறது. இவ்வாறு தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். (3)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தமிழர்களும் ஐ.நா.அரங்கேற்றமும்
















கடந்த சில ஆண்டுகளாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் மார்ச் மாத கூட் டத்தொடர் இலங்கை தொடர்பிலான பரபரப்புக் கட்சிகளினால் நிறைந்திருக்கும்.

தம்முடைய கட்டுக்குள வர மறுத்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தலைமையிலான இலங்கை அரசாங்கத்துக்கு பெரும் குடைச்சல் கொடுக்கும் களமாக மேற்கு நாடுகள் அதனைப் பயனபடுத்தி வந்தன.

ஆனால், மஹிந்த ராஜபக்ச தோற்கடிக்கப்பட்டு மேற்கு நாடுகளின் ஆசிர்வாதம் பெற்ற மைத்திரிபால சிறிசேன தலைமையிலான புதிய அரசாங்கம் பதவியேற்றதும், மனித உரிமைகள் பேரவைக் கூட்டத் தொடரில் இலங்கை மிக மெனமையாகவும், பெரும் பாசத்தோடும் அரவணைக்கப்பட்டு கையாளப்பட்டிருக்கின்றது.

இலங்கையின் மீது சர்வதேச ரீதியில் பெரும் அழுத்தங்களை வழங்கும் என்று எதிர்பார்க்கப்பட்ட "இறுதி மோதல்களில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான ஐக்கிய நாடுகளின் விசாரணை அறிக்கை" இந்தக் கூட்டத்தொடரில் சமர்ப்பிக்கப்படாமல் ஒத்திவைக்கப்பட்டு இலங்கையின் புதிய அரசாங்கத்துக்கு ஆதரவான நிலைப்பாடு எடுக்கப்பட்டிருக்கின்றது.

விசாரணை அறிக்கை, ஆறு மாதங்களின் பின்னர் இடம் பெறும் செப்டம்பர் மாத கூட்டத் தொடரில் சமர்ப்பிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டாலும், அதன் இயங்குநிலை அல்லது உண்மையான விசாரணை நிலை தொடர்பில் தமிழ் மக்கள் அச்சம் கொள்ள வேண்டியிருக்கின்றது.

இறுதி மோதல்களின் போது பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் கருத்துக்களும், கோசங்களும், போராட்டங்களும் எந்தவொரு தரப்பினாலும் அவ்வளவு அக்கறை கொண்டு பார்க்கப்படவில்லை.

**காலம் காலமாக தமிழ மக்கள் கருவிகளாக மட்டுமே கையாளப்பட்டு வந்த நிலையில், இம்முறை கருவிகளின் பாவனை அவசியமற்ற நிலையில் தூரத்தில் வைக்கப்பட்டிருக்கின்றார்கள்.**

மேற்குநாடுகளுக்கும், இந்தியாவுக்கும் மீண்டும் இலங்கையை கையாள்வதற்கு எப்போது தமிழ் மக்கள் தேவையோ அப்போது மீண்டும் எடுத்துக் கொள்வார்கள். அப்போது, திடீர் பாசம் பிறக்கும். அநீதிகளுக்கான புதிய நீதி (?) என்கிற சோகத்தோடு வருவார்கள்.

ஆட்சி மாற்றத்துக்குப் பின்னரான கடந்த 50 நாட்களில் அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலாளர் நிஷா தேசாய் பிஷ்வால், ஐக்கிய நாடுகளின் அரசியல் விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் ஜெப்ரி பெல்ட்மன் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் இலங்கைக்கு வந்து சென்றிருக்கின்றார்கள்.

**அதுபோல, இலங்கையின் வெளிவிவகார அமைச்சரான மங்கள சமரவீர அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஜோன் கெரி, ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் பான்கீ மூன் உள்ளிட்ட முக்கியஸ்தர்களைச் சந்தித்து பேசியுள்ளதுடன், இந்தியா, சீனா உள்ளிட்ட வெளிநாடுகளுக்கும் பயணம் செய்து முக்கிய கலந்துரையாடல்களில் ஈடுபட்டிருக்கின்றார்.**

மஹிந்த ராஜபக்ச அரசாங்கம் மேற்குநாடுகளோடு கொண்டிருந்த கொள்கையை புதிய அரசாங்கம் மாற்றியிருக்கின்றது. அல்லது மாற்றத்துக்கு உட்பட்டு செயலாற்றி வருகின்றது.

மனித உரிமைகள் பேரவையின் மார்ச் மாதக் கூட்டத் தொடர்களின் போது இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை நிறைவேற்றுதல் என்பது கடந்தகால அரங்காற்றுகை. அதில், தமிழர் தரப்பு விரும்பியோ, விரும்பாமலோ பங்கெடுத்து வந்தது. அல்லது பங்கெடுப்பதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டது.

குறிப்பாக, ஐக்கிய நாடுகளின் முன்னாள் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை **இலங்கையை கடும் தொனியிலேயே கையாண்டு வந்தார் என்கிற குற்றச்சாட்டு முன்னைய மஹிந்த ராஜபக்ச அரசாங்கத்தினால் வைக்கப்பட்டு வந்தது.**

**ஆனால், அவர் கடந்த ஆண்டு ஓய்வுபெற்றுச் சென்றதும், இலங்கை மீதான பிடியைத் தளர்த்துவதற்கான காட்சி மாற்றம் ஆட்சி மாற்றத்துடன் இயல்பாக ஏற்பட்டிருக்கின்றது என்ற தோற்றப்பாடு காட்டப்பட்டிருக்கின்றது.**

ஆனால், உண்மை அதுவலல என்று அனைத்துத் தரப்பிற்கும் தெரியும்.

இலங்கையின் இறுதி மோதலகளில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான ஐக்கிய நாடுகளின் விசா ரணை அறிக்கை ஒரேயொரு தடவை மாத்திரமே ஒத்தி வைக்கப்பட்டிருக்கின்றது. எதிர்காலத்தில் அதற்கான எந்தவொரு சந்தர்ப்பமும் வழங்கப்படாது என்று புதிய ஆணையாளர் ஷ்சையத் அல் ஹூசைன அறிவித்துள்ள போதிலும், அவரின் அணுகுமுறை கனிவானது என்பதுதான் பொதுவான பார்வை.

**இதில், சையத் அல்ஹூனைனின் தீர்மானங்கள் எதுவுமில்லை என்கிற போதிலும், செயற்பாட்டளவில் அவரே முன்னிறுத்தப்படுகின்றார் என்பதால் அவரை நாம் ஒப்புநோக்க வேண்டியிருக்கின்றது. அவ்வளவுதான்.**

**கடந்த காலத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் நியாயமான உள்ளக விசாரணைகளை முன்னெடுப்பதாக மைத்திரிபால சிறிசேன அரசாங்கம் சர்வதேசத்திடம் அறிவித்து விட்டது. ஆட்சி மாற்றம் ஏற்பட்டாலும் முக்கிய அதிகாரங்களும், அதன் நீட்சியுமுள்ள நிலையில் நீதியான விசாரணையொன்று நடத்தப்படும் என்ற நம்பிக்கையை தமிழ் மக்கள கொள்ளவில்லை. அதிலும், குற்றமிழைத்தவர்களே குற்றங்களை விசாரிப்பது நீதி விசாரணைகளுக்கு முரணானது** என்கிற நியாயமான விடயத்தையும் முன்வைக்கின்றார்கள.

இறுதி மோதல்களின் போது நேரடியாக சம்பந்தப்பட்ட இலங்கை அரசு மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் விசாரிக்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துக்கள் யாரிடமும் இல்லை.

**ஆனால், இறுதி மோதல்களில் விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டு அவர்கள் அழிக்கப்பட்டு விட்டார்கள். ஆக, குற்றமிழைத்த மற்றைய தரப்பினை நோக்கி விசாரணைகளுக்கான களம் திறப்பது இயலபானது. அதை, எதிர்கொள்ள வேண்டியது அவசியமானது.**

உள்ளக விசாரணைகள் என்கிற அறிவிப்பை அமெரிக்கா உள்ளிட்ட மேற்குநாடுகளின் அரவணைப்போடு வெளியிட்டிருக்கின்ற மைத்திரிபால சிறிசேன அரசாங்கம், அதற்கான ஒத்துழைப்புக்களை ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையிடமும், தென்னாபிரிக்காவிடமும் பெற்றுக் கொள்வதற்கும் முடிவெடுத்துள்ளதாக கூறியுள்ளது. (தொடரும்)

-மிரர்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபாகரனின் தலை நோர்வேயில் உடல் உறுப்புக்கள் ஆஸியில்

## இலங்கை கடற்படையின் முன்னாள் தலைவர் சந்தேகம்

(கொழும்பு)

**இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தின் பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு பல்வேறு நாடுகளில் கட்டியெழுப்பப்படுவதாக இலங்கை கடற்படையின் ஓய்வு பெற்ற தலைவர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார் என அல்-ஜசீரா ஊடகம் வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

கடந்த 2010 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பாரிஸ் நகரில் உள்ள தனியார் காணியொன்றில் தமிழீழ விடுதலைப் புலிகளின் சிலையொன்றைக் கட்டியெழுப்பியதையடுத்து. பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை கடற்படையின் ஓய்வுபெற்ற தலைவருமான சரத் வீரசேகர தனது அச்சத்தை வெளியிட்டிருந்தார்.

2009 ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கத்தினால் தோல்வியுறச் செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு மீண்டும் வேறு நாடுகளில் கட்டியெழுப்பப்படுகின்றது.

விடுதலைப் புலிகளின் ஒரு பாதம் அமெரிக்காவிலும் மற்றைய பாதம் பிரான்சிலும் இருக்கின்றது.

தலை நோர்வேயிலும் ஏனைய உடல் உறுப்புக்கள் அவுஸ்திரேலியா அல்லது தென்னாபிரிக்காவிலும் இருக்கின்றது.

அவரது உரையானது, இலங்கை இராணுவத்தால் அழிக்கப்பட்டதாகக் கூறப்படும் தமிழீழ விடுதலைப் புலிகளின் வெளிநாட்டு ஆதரவாளர்களால் விடப்படும் அச்சுறுத்தல்களை தொடர்ச்சியாக எச்சரிக்கும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தின் கருத்துக்களுக்கு இது ஒத்ததாக அமைந்து இருக்கின்றது.

ஆனால் வீரசேகரவின் உரைக்கு சில மாதங்களுக்கு முன்பு, அல்-ஜசீராவின் துப்பறியும் குழுவிற்குக் கிடைக்கப் பெற்ற தகவல்களின் படி, இலங்கை அரசாங்கம் தென்னாபிரிக்கா விடயத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் எந்தவொரு எச்சரிக்கையும் விடுக்கவில்லை. (3-5)

# விமானத்தில் சாதாரண பயணியாக இங்கிலாந்து சென்ற ஜனாதிபதி

## பிரித்தானிய பிரதமரையும் சந்திப்பார்

(கொழும்பு)



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது இரண்டாவது வெளிநாட்டு விஜயத்தை நேற்று முந்தினம் இங்கிலாந்து நோக்கி மேற்கொண்டுள்ளார்.

அரச தலைவர்கள் செல்லும் விசேட விமானத்தை தவிர்த்து ஈ.கே. 651 ஆம் இலக்க சாதாரண பயணிகள் பயணிக்கும் எமிரேட்ஸ் விமானத்தில் டுபாய் ஊடாக இப்பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

இவ்விஜயத்தில் ஜனாதிபதியின் மனைவி ஜயந்தி சிறிசேன, ஜனாதிபதியின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகரான பிரித்தானியாவுக்கான முன்னாள் உயர்ஸ்தானிகர் கலாநிதி கிறிஸ் நோனிஸ் உட்பட 6 பேர் கொண்ட குழுவினர் பங்கெடுத்துள்ளனர்.

சாதாரண பயணிகள் போன்று ஒரு மணி நேரத்துக்கு முன்னர் விமான நிலையத்துக்கு அவர் வருகை தந்திருந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பிரித்தானிய மகாரணியார் தலைமையில் இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகள் அமைப்பின் நிகழ்வொன்றில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி ஐக்கிய இராஜ்ஜியத்திற்கு விஜயம் செய்துள்ளார்.

ஜனாதிபதியின் நான்கு நாட்கள் விஜயத்தில் பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூனை சந்திக்கவுள்ளதுடன், சர்வகட்சி பாராளுமன்ற குழுவுடனும் கலந்துரையாடவுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஜனவரி மாதம் 8 ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்ற பின்னர், புதிய அரசாங்கம் நாட்டில் ஜனநாயகத்தை உறுதிசெய்வதற்கும், பொதுநலவாய நாடுகளுடனான தொடர்புகளை வலுப்படுத்துவதற்கும் கொள்கைகள் தொடர்பில் பொதுநலவாய நாடுகள் அமைப்பிற்கு ஜனாதிபதி தெளிவுபடுத்தவுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. (எ-11)

# பொன்சேகாவிற்கு வழங்கப்படும் பதவி உயர்வு எமக்கும் வேண்டும்

## முன்னாள் கடற்படை, விமானப்படை தளபதிகள்

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவிற்கு வழங்கப்படும் பதவி உயர்வு தமக்கும் வழங்கப்பட வேண்டுமென முன்னாள் கடற்படை மற்றும் விமானப்படைத் தளபதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இறுதிக்கட்ட போரின் போது கடற்படை மற்றும் விமானப்படைக்கு தலைமை தாங்கிய தளபதிகளே இவ்வாறு கோரியுள்ளனர்.

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா பீல்ட் மார்ஸலாக பதவி உயர்த்தப்படவுள்ளார்.

இதற்கு நிகராக தமது பதவிகளும் உயர்த்தப்பட வேண்டுமென முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொட மற்றும் முன்னாள் விமானப்படைத் தளபதி றொசான் குணதிலக்க ஆகியோர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் எழுத்து மூலம் கோரியுள்ளனர்.

முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் ஒப் பீல்ட் பதவி உயர்வினையும் மார்ஸல் ஒப் எயார் போஸ் என்ற பதவியை வழங்குமாறு முன்னாள் விமானப்படைத் தளபதியும் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தக் கோரிக்கைகள் தொடர்பில் ஆராயுமாறு ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சிற்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

"ஓய்வு பெறும் போது இராணுவ அதிகாரிகள் பதவி உயர்த்தப்படுவது போன்று தமக்கும் பதவி உயர்வு வழங்கப்பட வேண்டுமென முன்னாள் கடற்படை மற்றும் விமானப்படைத் தளபதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (3-5)

# இன்று ஒரு தகவல்

## மனதைப் புரிந்து கொள்வோம்!

மற்றவர்களது மனதை புரிந்து கொள்வது ஓர் அற்புதமான கலை. அப்போதுதான் எங்களுடைய நடவடிக்கைகள் சரியாக இருக்கிறதா என்று எங்களுக்கே தெரியும். ஏதோ அவர்கள் பேசுகிறதை வைத்து மட்டும் முடிவெடுக்கக் கூடாதாம். அவர்கள் மனதிற்குள்ள ஓடுகிற ஓட்டத்தையும் புரிந்து கொள்கிற சக்தி எங்களுக்கு இருக்க வேண்டுமாம்.

ஒரு வரலாற்றுச் சம்பவம் பாருங்கள். இராமநாதபுரத்தை சேதுபதி மன்னர் ஆண்ட காலத்தில் இது நடந்ததாக சொல்லுவார்கள். அவர் ஒவ்வொரு பகுதியாகப் போய் மக்களுடைய குறைகளை கேட்டறிந்து கொள்வாராம். அப்படி போனவர் கமுதிங்கிற பகுதியில் துணியாலான கூடாரம் அமைத்து தங்கியிருந்தாராம். அப்போது அங்கிருந்த மக்களுடைய குறைகளை அவர் கேட்டுக் கொண்டு இருந்தாராம். அப்போது ஒரு தகவல் அவருக்கு கிடைத்த தாம். இந்தப் பகுதியில் ஒரு பிரபலமான சோதிடர் இருக்கிறார். அவர் சொன்னது சொன்னபடி சரியாக இருக்கும் என்று அங்கிருந்தவர்கள் சொன்னார்களாம். மன்னருக்குக்கூட அதைச் சோதித்துப் பார்க்கலாமென்று ஆர்வம் வந்ததாம். அதனால் அந்த சோதிடரை அழைத்துக் கொண்டு வரச்சொன்னாராம். அவர் வந்ததும், "நான் ஒரு சின்ன சோதிடம் கேட்கிறேன்" அதை நீங்கள் சரியாகச் சொல்லிவிட்டால் உங்களுக்கு பரிசு தருவேன். இல்லையென்றால் தண்டனைதான் தருவேன் என்று சொன்னாராம். அவரை திணற அடிக்க வேண்டும் என்று ராஜாவுக்கு ஆசை. சொல்லுங்கள் ராஜா என்று இவர் பயத்தோடு கேட்டிருக்கிறார். "ஒன்றுமில்லை. இந்தக் கூடாரத்தில் இருந்து நான் முன்வாசல் பக்கம் வெளியே வருவேனா? பின்வாசல் பக்கமாக வெளியே வருவேனாவென்று" உங்களால் சொல்ல முடியுமா? இப்பவே அதை கணித்து ஒரு தாளில் நீங்கள் அதை எழுதித் தாருங்கள். அதன்படி நடந்துதென்றால் உங்களுக்குப் பரிசு, இல்லையென்றல் தண்டனை. அப்படி என்று ராஜா சொன்னாராம். சோதிடர் தன் பதிலை எழுதி மெய்க்காப்பாளரிடம் கொடுத்து விட்டார். மன்னர் வெளியே வந்த பின்னர்தான் அதை படிக்க வேண்டுமென்று சொன்னார்.

இதையெல்லாம் பார்க்கிறதற்கு மக்கள் எல்லாம் ஆவலோடு காத்திருந்தார்களாம். ஆனால் ராஜா என்ன செய்தாரென்றால் அந்தக் கூடாரத்தினுடைய முன்வாசல் பக்கமாகவும் வெளியே வரவில்லையாம். பின்வாசல் பக்கமாகவும் வெளியே வரவில்லையாம். தன்னுடைய வாளையெடுத்து கூடாரத்தினுடைய நடுப்பகுதியில் ஒரு வெட்டுவெட்டிவிட்டு அதன் வழியாக வெளியே வந்திட்டாராம். அப்போது அவர் சோதிடரைப் பார்த்து புன்னகை செய்திருக்கிறார். பார்த்தீர்களா? எப்படி வந்திட்டேனென்று.

அப்போது சோதிடர் சொன்னாராம். "பரவாயில்லை ராஜா, நான் எழுதிக்கொடுத்திருக்கிறதை படிக்கச் சொல்லுங்க" அப்படியென்றாராம். எடுத்துப் படிக்கச் சொன்னால் அதில் சரியாக எழுதியிருக்கிறார். "ராஜா முன்வாசல் பக்கமாகவும் வரமாட்டார். பின்வாசல் பக்கமாகவும் வரமாட்டார். நடுவில் வெட்டி குறுக்கு வழியாகத்தான் வருவார்" அப்படியென்று எழுதியிருந்தார்.

ராஜாவுக்கு ஒரே ஆச்சரியம். எப்படி இவ்வளவு சரியாக கணித்தீர்கள் என்றாராம்.

"வேற ஒன்றுமில்லை ராஜா. இதில் சோதிடமெல்லாம் கிடையாது. எப்ப என்னை நீங்கள் சோதிக்க வேண்டுமென்று முடிவு செய்தீர்களோ அப்ப இப்படி ஏதாவது ஏடாகூடமாகச் செய்வீர்கள், அதனால் நீங்கள் இரண்டு வாசல் வழியாகவும் வராமல் வேறு வழியாக வருவதற்கு முடிவு செய்திருப்பீர்கள் என்று தெரிந்துதான் நான் அப்படி எழுதிக் கொடுத்தேன்" என்று சொன்னாராம்.

இதுதான் மனதை படிக்கிறது. ஆக சோதிடம் சொல்கிறவர்கள் கூட சோதிடத்தின் அடிப்படையில் இருக்கின்ற பல தத்துவங்களை வைத்துக்கொண்டு சொல்கிறார்கள் என்பது ஒரு பக்கம் இருந்தால் கூட தங்களிடம் சோதிடம் கேட்க வருகின்றவர்களின் மனோ நிலை எப்படி இருக்கு, உள்ளோட்டம் எப்படி இருக்கு இதையெல்லாம் பார்த்து, அவர்கள் மனோபாவத்தை பார்த்து சொல்கிறவர்கள் பலபேர். இந்தக் கலை சோதிடர்களுக்கு மட்டுமல்ல. எங்களுக்குக் கூட தேவைப்படுகின்றது.


ஏனென்றால் எங்கள் முன்னாடி நின்று பேசுகிறவர்கள் என்ன மனநிலையிலிருந்து பேசுகிறார்கள் என்று கவனிக்கின்ற ஒரு கூர்மையான புத்தி எங்களுக்கு வந்துவிட்டது என்று வையுங்களேன். பல காரியங்களை நாங்கள் சுலபமாக சமாளித்திடலாம்.

இதுமாதிரி இன்னொரு வேடிக்கையான சம்பவம் சொல்கிறதுண்டு. ஒரு முதியவர் இப்படித்தான் மற்றவர்கள் முகங்களைப் பார்த்தே சோதிடம் சொல்வாராம். ஒருநாள் எல்லோரும் அவருக்கருகில் கூடியிருந்தார்கள் .அப்போது ஒரு குடிகாரர் போதையில் அங்கே போயிருக்கிறார். கையில் காலியான ஒரு மது போத்தலை அவர் வைத்திருந்தார். சோதிடரே, இப்போது எனக்கு சொல்லியாகணும். நான் இந்த போத்தலை உடைக்கப் போகிறேன். இது எத்தனை துண்டுகளாக உடையும் என்று சொல்லணும். சரியாக சொல்லவில்லையென்றால் வயிற்றில் குத்திப் போடுவேன் என்றாராம்.

குடிகாரனை விரட்ட வேண்டுமென்று நினைத்த பெரியவர் பதிலை ஒரு தாளில் எழுதி அவர் பையில் சொருகிவிட்டார். சரி, உடை. எத்தனை துண்டாக உடையுமென்று அதில் எழுதி இருக்கின்றேன் என்றாராம். அந்த குடிகாரர் போத்தலை ஓங்கினார். ஆனால் உடைக்கவில்லை. என்ன பெரிசு! ஏமாத்திட்டீங்களே என்றாராம். அப்பதான் அந்த சோதிடர் சொல்லி இருக்கிறார். பையில் எழுதியிருக்கே என்று. எடுத்துப்படி என்று. பக்கத்திலுள்ளவர் எடுத்து அந்தக் காகிதத்தை படித்தார். அதில் எழுதியிருக்கின்றார் அந்த சோதிடர் "இவன் ஓங்குவான் ஆனால் உடைக்க மாட்டான்" அப்படி என்று . இதுதான் மனதை படிக்கிறது.

*கலைமாமணி முனைவர் இளசை சுந்தரம்*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# "என் மகனுக்குத் திருந்தி வாழ்வதற்கு இன்னொரு வாய்ப்புக் கொடுங்கள். அவன் செய்த தவறுக்காக அவனை மன்னித்து விடுங்கள்"

உலகிலேயே இன்று அதிகமான மரண தண்டனை நிறைவேற்றப்படும் நாடுகளாக சீனா, ஈரான், அமெரிக்கா, வியட்நாம், சூடான ஆகியவை விளங்குகின்றன. உலகின் ஏனைய நாடுகளில் தூக்கிலிடப்படுவோரின் மொத்த எண்ணிக் கையை விட அதிகமானோர் சீனாவில் மட்டும் தூக்கிலிடப்படுவதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

போதைப்பொருட்கள் அதிகமாகப் புழக்கத்திலிருப்பதாகக் கருதப்படும் லத்தீன் அமெரிக்காவின் பல நாடுகள் இன்று மரண தண்டனையை முற்றாக ஒழித்துவிட்டன.

மார்ச் 2007 இல் ஜெனிவாவில் நடைபெற்ற ஐ.நா.சபையின் மனித உரிமைகள் சங்கத்தின் மூன்று வார மாநாட்டில், வன்முறை சம்பந்தப்படாத குற்றங்களுக்கு மரண தண்டனை விதிப்பது கண்டிப்பாகத் தவிர்க்கப்பட வேண்டும் என்ற வாதத்தைச் சர்வதேசச் சட்டத்தின் அடிப்படையில் வலியுறுத்தி, பிலிப் ஆல்ஸ்ரன் முன் வைத்தார்.

நியூயோர்க் பல்கலைக்கழகத்தில் சட்டப் பேராசிரியராக இருந்த ஆல்ஸ்ரன், நீதிக்குப் புறம்பான, விசாரணையின்றி மேற்கொள்ளப்படும் தன்னிச்சையான மரண தண்டனைகளைக் கண்டறிவதற்கான ஐ.நா.சபையின் விசேடத் தூதுவராகவும் பணியாற்றினார்.

போதைப் பொருள் கடத்தல் போன்ற பொருளாதாரக் குற்றங்களுக்கு மரண தண்டனை விதிப்பதை எதிர்த்து வாதிடுவதற்கான நல்ல சந்தர்ப்பம் அம்மாநாட்டில் அவுஸ்திரேலியாவுக்குக் கிடைத்திருந்தும், ஐ.நாவுக்கான அவுஸ்திரேலியப் பிரதிநிதி மரண தண்டனைக்கான தமது எதிர்ப்பைத் தெரிவிப்பதிலிருந்து விலகியே இருந்தார் என்றார் அவர். அதே காலப்பகுதியில் பதினொரு அவுஸ்திரேலிய பிரஜைகள் மரண தண்டனையை எதிர்நோக்கி வெளிநாட்டுச் சிறைகளில் காத்திருந்தனர்.

மரண தண்டனை என்னும் பெயரில் ஒரு மனிதனின் உயிரை அரசு பறிப்பதற்கான அதிகாரம் மிகவும் கொடூரமானது எனச் சமூக ஆர்வலர்களும் சிந்தனையாளர்களும் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து பிரச்சாரம் செய்து வருகின்றனர்.

**ஒரு மனிதன் தவறிழைப்பதற்காகவே பிறப்பதில்லை எனவும் சந்தர்ப்பச் சூழ்நிலைகளால் அவன் தவறிழைத்துவிட்டால், அத்தவறை நினைத்து வருந்தி அவன் திருந்தி வாழ்வதற்கான சந்தர்ப்பத்தைச் சமூகம் அவனுக்கு வழங்க வேண்டும்** எனவும் அவர்கள் வாதிடுகிறார்கள்.

"காட்டுமிராண்டித்தனமான ஒரு குற்றச் செயலைச் செய்த ஒருவரைத் தூக்கில் போடுவதன் மூலம், நாமும் பழிக்குப் பழி என்னும் காட்டுமிராண்டித்தனமான நிலைக்குத் தாழுந்துவிடுகிறோம்" என்கிறார் அவுஸ்திரேலிய அரசியல்வாதியான ஆண்ட்றூ பாட்லெட்.

அமெரிக்காவில் சிறுபான்மை இனத்தவர், மனநிலை பிறழ்ந்தோர், நீதிமன்றத்தில் தம்மைச் சரியான முறையில் காப்பாற்றிக் கொள்ளப் பண வசதியற்ற ஏழைகள் போன்றவர்களே அதிகளவில் தூக்குத்தண்டனைக்கு உள்ளாகிறார்கள்.

ஈரானில் பிராயமடையாத சிறுவர், சிறுமியரும் மரண தண்டனைக்கு ஆளாக்கப்பட்டுக் கல்லெறிந்து கொலை செய்யப்படுகிறார்கள். அண்மையில் 16 வயது மட்டுமே நிரம்பிய ஒரு இளம் பெண், கற்பு நெறிக்கான ஒழுங்கு விதிக்ளைக் கடைப்பிடிக்கத் தவறியதால் கல்லெறிந்து கொல்லப்படும் மரண தண்டனைக்குள்ளானாள்.

இங்கிலாந்தில் கொலைக் குற்றஞ் சாட்டப்பட்டு, 1953 இல் பெருந் தொகையான மக்களது எதிர்ப்பின் மத்தியில் டெரெக் பெண்ட்லி தூக்கில் தொங்கவிடப்பட்டபோது அவருக்கு 19 வயது. அவருக்கு வழங்கப்பட்ட மரண தண்டனை தவறானது என்றும் ஆனால் குற்றச் செயலில் அவர் பங்கெடுத்தமைக்காக அவருக்குப் பகுதி மன்னிப்பு (இறந்த பின்பு) வழங்குவதாயும் 1993 இல் (சரியாக 40 வருடங்களின் பின்) அப்போதைய உள்துறை அமைச்சர் அறிவித்தார்.

1998 இல் அப்பீல் நீதிமன்றம் பெண்ட்லி குற்றமற்றவர் எனத் தீர்ப்பு வழங்கியது. தவறான நீதி வழங்கலால் பறிக்கப்பட்ட உயிரை மீண்டும் கொண்டுவர முடியுமா? பிரிட்டனின் முன்னாள் உள்துறை அமைச்சரான மைக்கல் ஹவர்ட் பின்வருமாறு கூறுகிறார்: "நீதி விசாரணை என்பது தவறுகளின்றி, முற்று முழுதாகச் சரியானது என்பதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாமல் உள்ளது. அத்தகைய விசாரணையின் அடிப்படையில், அரசு ஒரு மனிதனின் உயிரைப் பறிப்பதையும என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை". ஹவர்ட் ஒரு தலைசிறந்த சட்ட வல்லுநரும்கூட.

**மரண தண்டனைக் கைதியாக இருந்த வால்மீகி முனிவர் மன்னிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட பின்னரே இராமாயணத்தை எழுதினார் எனவும் அவர் தூக்கிலிடப்பட்டிருந்தால் இன்று வரை வணக்கத்திற்குரியவராக உள்ள இராமபிரானின் கதை எமக்குத் தெரிய வந்திருக்க முடியுமா** என வினவுவோர் உண்டு.

ஒரு மனிதன் செய்த தவறுக்காக அவனை அழித்துவிடுவதன் மூலம், அவனிடமிருக்கக் கூடிய அனைத்து ஆளுமைகளையும் அழித்து விடுவது என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என்பது அவர்களுடைய வாதம். காலத்திற்கொவ்வாத, மனிதத்தன்மை சிறிதுமற்ற இத்தகைய தண்டனை முறையை வரலாற்றின் குப்பைத் தொட்டிக்குள் வீசியெறிய வேண்டும் என லண்டனிலிருந்து வெளிவரும் கார்டியன பத்திரிகை தனது தலையங்கத்தில் வலியுறுத்தியிருந்தது.

மயூரன் சிறைக்குள்ளே ஒரு முன்னுதாரணமான மனிதராக விளங்குகிறார் எனவும் அவர் செய்த தவறை மீண்டும் செய்யமாட்டார் எனத்தாம் முழு மனதுடன் நம்புவதாகவும் அவருடைய மரண தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்க வேண்டும் எனவும் பாலியின் கெரபொக்கான் சிறைச்சாலையின் பிரதமப் பொறுப்பதிகாரி இந்தோனேசிய உயர் நீதிமன்றத்தில் வேண்டினார்.

ஆறு வருடங்களாக மிக மோசமான சுகா தார நிலைமை உள்ளதாகக் கருதப்படும் பாலிச் சிறையில் அடைபட்டுள்ள மயூரன், சிறைச்சாலைக்குள் ஒரு குழுத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

கைதிகளின் நலன்களைக் கவனிப்பது, சீர்திருத்த வேலைகளைக் கவனிப்பது என்பவற்றுடன் சககைதிகளுக்கு ஓவியம் வரையக் கற்றுக் கொடுக்கிறார். தானும் ஓவியம் தீட்டுகிறார். பாலியின் தலைநகரத்தில் ஒரு ஓவியக் கண்காட்சியை ஏற்பாடு செய்து சிறைக்குள் வரையப்பட்ட ஓவியங்களை விறபனை செய்ததன் மூலம் கிடைத்த வருமானத்தில், போதைப்பொருள் பாவனையிலிருந்து மீள விரும்புபவர்களுக்கான உதவி நிலையம் ஒன்றை பாலியில் இயங்கச் செய்கிறார்.

"வாழ்க்கையின் நோக்கங்கள் எவை என்று புரிந்துகொள்ளாமல் வாழ்ந்தமைக்காக நான் கவலைப்படுகிறேன். சிறை எனக்குப் பல பாடங்களைக் கற்றுத் தந்துவிட்டது" என்கிறார் மயூரன். "எனது தவறுக்காக நான் இந்தோனேசிய மக்களிடமும் அவுஸ்திரேலிய மக்களிடமும் மன்னிப்பு கோருகிறேன்".

"அவரைத் தூக்கிலிடுவதன் மூலம் அவர் மட்டும் இறக்கப்போவதில்லை" என்கிறார் மயூரனின் தங்கை பிருந்தா சுகுமாரன். "அப்பா, அம்மா, நான், தம்பி மற்றும் அவருடைய நண்பர்கள் அனைவரும் ஒரு நிரந்தரமான இழப்புடன் வாழ வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டு விடுவோம். அந்த இழப்பிலிருந்து எங்களால் என்றும் மீள முடியாது".

"என் மகனுக்குத் திருந்தி வாழ்வதற்கு இன்னொரு வாய்ப்பு கொடுங்கள்.

அவன் செய்த தவறுக்காக அவனை மன்னித்து விடுங்கள்" என்று மன்றாட்டமாக வேண்டுகிறார் மயூரனின் அம்மா ராஜினி.

**இணையம்** (முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரியாவில் இரசாயன வாயு தாக்குதல்

# அவசரமாக கூடியது ஐ.நா பாதுகாப்புசபை

(நியூயோர்க்)

**சிகிரியாவில் கடந்த சில ஆண்டுகளாக நடந்து வரும் உள்நாட்டு போரில் அரசு படைகள் இரசாயன தாக்குதல் நடத்தியது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. அங்குள்ள 3 கிராமங்களில் கடந்த ஆண்டு நடந்த சண்டையின்போது, அரசு படைகள் குளோரின் வாயு தாக்குதலை அரங்கேற்றியுள்ளன. இதில் 13 பேர் கொல்லப் பட்டதாக சர்வதேச இரசாயன ஆயுததடை அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.**



இது குறித்து விவாதிப்பதற்காக ஐ.நாவின் பாதுகாப்பு சபை நேற்று முன்தினம் கூடியது. இதில் சிரியா வின் இரசாயன தாக்குதலுக்கு கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பாக கொண்டு வரப்பட்ட தீர்மானம் உறுப்பு நாடுகளின் ஆதரவுடன் நிறைவேறியது.

கண்டன தீர்மானத்தில், 'சிரி யாவில் எதிர்காலத்தில் இதுபோன்ற இரசாயன தாக்குதல் நடந்தால், ஐ.நா. சபை சாசனம் அத்தியாயம் 7 இன்படி கடுமையான பொருளாதார தடை மற்றும் இராணுவ நடவடிக்கை என்பன மேற்கொள்ளப்படும்' என்று கூறப்பட்டிருக்கிறது.

பாதுகாப்பு சபையின் 15 உறுப்பு நாடுகளில், சிரியாவின் நட்பு நாடான ரஷ்யா உட்பட 14 நாடுகள் தீர் மானத்தை ஆதரித்து வாக்களித் தன. எனினும் வெனிசுலா மட்டும் தீர்மானத்தை புறக்கணித்தது. இது குறி த்து வெனிசுலா தூதர் ரபேல் ரமிரேஸ் கூறுகையில், சிரியாவில் இரசாயன தாக்குதல் நடந்ததா? என விசாரணை நடத்தியே முடிவு செய்ய வேண்டும் என கூறியுள்ளார். (3-5)

# போகோஹறாம் தாக்குதலில் 50 பேர் பலி!

நைஜீரியாவின் பரபரப்பான நகரங்களில் ஒன்றான மைடுகு ரியில் நேற்று முன்தினம் போகோ ஹறாம் தீவிரவாதிகள் அடுத்தடுத்து நடத்திய தாக்குதல்களில் 33 பேர் பலியாகியுள்ளனர்.

அங்குள்ள பாகா மீன் சந்தை யில் நேற்று முன்தினம் நண்பகல் சுமார் 12 மணியளவில் ஒரு பெண் தீவிரவாதி மனித வெடிகுண்டாக மாறி வெடித்து சிதறியதில் 18 பேர் பலியாகினர். அதனையடுத்து, பிற் பகல் ஒரு மணியளவில் மற்றொரு சந்தை பகுதியில் மேலும் ஒரு குண்டு வெடித்ததில் 15 பேர் பலியா கினர். போர்னோ எக்ஸ்பிரஸ் பேருந்து நிலையம் பகுதியிலும் வெடி குண்டு தாக்குதல் நடத்தப்பட்ட தாகவும், இச் சம்பவத்தில் பலி எண் ணிக்கை எவ்வளவு என்பது தொடர் பாக அதிகார பூர்வ தகவல் ஏதும்வெளி யாகவில்லை என்றும் உள்ளூர் ஊட கங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

எனினும் வெளியாகியுள்ள செய்திகளின் படி 50 இற்கும் மேற் பட்டோர் பலியாகியுள்ளதாக பிந்தி கிடைத்த செய்திகள் தெரிவிக்கின் றன. (3-5)

# 55 ஆண்டுகளுக்கு முன்னர் பனிமலை சிகரத்தில் காணாமல் போனவர்கள் மம்மிகளாக கண்டெடுப்பு

வட அமெரிக்காவின் மெக்சி க்கோ மாநிலத்தில் மிக உயரமான பனிமலை சிகரத்தை கொண் டுள்ள சிட்டெல்டெபெட்ல் மலைப் பகுதி உள்ளது.

இந்த மலையின் உச்சியை அடைய முயன்று பலர் தோல் வியை தழுவியுள்ளனர். சிலர் காயங்களுடன் தப்பி பிழைத்துள் ளனர். சிலர் மேலே ஏறியதுடன் கீழே இறங்கி வந்து சேராமல் மாயமாகி விட்டனர்.

இப்படி மாயமானவர்கள் இன்றோ, நாளையோ உயிருடன் திரும்புவா ர்கள் என அவர்களின் உறவின ர்கள் காத்திருப்பதுண்டு.

இந்நிலையில், கடந்த 55 ஆண் டுகளுக்கு முன்னர் இந்த மலையை ஏறச் சென்று வீடுதிரும்பாத இர ண்டு பிரேதங்கள் தற்போது கண் டெடுக்கப்பட்டுள்ளன. 18 ஆயிரம் அடி உயரமுள்ள அந்த மலைச்சிக ரத்தில் 'மம்மி' எனப்படும் பதப்படு த்தப்பட்ட பிரேதங்களாக அடுத்தடு த்து இரு பிணங்கள் கண்டெடுக்கப ட்டுள்ளதாக மத்திய பியுபெலா மாநிலத் தில் உள்ள சல்சிகோமுலா டி செஸ்மா நகரின் மேயர் தெரிவித்து ள்ளார்.

கடந்த 55 ஆண்டுகளுக்கு முன் னர் அந்த மலைப்பகுதியில் ஏற்பட்ட பனிச்சரிவில் சிக்கி இவர்கள் இருவரும் பலியாகியிருக்கலாம் என கருதப்படுகின்றது. அந்தப் பிரேதங்களின் உடலில் இருக்கும் கிழிந்த உடைகளை வைத்து அவ ர்கள் யார்? எந்த நாட்டை சேர்ந்த வர்கள்? என அடையாளம் காண முயற்சிகள் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுபற்றிய செய்திகள் வெளி யானதும் ஜெர்மனி மற்றும் ஸ்பெ யின் நாட்டில் இருந்து தொடர்ந்து தொலைபேசி அழைப்புகள் வருவ தாகவும், எதிர்முனையில் பேசிய வர்கள் அது தங்களது உறவின ரின் உடலாக இருக்கலாம் என சந்தேகிப்பதாக தெரிவித்துள்ள னர்.

டி.என்.ஏ. சோதனைக்கு பிறகு உரிமை கோருபவர்களின் மரப ணுக்கள் பிரேதங்களின் மரபணு க்களோடு ஒத்துபோனால் உரிய வர்களிடம் உடல்கள் ஒப்படைக்க ப்படும் என்று மேயர் ஜுவன் நவா ர்ரோ உறுதியளித்தார். (3-5)




# காணாமற்போன எம்எச்370 விமானம் கண்டுபிடிக்கப்படும்

## மலேசிய அரசாங்கம் தெரிவிப்பு

(கோலாலம்பூர்)

காணாமற்போன மலேசியன் ஏர்லைன்சிற்குச் சொந்தமான எம் எச்370 விமானம் இந்தியப் பெருங் கடலில் கண்டுபிடிக்கப்படும் என நம்புவதாக மலேசிய போக்குவரத் துத்துறை அமைச்சர் லியோவ் தியோங் லாய் தெரிவித்துள் ளார்.

அந்த விமானம் தொடர்பான எந்தத் தகவலையும் மலேசிய அதிகாரிகள் மறைக்கவில்லை யென்றும் லியோவ் தியோங் லாய் தெரிவித்துள்ளார்.

239 பேருடன் காணாமல் போன அந்த விமானத்தைத் தேடும் பணியை தொடர்ந்து நடத்தப் போவ தாக அவர் பிபிசியிடம் தெரிவித் துள்ளார்.

பீஜிங் நகருக்குச் செல்ல வேண் டிய மலேசிய ஏர்லைன்சின் போயிங் 777 ரக விமானம் காணா மல் போனதன் ஆண்டு நிறைவு நிகழ்ச்சியில் பங்கேற்றுப் பேசிய அவர் இவ்வாறு கூறினார்.

கடந்த ஆண்டு மார்ச் 8ஆம் திகதியன்று கோலாலம்பூரிலிருந்து பீஜிங் செல்ல வேண்டிய அந்த விமானம் காணாமல் போனது.

அந்த விமானம் காணாமல் போனது குறித்த இடைக்கால அறி க்கையை மலேசிய நாட்டின் சிவில் விமானப் போக்குவரத்துத்துறை சனிக்கிழமையன்று வெளியிடவி ருக்கிறது.

இந்தியப் பெருங்கடலின் தென் பகுதியில் காணாமல்போன விமா னத்தைத் தேடும் பணிகள் தொட ர்ந்து நடந்து வருகின்றன. இதற் கான சர்வதேசக் குழுவுக்கு அவுஸ் திரேலிய தலைமை வகிக்கிறது.

60ஆயிரம் சதுர கி.மீ. அளவு விஸ்தீரணமுள்ள பகுதிகளில் தேடும் பணி கள் நடந்து வருகின்றன.

இந்தத் தேடுதல் பணிக்குத் தேவைப்படும் 61 மில்லியன் டொ லர் செலவை அவுஸ்திரேலியா வும் மலேசியாவும் பகிர்ந்து கொண் டுள்ளன.

இம்மாதிரி விமானங்கள் காணாமல் போகும் நிலையில், நீண்ட தூரம் செல்லும் விமானங் களைக் கண்காணிக்க புதிய முறையைக் கையாளப் போவதாக அவுஸ்திரேலியா, இந்தோனேசியா, மலேசியா ஆகிய நாடுகள் இவ்வா ரத் தொடக்கத்தில் அறிவித்தன.

இந்தப் புதிய முறைப்படி விமா னங்கள் ஒவ்வொரு பதினைந்து நிமிடங்களுக்கும் ஒருமுறை கண் காணிக்கப்படும்.

தற்போது 30-40 நிமிடங்க ளுக்கு ஒருமுறை கண்காணிக் கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத் தக்கது.

# அமெரிக்காவில் துப்பாக்கிச்சூட்டில் 19 வயது கறுப்பின இளைஞன் பலி!

அமெரிக்காவில் கறுப்பின வாலி பர்கள் பொலிஸாரால் தொடர்ந்து சுட்டுக்கொல்லப்பட்டு வருகின்ற னர். பொலிஸாரின் இந்நடவடிக்கை க்கு எதிரான கறுப்பின மக்கள் போரா ட்டம் நடத்தி வருகின்ற போதிலும், அட்டகாசம் அடங்கியபாடில்லை. இந்நிலையில் நேற்று முன்தினம் மீண்டும் 19 வயது கறுப்பின இளை ஞர் பொலிஸாரின் துப்பாக்கி சூட்டில் கொல்லப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தால் மீண்டும் அங்கு பதற்றம் ஏற்பட்டுள்ளது. அமெரிக்கா வின் விஸ்கான்சின் மாநிலத்தின் தலைநகரான மேடிசனில் மக்கள் பெருமளவில் திரண்டு பொலிஸா ருக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

டோனி ராபின்சன் என்ற 19 வயது இளைஞரை விசாரிக்க சென்ற பொலிஸார் திடீரென அந்த வாலிபரை துப்பாக்கியால் சுட்டு விட்டார். இதனால் உயிருக்கு போராடிய அந்த இளைஞர் வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட் டார். அங்கு சிகிச்சை பலன் அளிக காமல் அந்த வாலிபர் இறந்து போனார். சுட்டுக் கொல்லப்பட்ட ராபின்சன் நிராயுதபாணியாக இருந்தார் என்பதால் இது பெரும் பிரச்சனையாகியுள்ளது.

நேற்று பொலிஸ் அலுவலகம் முன்பு நூற்றுக்கணக்கான மக்கள் கூடி, பொலிஸாருக்கு எதிராக கோஷ மிட்டு போராட்டம் நடத்தி னார்கள். பின்னர் டோனி ராபின்சன் சுட் டுக்கொல்லப்பட்ட இடமான அந்த இளைஞரின் வீடு வரைக்கும் அவ ர்கள் ஊர்வலமாக சென்றனர். ஊர் வலத்தின் போது "கறுப்பர்களையும் வாழ விடுங்கள்" என்று கோஷ மிட்ட படியே அவர்கள் சென்றார்கள்.

கடந்த ஆண்டும் இதே போல் பெர்குஷனில் நிராயுதபாணியான கறுப்பின வாலிபர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்ட போது அமெரிக்கா முழுவதும் பெரும் போராட்டம் வெடித்தது குறிப்பிடத்தக்கது. (3-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டு கொள்கையின் குறைபாடுகளால் ஜெனீவாவில் சுதந்திரமாக செயற்பட முடியவில்லை

## மஹிந்த சமரசிங்க குற்றச்சாட்டு

(கொழும்பு)

**மகிந்த அரசாங்கத்தில் வெளிநாட்டுக் கொள்ளையில் இருந்த சில குறைபாடுகள் காரணமாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவில் அழுத்தங்கள் ஏற்பட்டதுடன், புதிய அரசாங்கத்தினால் ஐ.நா. அறிக்கை தாமதப்படுத்தப்பட்டமை வரவேற்கத்தக்கது.**



சிங்கள ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியில் முன்னாள் ஜனாதிபதியின் மனித உரிமைகள் விவகாரங்கள் தொடர்புக்கான விசேட பிரதிநிதியும் முன்னாள் அமைச்சருமான மஹிந்த சமரசிங்க குற்றம் சாட்டியுள்ளார்.

இலங்கை தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு வெளியிட இருந்த அறிக்கை தாமதப்படுத்தப்பட்டமை புதிய அரசாங்கத்துக்கு கிடைத்த மிகப் பெரிய வெற்றியாகும்.

இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி இலங்கையில் முன்னேற்றகரமாக வேலைத்திட்டங்களை மேற்கொள்ளமுடியும்.

மேலும் மனித உரிமைகள் என்பது அரசாங்கத்தில் இல்லை, மாறாக பொது நலன் கருதி மேற்கொள்ளப்படும் என முன்னாள் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

30 ஆண்டு கால யுத்தத்தினை நிறைவு செய்ய பல வழிகளில் உதவி செய்த இந்தியாவை நாம் இன்று மறந்துவிட்டோம், அதே போல் அமெரிக்காவின் ஆதிக்கத்தையும் நாம் ஏற்கவில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

2009 ஆம் ஆண்டு மனித உரிமை ஆணைக்குழுவில் இணைந்து கொண்ட அமெரிக்காவின் குடியரசுக் கட்சி மனித உரிமை விவகாரத்தில் பெரிதாக அக்கறை காட்டாத போதிலும்,

பராக் ஒபாமாவின் அரசாங்கத்தின் ஜனநாயக கட்சி மனித உரிமை விவகாரங்களில் முக்கிய கவனம் செலுத்தியது.

இதற்கு ஐரோப்பா, ஆபிரிக்கா ஏனைய ஆசிய நாடுகள் ஒத்துழைப்பு வழங்கின, எனினும் நாம் இதனை புரிந்து கொள்ளவில்லை.

எனினும் ஐ.நாவின் பாதுகாப்புச் சபையிலிருக்கும் சீனா, ரஷ்யா ஆகிய இரண்டு நாடுகளும் இலங்கைக்கு ஆதரவு வழங்கிய போதிலும் மனித உரிமைகள் ஆணைக்குழு நடத்திய தேர்தலில் வெற்றிபெற முடியாமல் போனது.

இது குறித்து தெளிவாக புரிந்து கொண்ட நான் முன்னாள் ஜனாதிபதியிடம் தெரிவித்தேன்.

எமது இராஜதந்திர சேவையில் அரசியல் ரீதியான நியமனங்கள் அதிகரித்து இருந்தன.

லக்ஷமன் கதிர்காமர் காலத்தோடு ஒப்பிடுகையில் 65% அரசியல் நியமனங்கள் கடந்த அரசில் காணப்பட்டன.

யுத்தத்திற்கு பிறகு மனித உரிமை விவகார அமைச்சு ஒன்றை நாம் தவிர்த்தது பாரிய பிழை. 2014ம் ஆண்டு நான் ஜெனீவாவுக்கு செல்லும் போது நிலைமை தலைகீழாக இருந்தது.

இந்நிலையில் என்னால் சுதந்திரமாக செயற்பட முடியாத நிலையில் எனக்கு வழங்கிய தற்காலிக அதிகாரங்களைக் கொண்டு நான் செயற்பட்டேன் என முன்னாள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார். (3-5)

## "கோத்தா பேஸ்"என்ற பெயரில் முகாம் எதுவும் இருக்கவில்லை

### முன்னாள் கடற்படைத் தளபதி



"கோத்தா பேஸ்" என்ற பெயரில் முகாம்கள் எதுவும் இருக்கவில்லை எனவும் இது கடற்படையினருக்கு சேறுபூசுவதற்காக எவரோ செய்து வரும் பொய்ப் பிரசாரம் என முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னாகொட தெரிவித்துள்ளார்.

திருகோணமலை கடற்படை முகாமில் கோத்தா பேஸ் என்ற பெயரில் முகாம் ஒன்று இருந்ததாக தற்போது செய்திகள் வெளியாகியுள்ளன.

இது குறித்து முன்னாள் கடற்படைத் தளபதியிடம் சிங்கள ஊடகம் ஒன்று கேள்வி எழுப்பிய போதே அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்.

கோத்தா என்ற பெயரில் முகாம் எதுவும் இருக்கவில்லை. நான் அறிந்த வரையில் அப்படி எதுவும் இல்லை.

இது கடற்படையினருக்கு சேறு பூசுவதற்காக எவரோ மேற்கொண்டு வரும் பொய்ப்பிரசாரம். இதன் காரணமாக உண்மையை வெளியிட தீர்மானித்தேன்.

விடுதலைப் புலிகளை தோற்கடிப்பதில் கடற்படையினர் முக்கிய பங்காற்றினர். ஆயிரக்கணக்கான கிலோ மீற்றர் தூரம் சென்று புலிகளின் கப்பலைகளை கடற்படையினர் அழித்தனர்.

இந்த பணியானது எமது சக்திக்கும் அப்பால் சென்று செய்த பணியாகும். அப்படியான முக்கிய சேவையை செய்த கடற்படையினர் மீது சேறுபூசுவதை பார்த்து கொண்டிருக்க முடியாது. இதனால், கோத்தா பேஸ் முகாம் பற்றிய செய்தியை தெளிவுபடுத்த முடிவு செய்தேன் என்றார்.

இதேவேளை, திருகோணமலை கடற்படை முகாமில் கோத்தா பேஸ் என்ற முகாம் இருந்ததாகவும் அதில் 700 தமிழர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாகவும் தனக்கு தகவல் வழங்கப்பட்டதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (3-5)

## மகிந்தவுக்கு ஆதரவான கூட்டத்தில் பங்கேற்ற உறுப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவாக கண்டியில் நடைபெற்ற கூட்டத்தில் பங்கேற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

கூட்டத்தில் பங்கேற்ற சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாகக் குறிப்பிட்டுள்ள அவர்,

ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பது தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளருக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்தவை பிரதமர் வேட்பாளராக போட்டியிடச் செய்ய வேண்டுமென வலியுறுத்தும் வகையில் சில கட்சிகள் இந்த கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தன.

கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை உதாசீனம் செய்து சிலர் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றுள்ளனர் எனவும் அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் ராஜித ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிட்டுள்ளார். (3-5)

## மகிந்த வெற்றி பெற்றிருந்தால் என்னை சிறையில் அடைத்திருப்பார்கள்

### அத்துரலிய ரத்ன தேரர்

(கொழும்பு)

கடந்த ஜனாதிபதி தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ வெற்றி பெற்றிருந்தால் தான் தற்பொழுது சிறையில் இருந்திருக்க வேண்டும் என ஜாதிக ஹெல உறுமயவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

ராஜகிரியவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போது இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தேர்தலில் வெற்றி பெற்றிருந்தால் பல விதமான சூழ்ச்சிகள் இடம் பெற்றிருக்கும் எனவும் தன்னையும் சிறைக்கு அனுப்பியிருப்பார் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (3-5)

## பிரிவுத்துயர் பகிர்வு

### ஜார்ஜ்செல்வகுமார் இராமநாதன்



யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் கனடாவை Toronto ஐ வசிப்பிடமாகவும் கொண்ட ஜார்ஜ் செல்வகுமார் இராமநாதன் கடந்த 5 ஆம் திகதி வியாழக்கிழமையன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை காலை 9 மணி முதல் மு.ப 10 மணிவரை Heritage, Funeral Home, 50 Over l ea Blvd, Toronto, ON M4H 1B6, Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

### மயில்வாகனம் மனோராஜ்

(முன்னாள் கணித ஆசிரியர்- கொ/இரத்மலானை இந்துக் கல்லூரி)



கைதடி நுணாவிலைப் பிறப்பிடமாகவும் பிரான்சை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் மனோராஜ் கடந்த முத லாம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பிரான்ஸில் நடைபெறும்.


### திருமதி. சந்தியா றோஸ்மேரி



பொலிகண்டியை பிறப்பிடமாகவும் குருநகரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சந்தியா றோஸ்மேரி கடந்த புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று திங்கட்கிழமை பி.ப 2.30 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு பி.ப 3.30 மணிக்கு மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

### இளையதம்பி பாலசுப்பிரமணியம்



சிறுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி பாலசுப்பிரமணியம் கடந்த 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் நாளைமறுதினம் புதன் கிழமை 11ஆம் திகதி அன்று பி.ப 2 மணியளவில் சிறுப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### திருமதி புனிதம் மேர்சி அழகரட்ணம் செல்லத்துரை

(இளைப்பாறிய ஆசிரியர் விக்ரோரியா கல்லூரி)



பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட புனிதம் மேர்சி அழகரட்ணம் செல்லத்துரை நேற்று முன்தினம் சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் பூதவுடல் மகிந்த மலர்ச்சாலையில் நேற்று பார்வைக்கு வைக்கப்பட்டு பி.ப 8மணியளவில் சங்கானை மேற்கு பண்டத்தரிப்பிற்கு எடுத்துச் செல்லப்பட்டு நல்லடக்க வழிபாடு செல்வமியர் அரசடி வீதி பண்டத்தரிப்பில் இன்று பி.ப 4மணிக்கு நடைபெற்று பின்னர் பண்டத்தரிப்பு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாண முதலமைச்சரை ரணில் குறைகூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது

## கண்டிக்கத்தக்கதொன்றாகும் என்கிறார் ஸ்ரீதரன் எம்.பி

(கிளிநொச்சி-1)

நாட்டின் தற்போதைய பிரதமர் ரணில் விக்ரமசிங்க இந்திய ஊடகமான தந்தி தொலைக்காட்சிக்கு வழங்கிய பிரத்தியேக நேர்காணல் ஒன்று நேற்று முன்தினம் வலம்புரி பத்திரிகையில் தலைப்புச் செய்தியாக பிரசுரிக்கப்பட்டிருந்தது.

அதில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் பொறுப்பற்றவர் எனவும் எனக்கு விக்னேஸ்வரன் தேவையில்லை என்றும் அந்த நேர்காணலின்போதுஅவர் கூறியுள்ளார்.

இக்கருத்தினை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு முற்றாக நிராகரிப்பதாகவும் இது ரணிலின் குள்ள அரசியல் என்றும் கூறினார் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்ட மாதர் அணியின் ஏற்பாட்டில் சர்வதேச மகளிர் தினம் நேற்று பச்சிலைப்பள்ளி ப.நோ.கூட்டுறவு சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு உரையாற்றுகையில்,

ஒரு நாட்டினுடைய பிரதமர் அந்நாட்டின் தலைவர் என நாம் எண்ணினோம். இவர்களுடன் இணைந்து இணக்க அரசியல் நடத்த முடியும் என நினைத்தோம். நம்பியிருந்தோம்.

ஆட்சிக்கு அமர்த்தப்பட்ட சில நாட்களிலேயே ஐ.தே.கட்சி தமிழ் மக்கள் மீதான தீர்வு எப்படி இருக்கும் என்பதை கட்சியின் தலைவரும் நாட்டின் பிரதமருமான ரணில் வழங்கிய நேர்காணலில் இருந்து ஒவ்வொரு தமிழனும் அறிந்து கொள்ளமுடிகின்றது.

இன்றுதமிழ்மக்களுடைய அரசியல் அமைப்பினை சிதைப்பதற்கும் அழிப்பதற்கும் கங்கணம் கட்டியுள்ளார்.

இந்த நாதியற்ற குணம் கொண்ட ரணிலின் கூற்றினை தமிழ்மக்கள் எப்போதே நன்கு அறிவர்.

யாழ்ப்பாணத்தில் ஐ.தே.கட்சியைப் பலப்படுத்துவதற்கும் தனது சிந்தனையினை பரப்புவதற்குமே இவரது நோக்கம் அமைந்துள்ளது.

கடந்த 30 வருட கால ஆயுத போராட்ட காலப்பகுதியில் ஐ.தே.கட்சியினால் தமிழ்மக்கள் அடைந்த துன்ப துயரங்கள் அளப்பெரியவை.யாழ்ப்பாண நூலகத்தை எரித்தவர்கள் சந்திரிகா அம்மையார் அரசியல் தீர்வு திட்ட பொதியை பாராளுமன்றில் கொண்டு வந்த போது அதனை பாராளுமன்றில் எரித்த பெருமை ரணிலையே சாரும்.

இவ்வாறான ஒருவர் வடக்கு மாகாண மாகாண முதலமைச்சரை விழித்து கருத்துக் கூறுவதற்கு அருகதை அற்றவர்.இது கண்டிக்கத்தக்க ஒரு விடயமாகும்.

தந்தை செல்வா மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் ஆகியோருக்கு பின்னரும் தமிழ்மக்களுடைய அரசில் தலைமைத்துவம் நன்கு சிந்தித்தே முன்னாள் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனை தமிழ்த்தேசியக் தலைமைத்துவத்திற்கான தலைவர் என வடக்கு மாகாண முதலமைச்சராக கொண்டு வந்தது. அவரை குறை கூறுவது என்பது ஏற்றுக் கொள்ளகூடிய தொன்றல்ல. கண்டிக்கப்பட வேண்டியதொன்றாகும்.

தமிழ் மக்களின் ஒட்டுமொத்த இதயத் துடிப்பையும் நாடித்துடிப்பையும் அறிந்தே வடக்கு மாகாணசபைக் கூட்டத்தில் இன அழிப்பு தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.


இது ஒட்டுமொத்த தமிழ்மக்களின் முடிவை காலம் காலமாக சிங்கள ஆட்சியாளர் தமிழ் மக்களை அழித்தமைக்கான ஒரு தீர்மான மாகும்,

இதனை ஏற்றுக்கொள்ளமுடியாத ஒரு நாட்டின் பிரதமர் வடக்கு மாகாண முதலமைச்சரின் கூற்றுக்களை பொய் என்றும் பொறுப்பற்ற செயல் எனவும் கூறுவது வியக்கத்தக்கதொன்றாகுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-277)




# விவசாய செயற்பாடுகளை பார்வையிட்டார் பணிப்பாளர்





(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட விவசாய போதனாசிரியர் பிரிவிற்கு விவசாய திணைக்களப் பணிப்பாளர் றொகான் விஜயக்கோன் அண்மையில் விஜயம் ஒன்றை மேற்கொண்டு அங்கு நடைபெற்று வருகின்ற விவசாய நடவடிக்கைகளையும் விவசாயத் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்தி திட்டங்களையும் பார்வையிட்டதுடன் விவசாயிகளுடன் சந்திப்பினையும் மேற்கொண் டார்.

இதன்போது அவர் விசுவமடு விவசாயப் போதனாசிரியர் பிரிவிலுள்ள தேராவில் பண்ணையைப் பார்வையிட்டதுடன் உருளைக் கிழங்கு செய்கையினையும் பார்வையிட்டார்.

அத்துடன் ஒட்டுசுட்டான் விவசாய போதானாசிரியர் பிரிவிலுள்ள விசேட மரக்கறி செய்கை மற்றும் விவசாயம் தொடர்பான அபிவிருத்தி திட்டங்களையும் மரக்கறி நாற்றுக்களை உற்பத்தி செய்யும் நாற்று மேடையாளரது கொள்கலனில் நாற்று உற்பத்தியையும் பார்வையிட்டுள்ளார்.

அதன்பின்னர் ஒட்டுசுட்டானில் அமைந்துள்ள முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைந்த பண்ணையாளர் கூட்டுறவு சங்கத்திற்கு சென்ற பணிப்பாளர் அங்கு நடைபெற்று வருகின்ற பல தரப்பட்ட செயற்பாடுகளைப் பார்வையிட்டதுடன் அதன் நடவடிக்கை தொடர்பாக முல்லைத்தீவு மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் தெ.யோகேஸ்வரனிடம் விரிவாக கேட்டறிந்து கொண்டார். அதனைத் தொடர்ந்து முள்ளியவளை பகுதிக்கு சென்ற அவர் உணவு விவசாய ஸ்தாபனத்தின் அனு சரணையுடன் முல்லைத்தீவு மாவட்ட விவசா யத் திணைக்களத்தினால் அறி முகப்படுத்தப் பட்டு நிலக்கடலை பிரித்தெடுக்கும் இயந்திரங்களின் செயற்பாடுகளையும் நேரில் பார்வையிட்டார்.

இதேவேளை முள்ளியவளை விவசாயிகளுடன் சந்திப்பொன்றை மேற்கொண்ட அவர் விவசாய நடவடிக்கையின் போது ஏற்படும் பிரச்சினை தொடர்பாகவும் கேட்டறிந்து கொண்டார்.

இதன்போது வடமாகாண விவசாயப் பணிப்பாளர் எஸ்.சிவகுமார், கிளிநொச்சி பிராந்திய விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலைய மேலதிகப் பணிப்பாளர் கலாநிதி சி.ஜே.அரசகேசரி உள்ளிட்ட விவசாய திணைக்கள அதிகாரிகள் கலந்து கொண்டனர். (2)

# 60 மில்.ரூபாய் செலவில் சேமமடுக்குளம் புனரமைப்பு

வவுனியா, சேமமடுக்குளம் 60 மில்லியன் ரூபாய் செலவில் புனரமைக்கப்பட்டமையால் 200இற்கும் மேற்பட்ட விவசாய குடும்பங்கள் நன்மையடைந்துள்ளதாக சேமமடுக்குள கமக்கரா அமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு கூறியதாவது,

வவுனியா மாவட்டத்தின் விவசாயக் கிராமமான சேமமடுக்குளப் பகுதியில் உள்ள இக்குளம் நீண்டகாலமாக புனரமைக்கப்படாமல் அதன் நீர்ப்பாசன வாய்க்கால், அணைக்கட்டு என்பன சேதமடைந்த நிலையில் காணப்பட்டன.

இதனால், விவசாயச் செய்கைகள் பாதிக்கப்பட்டு வந்ததுடன் சீரான நீர்ப்பாசனம் மேற்கொள்ள முடியாத நிலையும் இருந்தது. முரண்பாடுகளால் பாதிக்கப்பட்ட பகுதிகளை அபிவிருத்தி செய்யும் அவசரகால கருத்திட்டத்தின் கீழ் 60 மில்லியன் ரூபாய் செலவில் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு அதன் பணிகள் நிறைவடைந்துள்ளன.

குளத்தின் அணைக்கட்டு, வான் பகுதி என்பன புனரமைக்கப்பட்டதுடன் ஆயிரத்து 800 மீற்றர் நீளமான நீர்விநியோகம் வாய்க்கால் கொங்கிறீட் இட்டு புனரமைக்கப்பட்டதுடன் ஏனைய வாய்க்கால்களும் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளன.

குளத்தின் கீழுள்ள 650 ஏக்கர் நிலப் பரப்புக்கு சீரான நீர்ப்பாசனம் மேற்கொள்ளக்கூடியதாகவுள்ளதுடன் 200 விவசாயிகள் நன்மையடைவர்கள் என அவ்வமைப்பு தெரிவித்துள்ளது. (2)

# மல்லாவி வைத்தியசாலை ஆதார வைத்தியசாலையாக தரமுயர்த்தப்படும்

முல்லைத்தீவு, மல்லாவி பிரதேச வைத்தியசாலையை ஆதார வைத்தியசாலையாக தரமுயர்த்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

சுமார் 10 ஆயிரத்துக்கும் அதிகமான மக்களின் மருத்துவ தேவைகளை நிறைவு செய்யும் வைத்தியசாலையாக மல்லாவி வைத்தியசாலை காணப்படுகின்ற போதும் போதிய வசதிகள் இன்றி காணப்படுகின்றது என்றும் அவர் கூறினார். இந்நிலையில், வடமாகாண குறித்தொது க்கப்பட்ட நிதியில் இருந்து 25 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டு சத்திரசிகிச்சை பிரிவு அமைக்கப்படவுள்ளது.

வைத்தியசாலையின் வளங்களை அதிகரித்து, அதனை ஆதார வைத்தியசாலையாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும். இதேபோல், புதுக்குடியிருப்பு மற்றும் மன்னார் முருங்கன் வைத்தியசாலைகளையும் ஆதார வைத்தியசாலையாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்தார். (2)

# பொதுக்கூட்டம்

(கிளிநொச்சி-1)

கிளி/கிளிநொச்சி மகாவித்தியாலயத்தின் வருடாந்த பாடசாலை அபிவிருத்தி சங்க பொதுக்கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை அதிபர் அ.பங்கையற்செல்வன் தலைமையில் பாடசாலை ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெற வுள்ளது. இதன்போது புதிய நிர்வாகத் தெரிவும் பாடசாலையின் எதிர்கால திட்டங்கள், கல்வி வளர்ச்சி திட்டங்கள் ஆகியவை தொடர்பிலும் ஆராயப்படவுள்ளது. எனவே மாணவர்களின் பெற்றோர் அனைவரையும் தவறாது கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்குமாறு அதிபர் கேட்டுள்ளார். (2-277)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழ்க் கூட்டமைப்பும் முஸ்லிம் காங்கிரசும் இணைந்தமை ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டு

## சுகாதார இராஜாங்க அமைச்சர் ஹஸன் தெரிவிப்பு

(கொழும்பு)

**கிழக்கு மாகாணசபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசும் இணைந்து ஆட்சி அமைத்துள்ளமையானது, தமிழ் - முஸ்லிம் ஒற்றுமைக்கு மிகப்பெரிய எடுத்துக் காட்டாகும் என்று சுகாதார இராஜாங்க அமைச்சர் எம்.ரி.ஹஸன் அலி தெரிவித்தார்.**

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஆரையம்பதி மாவட்ட வைத்தியசாலைக்கு நேற்று ஞாயிற்றுக் கிழமை விஜயம் செய்த அவர், அங்கு நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், "தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கிழக்கு மாகாண சபையில் அமைச்சுப் பதவியேற்ற அன்று நான் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தேன். என்ன விலை கொடுத்தாவது தமிழ் - முஸ்லிம் ஒற்றுமை வளர்க்கப்படவேண்டும். தமிழ் -முஸ்லிம்கள் பிரிந்து வாழ்வது ஆபத்தானதாகும்.

கிழக்கு மாகாணசபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசும் இணைந்து ஆட்சி அமைத்துள்ளமையானது, தமிழ் - முஸ்லிம் ஒற்றுமைக்கு மிகப்பெரிய எடுத்துக்காட்டாகும். இதேபோன்று, தேசிய அரசியலில் எதிர்க்கட்சியொன்று இல்லாத, நல்லாட்சி மிக்க அரசாங்கத்தை அமைப்பதில் தமிழ் - முஸ்லிம் மக்கள் ஒற்றுமைப்பட்டு பாரிய பங்களிப்பை செய்துள்ளார்கள்.



இந்த ஒற்றுமை இந்த நாட்டின் அனைத்து இடங்களிலும் காணப்படவேண்டும். இந்த நாட்டில் எல்லோரும் சமமாக வாழவேண்டும். சமத்துவமாக சகல சமூகங்கள் நடத்தப்படவேண்டும் என்று விரும்புகின்ற ஒருவராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளார். அவருடைய நடவடிக்கைகள் எமக்கு நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளன.

இன்னுமொரு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடமாட்டேன் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது பதவியேற்பின் போது கூறியமையானது, எமக்கு அவர் மீது இன்னும் நம்பிக்கையை அதிகரித்துள்ளது.

இன்றைய காலகட்டம் நல்லதொரு காலகட்டமாகும். இந்த சந்தர்ப்பத்தில் நாம் அனைவரும் ஒன்றுபட்டு செயற்படவேண்டும்.

எமது கட்சியான ஸ்ரீலங்கா முஸ் லிம் காங்கிரசுக்குள் சில சில பிரச்சினைகள் வரும். ஆனால், அந்தப் பிரச்சினைகள் மிகப்பெரிய பிரச்சினையாக மாறுவதில்லை. எங்களுக்குள் பிரிவினையும் ஏற்படுவதில்லை.

இந்த ஆரையம்பதி மாவட்ட வைத்தியசாலையை ஆதார வைத்தியசாலையாக தரமுயர்த்த வேண்டிய பொறுப்பு மாகாண அரசுக்கு பொறுப்பானது. கிழக்கு மாகாண சபை அதற்கான தீர்மானத்தை அதன் அமைச்சரவையில் எடுத்து எமக்கு அறிவித்தால், அதன் பின்னர் தேவையான அனைத்து உதவிகளையும் செய்ய நான் ஆயத்தமாக உள்ளேன்" என்றார்.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹபீஸ் நஸீர் அஹமட், கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் கே.துரைராஜசிங்கம் மற்றும் கிழக்கு மாகாணசபை உறுப்பினர்களான இரா.துரைரட்ணம், பிரசன்னா இந்திரகுமார், அலி சாஹீர் மௌலானா, சிப்லி பாறூக் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (3-5)

# நாட்டில் தேசிய அரசாங்கம் உருவாகுவது உறுதி

## மங்கள சமரவீர தெரிவிப்பு



நாட்டில் தேசிய அரசாங்கம் ஒன்று உருவாகுவது உறுதி என வெளியுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

மாத்தறை மாவட்டத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் எதிர்வரும் பொது தேர்தலில் பிரதமர் மற்றும் துணைப் பிரதமர் யார் என்று மாத்திரமே தீர்மானிக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

குறித்த நிகழ்வில் மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தியும் கலந்து கொண்டுள்ளார்.

அதன்போது தேசிய அரசாங்கத்தில் இணைந்துகொள்ளுமாறு மக்கள் விடுதலை முன்னணிக்கு மங்கள சமரவீர அழைப்பு விடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (3-5)

# போலி கடவுச்சீட்டுடன் வெளிநாடு செல்ல முயற்சி பொத்துவில் பெண் கட்டுநாயக்கவில் வைத்து கைது

போலி கடவுச்சீட்டை பயன்படுத்திய டுபாய் ஊடாக இத்தாலிக்கு செல்வதற்காக கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கு வருகைதந்திருந்த பொத்துவிலைச் சேர்ந்த 32வயதான பெண்ணொருவரை குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

அவர், தனது உண்மையான கடவுச்சீட்டு மற்றும் மாலை தீவுக்கு செல்வதற்கான பயணச்சீட்டு ஆகியவற்றை கடவுச்சீட்டு கருமபீடத்தில் கையளித்து பயணிப்பதற்கு தேவையான ஆவணங்களை பெற்று குடிவரவு, குடியகல்வு பிரிவுக்குச்சென்று மாலைதீவுக்கு செல்வதற்கான அனுமதியை பெற்றுக் கொண்டுள்ளார்.

எனினும், விமானத்தில் ஏறுவதற்கு முன்னர் இருக்கின்ற கடைசி கருமப்பீடத்தில், தான் டுபாய் ஊடாக இத்தாலி செல்வதற்கு வருகை தந்ததாக தெரிவித்து அதற்கான ஆவணங்களையும் பிரிதொரு கடவுச்சீட்டையும் காண்பித்துள்ளார்.

அதன்பிரகாரம் அவர், எமிரேட்ஸ் விமானசேவைக்கு சொந்தமான ரி.கே.653 இலக்க விமானத்திலேயே டுபாய் ஊடாக இத்தாலிக்கு செல்வதற்கு முயற்சித்துள்ளார். இதன்போதே, அதிகாரிகள் அப் பெண்ணை கைதுசெய்துள்ளனர். அவரிடம் மேற்கொண்ட விசாரணைகளில் இத்தாலியில் வசிக்கின்ற இலங்கை பெண்ணொருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள இந்த பெண்ணின் படத்தை பயன்படுத்தி போலியான கடவுச்சீட்டு மற்றும் தேவையான ஆவணங்களை தயாரித்து அனுப்பியுள்ளதாக தெரியவந்துள்ளது.

போலியான ஆவணங்களை தயாரிப்பதற்காக சந்தேகநபரான அந்த பெண், கொழும்பு, கொட்டாஞ்சேனை பிரதேசத்தில் உள்ள ஒருவருக்கு ஐந்து இலட்சம் ரூபாய் வழங்கியுள்ளதாக தெரியவந்துள்ளது. சந்தேகநபரான அந்த பெண்ணை, நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர். (3-5)

# சிறுநீரக நோய்த் தொற்று அதிகரிப்பு இலங்கைக்கு உதவ சீனா தயாராம்

(கொழும்பு)

இலங்கையில் தற்பொழுது அதிகரித்து வரும் சிறுநீரக நோய்த் தாக்கம் குறித்து ஆராய்வதற்காக, சீனாவின் பிரபல விஞ்ஞானியொருவர், இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக, இலங்கைக்கான சீனத் தூதுவர் யீ ஷியாங்லியங் உறுதியளித்துள்ளார்.

நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீமுக்கும் இலங்கைக்கான சீனத் தூதுவர் யீ ஷியாங்லியங்குக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின் போதே, அமைச்சர் ஹக்கீமிடம் சீனத்தூதுவர் மேற்கண்ட உறுதியினை வழங்கியுள்ளார்.

இலங்கையின் வடமத்திய மற்றும் வடகிழக்கு உட்பட்ட பிரதேசங்களில் சிறுநீரக நோயாளர்கள் அதிக எண்ணிக்கையில் காணப்படுவதாகவும், இரசாயன பொருட்கள், செயற்கைப் பசளை என்பன நிலக்கீழ் நீரில் கலப்பதன் காரணமாகவே, சிறுநீரக நோய் அதிகளவில் ஏற்பட்டு வருவதாகவும் அமைச்சர் ஹக்கீம் இதன்போது சுட்டிக் காட்டியுள்ளார்.

அந்த நோயினைக் கட்டுப்படுத்துவதற்கும், குணப்படுத்துவதற்கும் சீனா போன்ற நாடுகளின் நவீன தொழில்நுட்ப, மருத்துவ உதவி தேவைப்படுவதாகவும் சீனத் தூதுவரிடம் அமைச்சர் ஹக்கீம் வேண்டுகோளொன்றினை முன்வைத்துள்ளார்.

இதேவேளை, சிறுநீரக நோயாளர்கள் அதிகமுள்ள பின்தங்கிய கிராமப் புறங்களில் தண்ணீரை சுத்தப்படுத்துவதற்காக, தற்பொழுது வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் 'ஆர்ஓ' எனப்படும் ரிவேர்ஸ் ஒஸ்மோசிஸ் எனும் செயற்பாடு பற்றியும் இதன்போது அமைச்சர் விளக்கமளித்துள்ளார்.

அமைச்சர் ரவூப் ஹக்கீம் விடுத்த மேற்படி வேண்டுகோளினை ஏற்றுக் கொண்ட சீனத் தூதுவர் யீ ஷியாங்லியங், இது தொடர்பில் இலங்கைக்கு சீனா உதவும் என உறுதியளித்துள்ளார்.

இதேவேளை, கிழக்கு மாகாணத்திலுள்ள ஒரு நகரினைத் தெரிவு செய்து, அதனை சீனாவின் அபிவிருத்தி அடைந்த நகரோடு இணைத்து செயலாற்றுவதற்கான ஓர் ஏற்பாட்டினைச் செய்யுமாறு, அமைச்சர் ஹக்கீம் வேண்டுகோளொன்றினை சீனத் தூதுவரிடம் முன்வைத்துள்ளார்.

அமைச்சரின் இந்த வேண்டுகோளினை, தமது நாடு சாதகமாக பரிசீலிக்குமென்று இதன்போது சீனத் தூதுவர் தெரிவித்தார். (3-5)

# நுழைவாயிலில் தலைகீழாக தொங்கவிடப்பட்ட 8படைவீரர்கள்



ஈராக்கிய நகரொன்றின் நுழைவாயிலிலுள்ள இரும்புச்சட்டத்தில் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளால் கொல்லப்பட்ட 8 படைவீரர்களின் சடலங்கள் தொங்க விடப்பட்டிருப்பதை வெளிப்படுத்தும் புகைப் படங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

வடஈராக்கிய நகரான ஹவிஜாவில் மேற்படி புகைப்படங்கள் எடுக்கப்பட்டுள்ளதாக நம்பப்படுகிறது.

மேற்படி புகைப்படத்தில் தலைகீழாக தொங்கவிடப்பட்ட சடலங்களுக்கு மேலாக ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் போன்ற தீவிரவாதி குழுக்களால் பயன்படுத்தப்படும் சர்ச்சைக்குரிய கறுப்புக்கொடி காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

மேற்படி புகைப்படங்களிலொன்றில் தோன்றும் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதியொருவர் அபு அல்ரஹ்மான் என அடையாளம் காணப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

அவர் தம்மால் கொல்லப்பட்ட சிரிய பிரஜைகளது தலைகளுடன் தோன்றும் புகைப்படமும் வெளியிடபபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாடுமோ செத்தல்மாடு; வண்டியுமோ ஓட்டை வண்டி; மாடிழுக்க மாட்டாமல் மாயுறாண்டி உன்புருசன். ~ நாட்டார் பாடல்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## வடக்கு-கிழக்கு இணைவு இப்போது சாத்தியமா?

காலமாற்றம், சூழல் மாற்றம் என்பவற்றுக் கேற்பத் தீர்மானம் எடுப்பது மிகவும் முக்கிய மான விடயம்.

வியாழ மாற்றம் நடக்க, சனிபகவானுக்கு தோச பரிகாரம் செய்வது பொருத்தமற்றது. ஆகையால் நிலைமைகளுக்கேற்பவே தீர்மா னம் எடுக்க வேண்டும்.

எங்கள் மண்ணில் பனை வளம் உண்டு என் பதற்காக பன்னம் இழைத்து பார்போற்ற வாழ லாம் என்று கூறுவது எத்துணை மடைத்தனம். பொருத்தமான தொழில் நுட்பங்களைக் கொண்டு நவீன பயன்பாட்டிற்கு உகந்த வகையில் பனை வள உற்பத்திகளை உருவாக்கும் திட்டத்தைக் கண்டறிவதே இங்கு பொருத்த மானதாகும்.

இதைவிடுத்து காலாவதியாகிப்போன உற் பத்தி முறைகள் குறித்து இப்போதும் பேசிக் கொள்வது பயன் அற்றது.

இந்த வகையிலேயே தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு, வடக்கும் கிழக்கும் இணைந்த மாகா ணத்தில் அர்த்த முள்ள அதிகாரப் பரவலாக்க லுடன் கூடிய அரசியல் தீர்வு கிடைக்க இந்தியா உதவ வேண்டும் என இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜிடம் கேட்டுள்ளது.

தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாண் பதற்கு இந்தியாவின் உதவி தேவை என்பது மறுதலிக்க முடியாத உண்மை.

அதேநேரம் வடக்குக் கிழக்கு மாகாணங் கள் இணைவதென்பது சமகாலத்தில் எந்தளவு தூரம் சாத்தியமாகும் என்பது பற்றி ஆராய்வதும் அவசியம். இருபது வருடங்களுக்கு முன்பு பொருத்தமாக இருக்கக் கூடிய தீர்வு இப்போதும் சாத்தியமாகும் என்று நினைப்பது சரியானதல்ல.

இப்போது அந்தத் தீர்மானம் மாற்றத்திற் குட்பட வேண்டியதாக அல்லது திருத்தத்திற் குட்பட வேண்டியதாக இருக்கலாம்.

2009ஆம் ஆண்டில் நடந்த இறுதி யுத்தத் திற்குப் பின்னர், எங்களுக்குத் தனி நாடு வேண் டாம். ஆனால் நாங்களும் இந்த நாட்டில் சம உரிமையோடு வாழ்வதற்கான அதிகாரங்களைத் தரவேண்டும் என மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் அவர்கள் அண்மையில் கூறியிருந்தார்.

வன்னியுத்தத்திற்குப் பின்பாகவே இப்படி யொரு முடிபை மன்னார் ஆயரால் கூற முடிந் தது. இதே கருத்தை மன்னார் ஆயர் 2006ஆம் ஆண்டில் கூறியிருந்தால் தமிழினம் அவ ருக்கு எதிராகப் போர்க் கொடி தூக்கியிருக்கும்.

ஆனால், வன்னி மண்ணில் நடந்த பெரும் போரில் ஏற்பட்ட இழப்புகள்; அதனால் தமிழ் மக்கள் பட்ட துன்பங்கள்; உலக நாடுகளை நம்பி தமிழினம் அடைந்த ஏமாற்றங்கள் என் பவற்றின் பட்டறிவாக எங்களுக்குத் தனிநாடு வேண்டாம். சமஉரிமையோடு வாழும் அதிகா ரங்களைத் தாருங்கள் என்று மன்னார் ஆய ரால் கூறமுடிந்தது.

ஆகவே, ஒரே விடயத்தை எந்நாளும் உச் சரித்தல் என்பதாக தீர்வுத்திட்டத்தையும் முன் வைத்துக் கொண்டிருந்தால், காலம் அசை யுமே தவிர கருமம் எதுவும் நடக்காது.

ஆக, வடக்குக்கிழக்கு மாகாணங்களின் இணைவு என்பது இப்போது எந்தளவுக்குச் சாத்தியமானது என்பது பற்றியும் வடக்குக் கிழக்கு இணைவு என்ற விடயத்தில் கிழக்கு மாகாண மக்களின் விருப்பம் எவ்வாறாக அமை யும் என்பது பற்றியும் நாம் சிந்திக்க வேண்டும்.

வடக்கும் கிழக்கும் இணைவது எமக்கு விருப்பமாயினும் அது சாத்தியமா?

# சமய உபந்நியாசங்கள்

## மனமாற்றத்தை தரவேண்டும்

இன்று கோயில்கள் கிராமங்கள் தோறும் பலவாகப் பெருகிக் காணப்படு கிறது. கோயில் இல்லா ஊரில் குடியி ருக்க வேண்டாம் என்பது மூத்தோர் வாக்கு. ஆனால் கோயில்களில் பக்தர் கள் தொகை மிக அரிதாகவே காணப் படுகிறது. இந்த நிலைக்கு நாம்தான் காரணம். இவ்வாறு முன்னாள் அதிபரும் சமயப்பிரசாரகருமாகிய குகன்முருகநாதன் தெரிவித்தார்.

மானிப்பாய் தாத்தாவளை வைரவர் ஆலயத்தில் நடந்த சிவராத்திரி விழா வில் கலந்து கொண்டு உரையாற்றி யபோதே அவர் மேற்கண்டவாறு குறிப் பிட்டார். அவர் ஆற்றிய உரையில்,

கோயில்கள் தெய்வீக சக்தியைப் பெருக்கி மக்களை ஈர்க்கும் ஆன்ம லயத்திற்கான களங்களாகும். வேதமந் திர பாராயணங்கள், அபிஷேக ஆராத னைகளால் தெய்வ விக்கிரகங்கள் உரு வேற்றப்படவேண்டும். தேவார பாராய ணத்தில் தமிழ்வேதமான திருமுறைக ளால் அந்த உயிர்ப்பு மேன்மேலும் வலுவூட்டப்படவேண்டும். அத்தகைய ஆன்ம ஈர்ப்பிற்கான புனித கைங்கரி யங்களை நாம் நியமம் தவறாது ஆற்று வது அவசியம். அப்பொழுது தான் தெய்வபக்தி நிறைந்த புனிதர்கள் கூடு மிடமாக ஆலயம் விளங்க முடியும்.

சிவராத்திரி தினத்தில் மக்கள் கூடி ஆன்ம விழிப்பு பெற்றுச் சிவமாகும் நன்னாள். ஆனால் கோயில்கள் வெறிச் சோடிக் கிடக்கின்றன. ஆன்ம விழிப்பு வேண்டுவார்கள்தொகைகுறைந்துவிட்டது.

ஆலயங்களில் உபந்நியாசம் நடக் கிறது. சிவராத்திரி என்றதும் பிரம்மாவும் விஷ்ணுவும் அடி முடி தேடிய கதை. வேடன் இரவு முழுவதும் மரத்தில் ஏறியிருந்து இலை பிடுங்கிப் போட்டதை நயமாக, சொற்சுவை சேர்த்து கடந்து ஒரு நூற்றாண்டாகச் சொல்லி வருகிறார் கள். ஒரே இசைத் தட்டுத் திரும்பத் திரும்ப போடப்படுகிறது. இதனால் என்ன பயன்? கதை கேட்டுவிட்டு மக்கள் போகி றார்கள். அது அவர்களது மனதில், செய லில் எந்த மாற்றத்தையும் தரவில்லை. நாவலர் பெருமான் பிரசங்கத்தை ஏற் படுத்தியவர். அவரது உரை ஊர் மக் களை விழிக்க வைத்தது. கோயில்களை நோக்கி மக்களைத் திரள வைத்தது. சைவ வாழ்வு வாழவைத்தது. ஆல யங்கள் அன்பான மக்கள் கூட்டத்தால் நிரம்பி வழிந்தது. ஏன் தெரியுமா? அவர் சைவனாக வாழ்ந்தவர். எவரிடத்தும் காணப்பட்ட உண்மையான வாழ் வின் பயன் அவரது பேச்சிலே வெளிப்பட்டது. உணர்ந்து வாழ்ந்து பிறரை உணர வைக்கும் ஆற்றல் அந்த பேச்சிற்கு இருந்தது. அதனால் நாவலரால் ஆலயங்கள் ஆன்ம லயத்திற்குரிய சக்திவாய்ந்த இடங்களாக மாறியது.

சமயம் பேசுபவர்கள் சமயத்தில் வாழவேண்டும். சமயவாழ்வில் நம்பிக்கை கொண்டவர்களாக வாழ்ந்து பேச வேண்டும்.

அந்தப் பேச்சின் சாரம் ஆலயத்தை நோக்கி மக்களைத் திரட்டவல்ல ஆற்ற லைத்தரும். ஆலயங்களில் உடை, நடை, பாவனை எல்லாம் சைவம் தழு வியதாக சிவமயமாக அமைய வேண்டும். இல்லையேல் ஆலயங் கள் செயலிழந்த மின் பிறப் பாக்கி போல ஆகிவிடும். அது மின்னை வழங் கும் இயல்பை இழந்துவிடும். சை வத்தை நேசிக்கும் சிவத்தைப் பற்றுறுதி யோடு விரும்பும் ஒவ்வொரு சைவன தும் கடமை. உணர்ந்து வாழ்ந்தால் நாம் பிழைப்போம் என்றார். (ந)

# பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் இலங்கையில் அதிகரிக்கப்பட வேண்டும்

## பிரதியமைச்சர் விஜயகலா தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு, கிழக்கு, மலையகம் உட்பட நாட்டில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பெண்களின் வாழ்வாதாரத்தைக் கட்டி யெழுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப் படும். இலங்கையில் பெண்களின் அரசி யல் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்பட வேண்டியது அவசியமானதாகும் என்று மகளிர் விவகார பிரதி அமைச்சர் திரு மதி விஜயகலா மகேஸ்வரன் தெரிவித் தார்.

தேசிய மகளிர் தின நிகழ்வு நேற்று அநுராதபுரத்தில் நடைபெற்றது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பிரதம அதிதி யாக கலந்துகொண்ட இந்த நிகழ்வில் உரையாற்றுகையிலேயே பிரதி அமைச் சர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு அவர் மேலும் கருத்து தெரி விக்கையில்,

எமது நாட்டில் அரசியலில் பெண் களின் தலைமைத்துவம் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. பாராளுமன்றம், மாகாண சபைகள், உள்ளூராட்சி சபைகளில் இந்த எண் ணிக்கை குறைவாகவே இருக்கின்ற து.

வடமாகாணத்தைப் பொறுத்த வரையில் பிரதி அமைச்சராக நான் இருக்கின்றேன். இது போல் யாழ். மாநகர சபையின் முன்னாள் மேய ரும் பெண்ணாகவே இருந்தார்.

முன்னாள் அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமாரும் தற்போதைய கிளிநொச்சி அரசாங்க அதிபரும் பெண்களாகவே உள்ளனர். இவ்வாறு அரசியலிலும் முக்கிய துறைகளிலும் பெண்களின் பிரதி நிதித்துவம் இடம்பெற வேண் டும். இதற்கான திட்டமொற்றினை நாம் நடைமுறைப்படுத்தவுள்ளோம்.

பாதிக்கப்பட்டுள்ள பெண்களுக்கான விசேட திட்டங்களை மேற்கொள்வதற்கு பிரதமர் விசேட நிதி ஒதுக்கீடுகளை செய்ய வேண்டும். சர்வதேசத்திலும் குறிப்பாக மேற்குலக நாடுகளில் அரசி யலில் சரி முக்கிய துறைகளில் சரி பெண்களின் பங்களிப்பு அதிகமாகவே உள்ளது. ஆனால் எமது நாட்டைப் பொறுத்தவரையில் அந்த நிலை இன்னமும் ஏற்படவில்லை.

புதிய அரசாங்கத்தில் மகளிர் விவ கார பிரதி அமைச்சராக என்னை நிய மித்தமைக்காக பிரதமர் ரணில் விக் கிரமசிங்கவுக்கு நன்றிகளை தெரிவிக் கின்றேன். இவ்வாறு பெண்களின் பங்களிப்பை அதிகரிக்கும் வகையில் செயறபாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமானதாகும் என் றார். (எ)

## ஊடக ஒழுங்குபடுத்தலுக்கு சுயாதீன ஆணைக்குழு

(கொழும்பு)


ஊடகங்களை ஒழுங்குப்படுத்து வதற்காக சுயாதீன ஆணைக்குழு ஒன்றை நியமிப்பது குறித்து அரசாங் கம் கவனம் செலுத்தியுள்ளது. தொழில் நுட்பம் மற்றும் உள்ளடக்கங்கள் இதன மூலம் ஒழுங்குபடுத்தப்படும்.

ஆணைக்குழுவில் ஊடகங்களு டன் சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் உள்ளடக்கப்படுவார்கள் என ஊடகத் துறை அமைச்சின் செயலாளர் கருணா ரத்ன பரணவித்தான தெரிவித்துள்ளார்.

இதனிடையே நல்லாட்சி மற்றும் ஜனநாயகத்தை வலுப்படுத்துவதற்கான செயற்பாடுகளில் ஊடகங்கள் மேற் கொள்ள வேண்டிய மாற்றங்களை பரிந்துரைப்பதற்காக ஏப்ரல் மாதம் இலங்கை மன்றக் கல்லூரியில் மாநாடு ஒன்று நடைபெறவுள்ளது. (எ-டி)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### அலையின் தன்மை



நமது உடலுக்குள்ளாக இயங்கக்கூடிய உயி ராற்றல், அலையாக ஜீவகாந்த சக்தியின் மூலம் எந் தப் பொருளோடு தொடர்பு கொண்டாலும், அந்தப் பொருளின் தன்மைக்கேற்ப மாற்றம் பெறும். நம க்குத் தெரிந்தோ, தெரியாமலோ, எப்பொழுதுமே, கோள்களிடமிருந்தும் பொருட்களிடமிருந்தும், மக்களிட மிருந்தும் அலைகள் வந்து கொண்டேயிருக்கும். அந்த அலைகள் சாதகமாகவும் இருக்கலாம். பாதகமாகவும் இருக்கலாம்.

பாதகம் என்பது வெளியிலிருந்து வரக்கூடியஆற்றல். நம்மிடையே இருக்கிற ஆற்றல் மீது அதிக அழுத்தம் தருமானால், அதைத்தாங்க முடியாதபோது ஒரு துன்பத்திற்குரியதாக மாறுகிறது. அதைத்தாங்கும்போது அதுவே இன்பமாக மாறுகிறது. நமக்கு எப்பொழுதுமே கோள்களிலிருந்து வரக்கூடிய அலை யினாலும், பொருட்களிலே இருந்து வரக்கூடிய அலையினாலும் நாம் செய்கி ன்ற செயல்களிலேயிருந்து வரக்கூடிய அலையினாலும் அதிகமாகப் பாதிக் கப்படாத ஒரு Steadiness தாங்கும் சக்தி (Resistance Power) அவசியம்.

அந்த ஆற்றலை ஏற்படுத்திக்கொள்வதற்காக நாம், நமது உடல், உயிர், ஜீவ காந்தம், மனம் இந்த நான்கையும் சேர்த்து ஒவ்வொரு பௌதீகப் பிரிவோடும் இணைக்கவேண்டும். உதாரணமாக, நிலம் என்ற மண்ணை எடுத்துக் கொண்டு அதையே நினைந்து நினைந்து மண்ணிலேயிருக்கக்கூடிய ஆற்ற லுக்கும் நமக்கும் உறவை ஏற்படுத்தி, எப்போதும் நாம் தூங்கும்போதும், விழித்துக்கொண்டிருக்கும்போதும், எங்கே சென்றாலும் மண்ணிலிருக்கக்கூடிய ஆற்றல் நமக்கு உதவியாகத்தான் இருக்கவேண்டும். நன்மைதான் செய்ய வேண்டும் என்று சங்கற்பம் (Auto Suggestion) செய்து கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆப்கானிஸ்தானை வீழ்த்தி நியூசிலாந்து அசத்தல் வெற்றி

உலகக்கிண்ண தொடரில் ஆப்கானிஸ்தானுக்கு எதிரான லீக் ஆட்டத்தில் நியூசிலாந்து 6 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

உலகக்கிண்ணத் தொடரின் 31ஆவது லீக் போட்டியில் நியூசிலாந்து-ஆப்கானிஸ்தான் அணிகள் மோதின.


நியூசிலாந்தின் நேபியர் மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில், நாணய சுழற்சியில் வென்ற ஆப்கானிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி களமிறங்கிய ஆப்கானிஸ்தானின் அணியின் முன்னிலை வீரர்கள் சோபிக்க தவறினர். இதனால் 47.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 186 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

அந்த அணியில் சமியுல்லா சென்வாரி (54), நசிபுல்லா ஷாடர்ன் (56) ஆகியோர் அதிகபட்சமாக அரைசதம் அடித்தனர். மற்ற வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் நடையை கட்டினர்.

நியூசிலாந்து தரப்பில், சுழலில் அசத்திய வெட்டோரி 4 விக்கெட்டுகளையும், பவுல்ட் 3 விக்கெட்டுகளையும், அண்டர்சன் 2 விக்கெட்டுகளையும், மில்னே 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பின்னர் 187 என்ற எளிய வெற்றி இலக்கை நோக்கி நியூசிலாந்து அணி பொறுமையாக விளையாடி 36.1 ஓவரிலே இலக்கை எட்டியது. அந்த அணி 4 விக்கெட்டுகளை மட்டும் இழந்து 188 ஓட்டங்கள் குவித்தது.





இதனால் நியூசிலாந்து 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. குப்டில் (57), அணித் தலைவர் மெல்குல்லம் (42), வில்லியம்சன் (33), எலியோட் (19) ஆகியோர் நல்ல ஓட்டங்களை எடுத்து அணியின் வெற்றிக்கு கைகொடுத்தனர்.

டெய்லர் (24), அண்டர்சன் (7) ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர். 4 விக்கெட்டுகள் வீழ்த்திய வெட்டோரி ஆட்ட நாயகனாக தெரிவு செய்யப்பட்டார். (க)

SPORTS
விளையாட்டுச் செய்திகள்

## சுயநலமாக செயற்படும்-வீரர்கள் வேண்டாம்
## யுவராஜ் இடத்தில் ரெய்னா அசத்துகிறார்:டோனி



சுயநலமாக கடைசிவரை ஆட்டமிழக்காமல் நின்று கொண்டிருக்கும் வீரர்கள் இந்திய அணிக்கு தேவையில்லை என்று இந்திய அணித்தலைவர் டோனி கூறியுள்ளார்.

உலகக்கிண்ண இந்திய அணியில் சகலதுறை வீரரான யுவராஜ் சேர்க்கப்படாதது அனைவருக்கும் அதிர்ச்சி அளிப்பதாக அமைந்தது. யுவராஜின் தந்தை கூட வெளிப்படையாக தனது அதிருப்தியை தெரிவித்து பரபரப்பை ஏற்படுத்தியிருந்தார்.

மேலும் யுவராஜின் இடத்தில் களமிறங்கும் ரெய்னா சரியாக விளையாடாமல் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழப்பதாக அவர் மீது விமர்சனங்கள் எழுந்துள்ளன.

இது தொடர்பாக இந்திய அணித் தலைவர் டோனி கூறுகையில், இந்திய கிரிக்கெட் அணி வரலாற்றை திரும்பி பார்த்தால் ஒரு விடயம் புரியும்.

5ஆவது வீரராக களமிறங்கியவர்களில் பெரும்பாலானோர் சோபிக்க முடியாமலே போயுள்ளனர். அந்த வகையில், யுவராஜ்சிங், சிறப்பான வீரராக செயற்பட்டார். இப்போது யுவராஜ்சிங் இடத்தில், ரெய்னா சிறப்பாக ஆடி வருகிறார்.

இதற்கு முன்பு விராட் கோலி, ரோஹித் சர்மா போன்றோரும் ஐந்தாவதாக களமிறங்கியுள்ளனர். ஆனால் அவர்களால் சிறப்பாக ஆட முடியவில்லை. ஆனால், ஏதோ, ரெய்னா மட்டுமே அப்படி அவுட் ஆவதைப்போல ஊடகங்கள் கிளப்பிவிடுகின்றன.

எனவே 5ஆவது வீரராக சிறப்பாக ஆடிவரும் ரெய்னாவின் தன்னம்பிக்கையை யாரும் குலைத்துவடக் கூடாது. அணிக்கு தேவையான ஓட்டங்களை அடித்துவிட்டு அவுட் ஆனாலும் பரவாயில்லை.

தற்போதைய காலமாற்றத்தில், எத்தனை ஓட்டங்கள் அடித்தாலும் அது போதாமல் போய்விடுகிறது. 40ஆவது ஓவர்களுக்கு மேல் களமிறங்கும் வீரர்களால் அதிக ஓட்டங்களை குவிப்பது இயலாத காரியம்.

குறைந்த பந்துகளில் அதிக ஓட்டங்கள் அடிப்பது மட்டுமே அப்போது அவர்களின் வேலையாக இருக்கும். அதனால் 20 அல்லது 25 ஓட்டங்களில் அவுட் ஆனால், அந்த துடுப்பாட்டக்காரரை பார்த்து பார்மில் இல்லை என்று கூறிவிட முடியாது என்று தெரிவித்துள்ளார். (க)




## புதிய மைல்கல்லை எட்டிய ஜெயவர்த்தன



அவுஸ்திரேலியாவுக்கு எதிராக களமிறங்கும் இலங்கை அணியின் முன்னாள் அணித்தலைவர் ஜெயவர்த்தன புதிய மைல்கல்லை எட்டியுள்ளார். அவர் நேற்று 446 ஆவது சர்வதேச ஒரு நாள் போட்டியில் களமிறங்கியுள்ளார்.

இதன் மூலம் சனத் ஜெயசூரியாவை (446 போட்டிகள்) பின்னுக்குத் தள்ளி அதிக போட்டிகளில் விளையாடியவர்கள் வரிசையில் 2 ஆவது இடத்தை பிடித்துள்ளார்.

இந்திய அணியின் முன்னாள் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கர் 463 ஒரு நாள் போட்டிகளில் விளையாடி முதலிடத்தில் இருக்கிறார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சாதனைகள் படைக்கப்பட்ட சிட்னி போட்டியில்
# அவுஸ்திரேலியா போராடி வெற்றி

அவுஸ்திரேலியாவின் இளம் துடுப்பாட்ட வீரரும், ரிவர்ஸ் ஸ்விப் கில்லாடியுமான கிளென் மக்ஸ்வெல் ஒருநாள் கிரிக்கெட் வாழ்க்கையில் முதல் சதம் அடித்து அசத்திய சிட்னி ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் அவுஸ்திரேலியா அணி 64 ஓட்டங்களால் போராட்டகரமான வெற்றியைப் பெற்றது.

11ஆவது உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகள் அவுஸ்திரேலிய, நியூசிலாந்து ஆகிய நாடுகளில் நடைபெற்று வருகின்றன.

இதன் 32ஆவது லீக் போட்டியில் குழு ஏ யைச் சேர்ந்த அவுஸ்திரேலிய - இலங்கை அணிகள் நேற்று சிட்னியில் பலப்பரீட்சை நடத்தின.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா அணி 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 376 ஓட்டங்கள் என்ற கணிசமான மொத்த ஓட்ட எண்ணிக் கையை பெற்றது.

ஆஸியின் துடுப்பாட்டத்தில் அதிரடி வீரர் மக்ஸ்வெல் 53 பந்துகளில் 102 ஓட்டங்கள் குவித்து அசத்தினார். இச்சதமானது அவுஸ்திரேலியா சார்பில் பெறப்பட்ட வேகமான சதமாக பதிவானதுடன், உலகக் கிண்ண வரலாற்றில் பெறப்பட்ட 2ஆவது வேகமான சதமுமாகியது. தவிர ஸ்மித் 72, கிளார்க் 68, வோட்சன் 67 ஓட்டங்களையும் எடுத்தனர்.

377 ஓட்டங்கள் என்ற கடின வெற்றியிலக்கை நோக்கி களமிறங்கிய இலங்கை அணி, டில்சானின் அதிரடியான ஆரம்பமும், சங்கக்காரவின் துடுப்பில் இருந்து பெறப்பட்ட 3ஆவது தொடர்சியான சதத்தின் உதவியுடனும், வெற்றியிலக்கை துணிவுடன் எதிர் கொண்டது.

மத்தியவரிசையிலும் அதிரடியைத் தொடர்ந்த இலங்கை அணி சார்பில் சண்டிமல் 22 பந்துகளில் அரைச் சதம் அடித்த அசத்திய போதிலும் போட்டியின் இடையே அவருக்கு ஏற்பட்ட காயம் வெற்றியை இலங்கை அணியிடம் இருந்து அவுஸ்திரேலிய அணி பக்கம் நகர்த்தியது.

இறுதியில் இலங்கை அணி 46.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 312 ஓட்டங்களை எடுத்தது.

துடுப்பாட்டத்தில் சங்கக்கார 104, டில்சான் 62, சண்டிமல் 52 ஓட்டங்களை எடுத் தனர்.

பந்துவீச்சில் அவுஸ்திரேலிய அணி சார்பில் போல்க்னர் 3, ஜோன்சன், ஸ்ரார்க் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப் பற்றினர்.

போட்டியின் நாயகனாக ஆஸியின் மக்ஸ்வெல் தெரிவானார்.

## சங்கா சாதனை



சிட்னியில் நேற்று நடைபெற்ற அவுஸ்திரேலிய அணியுடனான ஆடடத்தில் சதம் குவித்த சங்கக்கார, 14 ஆயிரம் ஓட்டங்களை கடந்து சாதனை படைத்துள்ளார்.

இதன்மூலம் சர்வதேச ஒருநாள போட்டிகளில் அதிக ஓட்டங்கள குவித்த வீரர்கள் வரிசையில் சச்சினுக்கு அடுத்ததாக 2ஆவது இடத்தில் உள்ளார்.

மேலும் நேற்றைய போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 376 ஓட்டங்களை குவித்தது.

இதைத் தொடர்ந்து களமிறங்கிய இலங்கை அணி சிறப்பாக விளையாடி ஓட்டங்களை குவித்தது. இதில் பொறுமையாக ஆடிய சங்கக்கார தனது 24ஆவது சதத்தை அடித்தார். இவர் 107 பந்துகளில் 104 ஓட்டங்கள் குவித்து அசத்தினார்.

பங்களாதேஷ் மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கு எதிராக இந்த உலகக் கிண்ணத்தில் ஏற்கெனவே சதம் அடித்திருந்த சங்கக்காரவுக்கு இது 3ஆவது சதமாகும்.

இதன்மூலம் உலகக் கிண்ணத் தொடரில் தொடர்ச்சியாக 3 முறை சதம் அடித்த முதல் வீரர் என்ற சாதனையையும் படைத்தார்.

மேலும் இந்த உலகக் கிண்ணத்தோடு சர்வதேச ஒருநாள் போட்டிகளிலிருந்து தான் ஓய்வு பெறுவதாக சங்கக்கார ஏற்கெனவே அறிவித்திருந்த நிலையில்,

வரும் ஓகஸ்ட் மாதம் இந்தியா சுற்றுப் பயணத்துடன் டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து தான் ஓய்வு பெறப் போவதாக சங்கக்கார அறிவித்துள்ளார்.

## நாடாளு...

நிறைவேற்று அதிகாரத்தை ஒழிக்க நாடாளுமன்றத்தில் போதிய ஆதரவு கிடைக்கவில்லை என்றால், அதற்காக மக்களின் ஆணையை பெற்று பெரும்பான்மை பலத்துடன் அரசாங்கத்தை அமைப்பதற்காகவே தேர்தலுக்கு செல்வது தொடர்பில் ஜனாதிபதியின் கவனம் திரும்பியுள்ளது.

இந்த தீர்மானத்திற்கு அமைய ஜனாதிபதி உடனடியாக நாடாளுமன்றத்தை கலைத்தால், 58 புதிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஓய்வூதியம் கிடைக்கும் வாய்ப்பை இழப்பர். இதன்மூலம்பெருந்தொகை பணத்தை அரசாங்கம் மீதப்படுத்த முடியும் என திறைசேரி சுட்டிக் காட்டியுள்ளது.

நாடாளுமன்றம் ஏப்ரல் 23ம் திகதிக்கு முன்னர் கலைக்கப்பட்டால, நாமல் ராஜபக்ஷ, திலும் அமுனுகம, உதித்த லொக்கு பண்டார, தயாஸ்ரீத திசேரா, லொஹான் தளுவத்த, சனத் ஜயசூரிய, திலங்க சுமதிபால உட்பட முதல் முறையாக நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டவர்கள் ஓய்வூதியம் கிடைக்கும் வாய்ப்பை இழப்பார்கள்.

இங்கிலாந்து சென்றுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நாடு திரும்பியதும், இது சம்பந்தமாக பிரதமர் ரணில் விக்ரமசிங்க, எதிர்க் கட்சித் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா, தூய்மையான நாளை அமைபபின் ஸ்தாபகர் அத்துரலியே ரத்ன தேரர், மின்வலு எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க ஆகியோரை சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடத்த உள்ளதாக தெரிய வருகிறது.

அரசியலமைப்பில் திருத்தங்களை மேற்கொள்வதன் மாத்திரமே மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியாக தெரிவு செய்ய 62 லட்சம் மக்கள் வழங்கிய வாக்குகளை முழுமையாக பயன்படுத்த முடியும்.

இதற்கு எதிர்க்கட்சிகள் தடையாக இருந்தால், புதிய ஜனாதிபதி வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்காக பொதுத் தேர்தலுக்கு சென்று பெரும்பான்மை பலத்துடன கூடிய அரசாங்கத்தை அமைப்பதே ஒரே மாற்று வழி என சட்ட ஆலோசகர்கள் ஜனாதிபதியிடம் சுட்டிக் காட்டியுள்ளனர்.

நியாயமான சமூகத்திற்கான மக்கள் அமைப்பு மற்றும் தூய்மையான நாளை அமைப்பு ஆகியவற்றின் யோசனைகளை அடிப்படையாக கொண்டு நிறைவேற்று அதிகாரத்தை ஒழிக்க மக்கள் ஆணையை பொதுத் தேர்தல் மூலம் பெற, பொதுக் கட்சி ஒன்றின் ஊடாக புதிய மக்கள் சக்தியை கட்டியெழுப்பும் வேலைத்திட்டம் ஒன்று செயற்படுத்தப்பட உள்ளதாக தெரியவருகிறது.

(எ-1)

## சீனத்...

மாறும், அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்த தகவலை கொழும்பிலுள்ள சீன தூதரகம் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் கூறியுளளது.

இரு நாடுகளுக்கும் நன்மை தரக கூடிய உடன்பாடுகளை இலங்கை தொடர்ந்து மதித்து நடக்க வேண்டும் என்றும் சீனத் தூதுவர் கேட்டுக் கொண்டுள்ளதாகவும் சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

முன்னதாக, கடந்த புதன்கிழமை நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் கொழும்புத் துறைமுக நகர திட்டத்தை உடனடியாக இடைநிறுத்த தீர்மானம் எடுக்கப்பட்டது.

எனினும், வெள்ளிக்கிழமை வரை தொடர்ந்து கட்டுமானப்பணிகள் இடம்பெற்று வந்தன.

எனினும், சீன நிறுவனம் விடுத்த செய்திக் குறிப்பில், தாம் பணிகளை இடைநிறுத்துவதாகவும இலங்கை அரசாங்கத்துக்கு முழு ஒத்துழைப்பு அளிப்பதாகவும், தெரிவித்திருநதது.

நேற்று முன்தினம் முதல் துறைமுக நகர நிர்மாணப் பணிகள் நிறுததப்பட்டுள்ளதுடன் அண்மைக காலமாக எந்த நேரமும் பரபரப்பாக காணப்பட்ட காலி முகத்திடல் பகுதி தற்போது வெறிச்சோடிக் காணப் படுகிறது. (எ-1)

## தீ விபத்தில்...

ஞாயிற்றுக்கிழமை இரவு 9.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. மின்னொழுக்கே தீ விபத்துக்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது. சம்பவ இடத்துக்கு பொலிஸார் விரைந்துள்ளனர். (எ-1)

## இலங்கை...

த்துக்கும் செல்லவுள்ளமையை அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதேவேளை 28 வருடங்களின பின்னர் இலங்கைக்கு உத்தியோக பூர்வமாக விஜயம் மேற்கொள்ளும் இந்தியப் பிரதமராக மோடி, எதிர் வரும் 13ஆம் திகதி இலங்கை வருகிறார். (எ-1)

## மைத்திரி...

இந்நிலையில் தேர்தல் நிலைப்பாடு குறித்தும் அது தொடர்பில் தமது பங்களிப்பு குறித்தும் வெளிப்படையாக அறிவிக்க வேண்டும் என பல்வேறு தரப்பினரால்வலியுறுத தப்பட்டு வருவதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

இருந்த போதிலும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஐக்கிய தேசிய கட்சிக்கு பாதகம் ஏற்படும் வகையிலான முடிவை எடுக்க மாட்டார் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நம்பிக்கை வெளியிட்டுளளார என்றும் கூறப்படுகின்றது. (எ-1)

## விமான...

பங்கேற்கவில்லை என்று இலங்கையின் ஆங்கில இதழ் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

ஆங்கில செய்தித்தாளின் தகவல்படி 9 பேர் மாத்திரமே மைத்திரிபால சிறிசேன, முன்னாள ஜனாதபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும முன்னாள் இராணுவ தளபதி சரத் பொனசேகா ஆகியோரின்படங்களை தாங்கிய வண்ணம் இந்த ஆர்பபாட்டத்தில் பங்கேற்றிருந்தனர்.

இதேவேளை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஒருவர் கருத்துரைக்கையில், ஆர்ப்பாட்டத்தை தவிர்ப்பதற்காக இலங்கை ஜனாதிபதி விமான நிலையத்தின் மூன்றாம் பின் கதவால் தப்பிச்சென்றதாக தெரிவித்துள்ளார். (எ-1)

## அரசியல்...

பிரதமரால், நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளுக்கு அண்மையில் வழங்கப் பட்டதாக கூறப்படுகிறது.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் அரசியலமைப்பு விவகாரம் தொடர்பான குழு, சட்டமூலத்தை ஆராய்ந்து, கட்சியின் யோசனைகளையும் திருத்தங்களையும் அடுத்த வாரத்திற்குள் பிரதமரிடம் கையளிகக நடவடிக்கை எடுக்கப்படும் என அந்தக் கட்சியின் தேசிய அமைப்பாளர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

அதேவேளை அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை அவசர சட்ட மூலமாக கொண்டு வராது, அதனை ஆராய இரண்டு வார கால அவகாசம் வழங்க வேண்டும் என மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவரான தினேஷ் குணவர்தன கோரிக்கை விடுத்துள்ளார். (எ-1)

## மகிந்த...

கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கில் இருபதாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கடந்த காலங்களில் இராணுவத்தினாலும் அதன் ஒட்டுக் குழுககளினாலும் கடத்தப்பட்டுள்ளனர காணாமல் போகச் செய்யப்பட்டுளளனர். இவர்கள் அனைவரும் பலரது முன்னிலையில் சரணடைநதுள்ளனர் மற்றவர்கள் பெற்றோர்கள் முன்னிலையிலும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு காணாமல் போனவர்களின் நிலை இருக்க பிரதமர் ரணில் விக்கிரமசிங்க காணாமல் போனவர்கள் என்று யாரும் வடக்கு கிழக்கில் இல்லை எனவும் அவ்வாறு இருந்தாலும்அவர்கள்வெளிநாடுகளிற்கு சென்றிருக்கலாம் அல்லது கொல்லப்பட்டிருக்கலாம் என கூறியுள்ளார்.

பிரதமரின் இக்கருத்து ஒரு பொறுப்புள்ள ஒருவரின் கருத்தாக இல்லாமல் வீதியால் செல்பவனின் கருத்தாகவே அமைந்துள்ளது. இவர்கள் இவ்வாறு கூறுவதற்காக எமது மக்கள் இவர்களிற்கு வாக்களிக்கவில்லை. இவ்வாறு கூறிக்கொளபவர்கள் தமிழ் மக்களின் ஆதரவுகளினையும் எதிர்பார்க்க கூடாது

முன்னாள் ஜனாதிபதி இவ்வாறு தமிழர் தரப்பில் பொறுப்பற்ற விதத்தில் செயற்பட்டமையால்தான் அவரை தமிழ் மக்கள் தூக்கிஎறிந்தனர். அதேபோல் தற்போதைய அரசினையும் மக்கள் தூக்கி எறிவதற்கு காலம் செல்லாது. ஆகவே பொறுப்புடன் புதிய அரசு செயற்பட வேண்டும்.

எமதுபோராட்டங்கள்உண்மையினை கண்டறியும்வரையிலும்எமது காணாமல் போன உறவுகள் மீண்டும் கிடைக்கும் வரையிலும் எமது போராட்டங்கள் தொடரும் எமது மக்களின் கோரிக்கைகளினை சர்வதேசம் உணர்ந்து கொண்டு செயற்பட வேண்டும் என்றார் சுரேஷ பிரேமச்சந்திரன். (எ-4)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# லண்டன்...

நலவாய அமைப்பின் தற்போதைய நிர்வாகத் தலைவரான இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது இரண்டாவது வெளிநாட்டு விஜயமாக நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை லண்டன் சென்றடைந்தார்.

இந்த விஜயத்தின்போது, பொதுநலவாய அமைப்பின் பிரமுகர்கள் மற்றும் பிரிட்டிஷ் அரச பிரதிநிதிகள் உள்ளிட்ட பலதரப்பட்டவர்களையும் மைத்திரிபால சிறிசேன சந்தித்து பேச்சுநடத்தவுள்ளார்.

பொதுநலவாய தினத்தை ஒட்டி லண்டன் வெஸ்ட்மின்ஸ்டர் அபே தேவாலயத்தில் இன்று திங்கட்கிழமை நடக்கவுள்ள சிறப்பு ஆராதனைகளில் இலங்கை ஜனாதிபதி கலந்துகொள்ளவுள்ளார்.

அதன்பின்னர் மால்பரோ ஹவுஸ் என்று அழைக்கப்படும் பொது நலவாய அமைப்பின் தலைமையகத்தில் நடக்கவுள்ள நிகழ்வுகளிலும் மைத்திரிபால சிறிசேன கலந்துகொள்வார் என்று அவரது ஊடகப்பிரிவு இயக்குநர் தர்மசிறி பண்டார கூறினார்.

நாளை 10-ம் திகதி பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூனை சந்தித்து பேச்சுநடத்தவுள்ள இலங்கை ஜனாதிபதி இருதரப்பு பிரதிநிதிகள் பலரையும் சந்திக்கவுள்ளார்.

அன்றைய தினமே மாலை, பிரிட்டனில் வாழும் இலங்கையர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்புகளைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட பிரதிநிதிகளையும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சந்திக்கவுள்ளதாக அவரது ஊடகப்பிரிவு இயக்குநர் கூறினார்.

இறுதியாக, வரும் 11-ம் திகதி பிரிட்டிஷ் மகாராணி இரண்டாம் எலிசபெத் அளிக்கும் இரவு விருந்துபசாரத்திலும் ஜனாதிபதி உள்ளிட்ட பிரமுகர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

ஒரு இளமையான பொதுநலவாய (A Young Commonwealth) என்கின்ற தொனிப்பொருளில் இம்முறை நடக்கும் பொதுநலவாய தினம், ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதத்தின் இரண்டாவது திங்களன்று இடம்பெறுகின்றமை குறிப்பிடப்படுகின்றது. (எ-1)


## பதவி வெற்றிடம்

எதிர்காலத்தை வெற்றிகொள்ள நிரந்தர தொழில்கள் சர்வதேச முன்னணி நிறுவனத்தின் புதிய கிளைகளுக்கு ஆர்வமிக்க 18 இளைஞர், யுவதிகள் தேவை.

- தகைமை:-O/L ▪வயதெல்லை:-18-35
- தங்குமிடம் & உணவு வசதிகள் இலவசம்
- சம்பளம் 15,000/= - 18,000/=

மன்னார், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய பிரதேசங்களில் உள்ளோர்க்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(சீ-317)

**தொடர்புகளுக்கு:-0771363797, 0775566224, 0214545634**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### திரு.P.K சிவலிங்கம் M.Sc அவர்கள்

10.03.2015 அன்று ராஜகீய வித்தியாலயத்தில் இடம்பெறும் பதவி உயர்வு வழங்கும் நிகழ்வில் அதிபர்சேவை வகுப்பு -I (SLPS-I) ற்கு, பதவி உயர்த்தப்பட்டு கௌரவிக்கப்படும் எமது கல்லூரி முதல்வர் திரு.P.K.சிவலிங்கம் அவர்களை பாராட்டுவதோடு அவர் மேலும் பல உயர்வுகளைப் பெற்று சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:-**

**ஆசிரியர்கள், ஊழியர் நலன்புரிக் கழகம்**
**வித்தியானந்த கல்லூரி, தேசிய பாடசாலை.**

(சீ-314)

## 2015இல் 3 இலட்சம் பேருக்கு நிரந்தர குடியுரிமை வழங்கும்*

SIKARAM Education Abroad Work, Migration & Visa Solutions

**கனடா EXPRESS ENTRY VISA**
தொழில்வாய்ப்புடன் நிரந்தர குடியுரிமை

**Degree/Diploma with Minimum One Year Work Experience உள்ள**

**Doctors, Engineers, Accountants, Veterinarians, Nurses, Pharmacists, Medical Technicians, University Lecturers, Teachers, Judges/Lawyers, IT Professionals, Sports Managers/Athletes/ Coaches/ Referees, Managers in Agriculture/Horticulture/Aquaculture, Sales/Customer Care Managers/Supervisors உள்ளிட்ட**

**100க்கும் மேற்பட்ட தொழில்நிலைகள்**
கனேடிய அரசாங்கத்தின் அங்கீகாரம் பெற்ற முகவர் ஊடான சேவை

மேலதிக விபரங்களுக்கு பாருங்கள்

**www.sikaram.lk**

**FREE Assessment** info@sikaram.lk என்ற மின்னஞ்சலுக்கு உங்கள் சுயவிபரக்கோவையை அனுப்பி விண்ணப்பிப்பதற்கான தகுதியை அறிந்துகொள்ளுங்கள்.

* நிபந்தனைகளுக்கு உட்பட்டது

(சீ-313)

எந்தவொரு நாட்டுக்குமான எந்தவகை விசா சேவையையும் வழங்கும்
**Sikaram (Pvt) Ltd.,**
275-2/1 & 2/2, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்
(வைத்தியசாலை பின்புறம்) Tel: 0773616798 / 021 222 00 11

**முற்பதிவு அவசியம்**


**பாடசாலையிலிருந்து விலகிய மாணவர்கள் தொழில் வாய்ப்பற்ற இளைஞர்கள் மற்றும் துறைசார்ந்த பிரிவில் கடமையாற்றும் இளைஞர்களுக்கான ஓர் அரிய வாய்ப்பு!!!**

## மின்சாதனங்கள் சீர்செய்தலும் மீள்சுற்றுக்குமான பயிற்சி.

வட மாகாணத்திலுள்ள தொழில்நுட்பவியலாளர் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்தல் என்ற அடிப்படையில் இளைஞர் யுவதிகளிற்கான தொழில்நுட்பத்திறன் விருத்திப் பயிற்சியூடாக உள்ளூர் வளங்களை பயன்படுத்தி ஈடுபடக்கூடிய தொழில்வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்தும் வகையில் வட மாகாண தொழிற்துறைத் திணைக்களம் வேலைவாய்ப்பிற்கான தொழில் நுட்பத்திறன் விருத்திப் பயிற்சியை தொடர்ந்து வழங்கிவருகின்றது. அவ் வகையில் மேற்படி பயிற்சியானது யாழ்ப்பாணத்தில் இரு பிரிவாக நடைபெறவுள்ளது.

**பிரிவு: I (வார நாட்கள் பயிற்சி)**

நாள் ஒன்றிற்கு ரூபா 200 ஊக்குவிப்புடன் கூடிய மூன்று மாதகால இலவச தொழிற் பயிற்சி

**பயிற்சியில் இணைவதற்கான தகைமைகள்:**

- வயதெல்லை:- 18-35 வருடங்கள்
- கல்வித் தகைமை:-O/L சித்தியடைந்திருத்தல் வேண்டும்
- தொழில் செய்வதற்கு ஆர்வமும் விருப்பமும் உள்ளவராக இருத்தல் வேண்டும்

**பிரிவு: II (சனி மற்றும் ஞாயிறு)**

மூன்று மாத கால இலவச தொழிற்பயிற்சி

**பயிற்சியில் இணைவதற்கான தகைமைகள்.**

- துறைசார் தொழில் புரிபவராக இருத்தல் வேண்டும்
- துறைசார் தொழில் புரிவதற்கான உறுதிப்படுத்தப்பட்ட கடிதம்

கற்கை நெறியின் பின்னர் தொழில் தகைமைச் சான்றிதழ் வழங்கப்படும். பயிற்சி நெறி எதிர்வரும் பங்குனி மாதம் 24 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதால் பயிற்சி பெற விரும்புபவர்கள் தங்களது பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தினை பங்குனி மாதம் 18 ஆம் திகதிக்கு முன்பாக பணிப்பாளர், தொழிற்துறைத் திணைக்களம், வட மாகாணம், கைதடி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அல்லது ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் உள்ள தொழிற்துறைத் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் ஊடாகவும் மேற்குறிப்பிட்ட விபரங்களை உள்ளடக்கிய தங்களது சுயவிபரத்துடன் கூடிய விண்ணப்பத்தினை அனுப்பி வைக்கவும். பயிற்சியாளர்கள் நேர்முகத்தேர்வின் மூலம் தெரிவு செய்யப்படுவார்கள். கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் அடிப்படையில் பயிற்சிக்காக இடம் தீர்மானிக்கப்படும். மேலதிக விபரங்களை www.np.gov.lk என்ற இணையத்தளத்தில் பார்வையிடலாம்.

குறிப்பு:-விண்ணப்பதாரர் பயிற்சி நெறியின் பெயரை தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடவும்.

**தொடர்புகளுக்கு:-**

1.பணிப்பாளர்,
தொழிற்துறைத் திணைக்களம்,
வட மாகாணம், கைதடி, யாழ்ப்பாணம்.

2.அபிவிருத்தி உத்தியோகத்தர்,
தொழிற்துறைத் திணைக்களம்,
பிரதேச செயலகம்.

தொலைபேசி இல:
021 320 2413 } தலைமை அலுவலகம்
021 753 8381 }
021 222 3546-யாழ்ப்பாணம் மாவட்ட அலுவலகம்

(சீ-307)


## Digital இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை

விஷேட கட்டண சலுகைகள்



- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுபப்பிட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்

WESTERN UNION MONEY TRANSFER

மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்

62/16 ஸ்ரான்லி வீதி
(சம்பத்வங்கி முன்பாக)
யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு -
021 753 8330, 0777 151 101

(C-306)

## வெளிநாடுகளிற்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

வடமாகாணத்தின் பொதிகள் சேவை துறையின் முன்னோடிகள்

உங்கள் பெறுமதி மிக்க பொதிகளுக்கும் பணத்திற்கும் **100%** உத்தரவாதம் எம்மிடம் மட்டுமே

**அருள்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்**
இல.10, கஸ்தூரியார் வீதி, (புதிய மாநகரசபை கட்டடத்தொகுதி)
யாழ்ப்பாணம். 021 222 3536

- இலட்சக்கணக்கான வாடிக்கையாளர்களைக் கொண்டு
- ஆகாய, கடல் மார்க்கமாக
- அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மையுடன்
- மறைமுக கட்டணம் ஏதுவுமின்றி
- முக்கிய ஆவணங்கள், மிளகாய்த்தூள், கருவாடு, எண்ணெய் வகைகள், அனுமதிக்கப்பட்ட மருந்துப்பொருட்கள், உடுபுடவைகள், பால்மா வகைகள் என அனைத்துப்பாவனைப் பொருட்களையும்,
- 3-4 நாட்களில் உலகின் எப்பாகத்திற்கும் குறித்த முகவரியில் ஒப்படைக்கின்றோம்.



வெளிநாடுகளிற்கான பொதிகள் சேவையை வழங்கிக்கொண்டிருக்கும் முன்னணி நிறுவனம்

(C-315)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.03.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org